UNIVERSAL
LIBRARY
OU_208024
UNIVERSAL
LIBRARY

Tm 894.8113 Tm 790
R16C

Ramasami Pulaver.

Soolamani, Urai nadai
1952.

OUP—552—7-7-66—10,000

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. Tm 894.8113 Accession No. Tm 790.

Author R16C

Ramasami Pulavar.

Title Soolamani; Urai nadai.

This book should be returned on or before the date last marked below. 1952.

கழக வெளியீடு : ௲௧௮.

# சூளாமணி

## உரைநடை

கருப்பக்கிளர்
சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி : சென்னை-1.

First Edition: November, 1949
Second Edition: September, 1952

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

தமிழ்மொழி இலக்கியவளம் நிறைந்தது. சொல்லாழமும் பொருட்செறிவும் மிக்க அவ்விலக்கியங்களை, மக்கள் எளிதாகப் பயின்று இன்புறுவதற்கு ஏற்றன செய்யவேண்டுவது, இதுபோது கட்டாயமாகின்றது. தமிழ் மக்களனைவரும், தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்கள் அனைத்தையுந் தங்கு தடையின்றி, மகிழ்வோடு கற்பதற்கு ஏற்றவகையில், அவற்றின் கருத்துக்களைச் செம்மையான உரைநடையில், அவர்கட்கு வழங்கவேண்டும். நூல்கள் மக்களிடையே பெரிதும் பரவி, அவர்களின் அணுக்கமான தொடர்பைப் பெற்றாலன்றி, அவற்றின் கருத்துக்கள் மக்களிடையே நிலவி அவர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தவும், இனிதாக்கவும் இயலாது.

தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்கான பலவித அரிய நூல்களையெல்லாம், ஒல்லும் அளவும் வெளியிடக் கழகம் உறுதிகொண்டு, இதுவரை தமிழ் இலக்கிய இலக்கண உரைநடை நூல்கள் பலவற்றை வெளியிட்டுத், தமிழ்நாட்டின் நாகரிக விளக்கத்துக்கும், வருங்கால முன்னேற்றத்துக்கும், ஏற்றனவெல்லாம் செய்தலே தன ஆள்வினையாகக் கொண்டு பணியாற்றி வருகின்றது. அவ்வகையில் நூற்போக்கின் தொடர்புகெடாத வகையிலும், நூலின் அழகுடைய பகுதிகள் விடாத வகையிலும், சிறந்த இலக்கிய நூல்களுக்கு உரைநடைப் பதிப்புக்கள் சில, வெளியிடவேண்டுமென்று எண்ணினோம்.

முதற்கண் தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணத்தை, உரைநடையாக்கி வெளியிட்டோம். இப்போது சமணசமயப் பெரும்புலவர் பெருமானாகிய தோலாமொழித் தேவரால் ஆக்கப்பெற்றதும், ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றானதுமாகிய சூளாமணியின் உரைநடை நூலை வெளியிடுகின்றோம்.

இந்நூலினை எம் கருத்துக்கிணைய, மூலநூலின் இலக்கிய நயங்களும், பொருள் நலங்களும், சொல்லழகுங் கெடாதவண்ணம், இனிய ஆற்றொழுக்கான தமிழ் உரைநடையில், செம்மையுற ஆக்கித் தந்துதவியவர்கள் கருப்பக்கிளர் திரு. **சு. அ. இராமசாமிப் புலவர்** அவர்களாவர். அவர்கட்கு எங்கள் நன்றி.

தமிழ்மக்கள் இந்நூலினுக்கும், இதைத்தொடர்ந்து வெளியிடப்பெறும் இந்நூல் வரிசை இயன்ற பிறநூல்களுக்கும், தக்க ஆதரவளித்துத் தாமும் பயன்பெறுவதுடன், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உதவ முன்வருவார்கள் என நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

நமது செந்தமிழ் மொழிக்கண் வழங்கும் பழந்தமிழ் நூல்களிற்பல, பலவாறு தொகுக்கப்பெற்றும் பிரிக்கப் பெற்றும் விளங்குகின்றன. அவைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப் பியம் முதலியவைகளாம். ஐம் பெருங்காப்பியங்களின் நூல்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம் என்பதைப் பலரும் நன்குணர்வர். ஐம் பெருங்காப்பியங்கள் என்னுஞ் சொல்லைக் கேட்ட அளவில், ஐஞ் சிறுகாப்பியங்களும் உளவோ என்னுங் கேள்வி தானே தோன்றும் ஐஞ்சிறு காப்பியங்கள் யாவை யென்பதைப் பலரும் அறியார். யசோதரகாவியம், சூளாமணி, நாககுமாரகாவியம், உதயண காவியம், நீலகேசி என்பன ஐஞ் சிறுகாப்பியங்களாகும். ஐம் பெருங்காப்பியங்களில் சில இறநதொழிந்தாங்கு ஐஞ் சிறுகாப்பியங்களிலும் சில மறைந்துள்ளன.

ஐஞ் சிறுகாப்பியங்களுள் ஒன்ருகிய சூளாமணி பல்லாண்டுகட்கு முன்னர், சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்களால் ஒரு பதிப்பு வெளியாயது. முதற்கண் சூளா மணியின் பெருமையை அறிஞர்கள் நன்குணாந்துகொள்ள வில்லையாயினும நாளடைவில் உணர்நது களிக்கலாஞர்கள், சிலர் உரையுடன் வெளிப்படுத்த முயன்ருர்கள். ஆயினும் அம்முயற்சி அந்நாளில் நின்றுவிட்டது.

தற்காலம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித்துறையிற் பணிபுரிந்து நிற்கும், திருமிகு ஒளவை. துரைசாமிப்பிள்ளையவர்கள் சூளாமணியின் சொன்னயத்தையும் பொருணயத்தையும் இனிது துய்த் துக், கதைத் தொடர்பான உரை நடை, அரும்பதவுரை, பாட்டு நுதல்பொருள் முதலியவைகளுடன் சூளாமணிச் சுருக்க நூல் ஒன்றினைக், கழக வாயிலாக வெளிப்படுத்தி

னார்கள். இளமாணவர்க்கெனத் திவிட்டன் எனவொரு சிறுகதை நூலும் கழகவழி வெளிவந்துள்ளது. சிலர் உரைநடையாக எழுதியும் வெளியிட்டார்கள்.

சூளாமணி நூல் ஐம் பெருங்காப்பியங்களைப்போன்றே எல்லாநலன்களும் இனிதமையப்பெற்றது. ஒன்பான்வகை இனிமைகளும் (நவரசங்களும்) நன்கு செறியப்பெற்றது. நூலின் சொற்செறிவும் பொருட்செறிவும் கற்பாருக்குக் களிபேருவகையளிப்பன. இவ்வரிய பெரிய நூலை இயற்றியவர் சமணசமயப் பெரியார்களில் ஒருவராவர். அவருடைய வரலாறு முதலியன மறைந்துவிட்டன. 'தோலா' என்னுஞ் சொல்லை அப்பேரறிஞர் தமது நூலிற் சேர்த்து வைத்தமையின் அவருடைய பெயர் தோலா மொழித் தேவர் என்று வழங்குகின்றது. சூளாமணி சொல்லும் செய்தி இன்னதென்பதைத், தமிழறிஞர்களிற் கூடப் பெரும்பாலார் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை. சமண சமய நூல்கள் பெரும்பாலும் இறுதியில் துறவுச் செய்தியையே வற்புறுத்திக் கூறுவனவாகும். சூளாமணியும் அந்நிலையில்தான் அமைந்துள்ளது.

இப்பொழுது வெளிவரும் இவ் வுரைநடை நூல், தற்காலத்திற்கேற்ற வகையில், இன்றியமையாச் செய்திகளை யெல்லாம் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்நூல் வடமொழிச்சொற்கள் பெரிதும் நீக்கப்பெற்றுத் தூய செந்தமிழில் அமைக்கப்பெற்றிருக்கிறது. உரைநடைநூலுக்குத் தக்க உரைநடையாய்க் கற்பார்க்கு இன் பூட்டுதலை ஒவ்வொருவரும் நன்குணரலாம். சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்கள் ஒவ்வொன்றிற்கும் பல உரைநடைநூல்கள் எழுந்தாற்போன்று சூளாமணிக்கு எழவில்லை. எளியநடையில் இனிய முறையில் அமைந்துள்ள இந்நூலை ஒவ்வொருவருங் கற்றுக் களிக்கவேண்டியது கடமையாகும்.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| க. | சுரமை நாடு | 1 |
| உ. | போதனமா நகர் | 4 |
| ௩. | விசய திவிட்டர்கள் | 7 |
| ௪. | இரதநூபுர நகர் | 11 |
| ௫. | திருமணப் பேச்சு | 16 |
| ௬. | மரீசி மணத்தூது செல்லல் | 29 |
| ௭. | திவிட்டன் அரிமாவை அழித்தல் | 41 |
| ௮. | திவிட்டன் திருமணம் | 60 |
| ௯. | போரும் முடிசூடுதலும் | 76 |
| க0. | மக்கட்பேறும் மணச்செயலும் | 106 |
| கக. | அறவுரை கேட்டலும் துறவறமும் | 120 |
| கஉ. | சூளாமணியாதலும் வீடுபேறடைதலும் | 128 |



திவிட்டன் சிங்கத்தின் வாயைப் பிளத்தல்

[பக்கம் 56.]

# சூளாமணி

## கடவுள் வாழ்த்து

*வென்றான் வினையின் தொகையாகி விரிந்து தன்கண்*
*ஒன்றாய்ப் பரந்த உணர்வின்ஒழி யாது முற்றும்*
*சென்றான் திகழும் சுடர்சூழொளி மூர்த்தியாகி*
*நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கிநின்றார்.*

## க. சுரமைநாடு

சீர்திகழ்ந் திலங்கும் பரத கண்டத்தில் சுரமை என்னும் பெயரினையுடைய நாடு ஒன்று உள்ளது. அந்நாடு கோடிக்குன்றம் என்னும் மலையை எடுத்தவனும், திருமாலின் கூறாக நிலவுலகில் தோன்றியவனுமாகிய திவிட்டன் என்னும் அரசனால் ஆளப்பெற்றது. பலவகைச் சிறப்புக்களாலும் வித்தியாதரர் உலகத்தைப்போலச் சிறந்தது. எவ்வகைப்பட்ட செல்வ நலங்களும் இனிது அமையப் பெற்றது.

### சுரமை நாட்டின் சிறப்பு

அந்நாட்டின் எல்லா இடங்களிலும் நீர்வளங்கள் நிறைந்து விளங்கும். நீர்நிலைகளில் தாமரைக்கொடியானது மிகுதியாக மண்டி மங்கையர் முகங்களைப்போல மலர்ந்திருக்கும். தடாகங்களில் கயல்மீன்கள் மாதர்களின் கண்களைப்போல உலவித்திரியும். பொழில்களில் அன்னப் பறவைகள் அழகிய மாதர்களைப்போல நடந்து திரியும். வயலிடங்களி லெல்லாம் மள்ளப் பெண்களின் இனிய குரல்களே நிரம்பியிருக்கும். ஊர்களிலேயுள்ள தெருக்களிலும் இல்லங்களிலும் மாதர்களின் காற்சிலம்பொலியே மிகுந்தொலிக்கும். பொழிலிடங்களிலெல்லாம் நாகணை

வாய்ப் பறவைகளும் கிளிகளும் வண்டுகளும் பாடும் பாட்டொலி மிகுந்திருக்கும். மாடங்களிலே மங்கையர் பாடும் யாழொலி நிறைந்திருக்கும்.

## குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலத்தில் முருகனுக்குச் செய்யும் வழிபாட்டொலியும், அருவியின் வீழ்ச்சியொலியும், யானைகளின் பிளிற்றொலியும், மற்றும் பலவகை யொலிகளும் ஒன்றாகச் சேர்ந்து, வானும் அதிரும்படி நிறைந்திருக்கும். முகிற் குழாங்கள் இடித்து முழங்கும்போதெல்லாம் மயிற்குழாங்கள் களித்துத் தம் தோகையை விரித்து ஆடும். குன்றத்தின் எல்லாவிடங்களிலும் பலவகை மலர்கள் மலர்ந்து தேனைச் சொரிந்துகொண்டிருக்கும், சந்தன மரங்களின் அண்மையில் களிற்று யானைகள் தம்முடைய உணவினைத் தின்றுவிட்டு உறங்கும். அப்போது அவைகளின் மதநீரிலே வண்டுக் கூட்டங்கள் வந்து மொய்க்கும். அவ்வண்டுக் கூட்டங்களைப் பிடியானைகள் காந்தட்குலைகளால் விரட்டியடித்துக்கொண்டிருக்கும்.

## முல்லை நிலம்

முல்லை நிலத்தில் இடையர்களின் புல்லாங் குழல் ஒலி எங்கும் நிறைந்திருக்கும். அவர்கள் ஏறு தழுவும் முழக்கம் ஒருபால் இனிது முழங்கும். கொன்றை குருந்து முதலிய மலர்களின் மணம் வண்டுக் கூட்டங்கள் சென்று தேனைக் கவரும்படி யாண்டும் பொருந்தியிருக்கும். மலர்கள் பொழியுந் தேன்மழையால் யாண்டும் புல் மிகுந்து ஆன் கூட்டங்கட்கு நல்ல உணவாகும்.

## மருத நிலம்

மருத நிலத்தில் ஓரிடத்தில் ஆடன் மகளிரின் மத்தளவொலி மிகுந்திருக்கும். ஓரிடத்தில் சங்குக் கூட்டங்களின் ஒலி மிகுந்திருக்கும். ஓரிடத்தில் மணமுரசுகளின் மங்கலவொலி மிகுந்திருக்கும். வயலிடங்களில் உழவர்கள் செய்யும் பலவகை யொலி மிகுந்திருக்கும். நெய்தல்

தாமரை முதலியவற்றில் இருந்து தேன் ஊற்றெடுத்து வயல்களிற் சென்று பாயும்.

### நெய்தல் நிலம்

நெய்தல் நிலத்திலே வலைஞர்கள் மீன் பிடிக்கும் ஒலியும், வலைச்சியர் மீன் காயவைக்கும் ஒலியும், வலைச்சிறுவர்களின் நீர் விளையாட் டொலியும் கடல் ஒலியினும் பல மடங்கு மிகுந்திருக்கும். அந்நிலத்திலே கடல் வழியாகக் கிடைக்கும் பலவகையான செல்வங்களும் சிறந்து விளங்கும்.

# உ. போதனமாநகர்

அந்தச் சுரமை நாட்டின் நடுவிலே போதனமாநகர் என்னும் பெயரினையுடைய பெரிய நகரமொன்று இருந்தது. அந்நகர் அரசனுடைய தலைநகர் அமையவேண்டிய முறைப்படி அமைந்திருந்தது. அந்நகரின் அழகும் ஒளியுந் தேவர் உலகத்தைப் பார்த்து எள்ளி நகைப்பது போன்று இலங்கும். மாடமாளிகைகள் பேரழகுடன் பிறங்கும். கடைத் தெருக்கள் எல்லாப் பொருள்களும் நிறைந்து விளங்கும். யாண்டும் வேடிக்கைக் காட்சிகள் நிரம்பித் துலங்கும். உலகைச் சூழ்ந்துள்ள கடலைத் தடாகமாகவும், மண்ணுலகைத் தாமரை மலராகவும், சுரமை நாட்டைத் தாமரையின் பொகுட்டாகவும், போதனமாநகரை அழகிய திருமகளாகவும் கூறலாம்.

நகரத்தில் இருந்து எழும் அகிற்புகை முகிலைப்போல நகர் முழுவதும் நிறைந்திருக்கும். பலவகைப்பட்ட முழாக்களின் ஒலியும் முகிலின் முழக்கைப்போல் எழும். அந்நகரத்துப் பெண்களின் இயக்கம் முகிலினிடத்துத் தோன்றும் மின்னற் கொடியைப்போல் காணப்பெறும். நகரத்தின் வானளாவிய கட்டிடங்கள் மலையுயர்ச்சியோடு மாறுபட்டு நிற்கும்.

## தெருக்களின் சிறப்பு

நகரின் தெருக்களிற் பலவகைப்பட்ட பூமாலைகளைக் காணலாம். அவைகள் தெருக்களில் விற்பனைக்கு வந்தனவும், மாடங்களின் வாசல்களில் தொங்குமாறு விடப்பட்டனவுமாகும். அவற்றிற் சுரும்புகள் அமர்ந்து தேனை யுண்டுகொண்டிருக்கும். அக்காட்சி நகரமுழுவதுங் காணுமா றிருத்தலின் அந்நகரைத் தேவருலகத்துக் கற்பகச் சோலை யென்றுங் கூறலாம்.

அரசர் தெருக்களில், மாதர்களின் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற அடிகள் தோய்தலால் செந்நிறம் பொருந்தி யிருக்கும். அதனைக் காணும்போது நீரிடைப்

பூப்பதாகிய செந்தாமரை மலர் நிலத்திடைப் பூத்தாற் போலக் காணப்பெறும்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகையாருடைய இருப்பிடங்களும் அமைய வேண்டிய இடங்களில் முறைப்படி அமைந்திருக்கும். அந்நகரத்தின் அழகை நோக்குமிடத்து வித்தியாதரர் உலகம் இதுதானோ என்று வியப்படையும் படியாக விருக்கும். உலகத்திற் பொருந்தியுள்ள செல்வங்கள் எல்லாவற்றையும் ஓரிடத் தில் ஒரேபொழுதில் பார்க்க விரும்பினால் அந்நகரிலே மிக வெளிதாகப் பார்க்கலாம். அந்நகரின் பெருமை முழு வதையும் எத்தகைய புலவர் பெருமக்களாலும் முடிவு பெறக் கூறமுடியாது.

## பயாபதி மன்னன்

அத்தகைய நாட்டையும் நகரத்தையும் பயாபதி என் னும் பெயரினையுடைய அரசன், அறநெறி வழுவாமல் அரசு புரிந்துகொண்டிருந்தான். அவனுடைய ஆட்சியில் மக்கள் அனைவரும் எல்லா நலங்களும் பெற்றிருந்தார்கள். அவன் தன் நாட்டில் வாழுங் குடிகளை வருத்தி இறைப் பொருளைப் பெறமாட்டான். குடிகள் ஆறில் ஒரு பங்கு பொருளை மனங்களித்துத் தாமாகவே வழங்குவார்கள். அவன் தன்னுடைய பகைவர்களையும் நயத்தினாலே பணி யச் செய்வானே யல்லாமல், எவரையுஞ் சினந்து வருத்திப் பணியச் செய்யமாட்டான். அத்தகை சீரியோன் தனது குணச் சிறப்பினாலேயே உலகம் முழுவதையும் பொதுமை நீக்கித் தன்னதாக அரசு புரிந்திருந்தான். அவனுக் கமைந்த அமைச்சர்களும் அரசன் குறிப்பினை யுணர்ந்து காரியங்களைச் செய்வார்களே யல்லாமல் தாமாக ஒன்றுஞ் செய்யார்கள்.

## அரசனுடைய மனைவியர்

அந்தப் பயாபதி மன்னனுக்கு ஆயிரம்பேர் உரிமை மனைவியர் அமைந்திருந்தனர். அவர்கள் அழகு நலமும் இளமை நலமும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். கற்பு

மாட்சியமைந்த நற்பண்பினர்கள். அந்த ஆயிரம் மனைவியர்களுள்ளும் மிகாபதிதேவி, சசிதேவி என்னும் இரு பெருந் தேவியர்கள் அரசனுக்கு மிகச் சிறந்தவர்கள். அவர்களே பட்டத்தரசியரு மாவர். மிகாபதிதேவி மூத்தவள். சசிதேவி இளையவள். இந்த இருவரும் மற்றைய மங்கையர் கட்கெல்லாந் திலகமாகத் திகழ்ந்திருந்தார்கள். இருவரும் அரசனுடைய உள்ளத்திலே ஒருவராகவே விளங்கினார்கள். அரசனுக்கு அத்தேவியர்கள் உயிராக இருந்தார்கள். அத் தேவியர்கட்கோ அரசன் உயிராக விருந்தான். இத்தகைய பல மேதகு பண்புகளாலும் பயாபதி மன்னனுடைய வாழ்க்கை சீருஞ்சிறப்பும் நிறைந்ததாகத் திகழ்ந்தது.

## ௩. விசய திவிட்டர்கள்

முற்கூறியவாறு பயாபதி மன்னன் இன்பநலங்களை இனிது துய்த்து அரசாட்சி செய்துகொண்டிருந்த நாளில் விண்ணுளுந் தேவர் இருவர் மண்ணுளும் மன்னராகப் பிறத்தற்கு எண்ணினர். அவர்களுள் ஒருவன் மூத்தவளாகிய மிகாபதி தேவி வயிற்றில் வந்து பிறந்து **விசயன்** என்னும் பெயரினைப் பெற்றான். மற்றவன் இளையவளாகிய சசி தேவி வயிற்றில் வந்து பிறந்து **திவிட்டன்** என்னும் பெயரினைப் பெற்றான்.

பயாபதி மன்னனுக்கு அவ்வாறு அரிய மக்களிருவர் தோன்றிய காலத்திலே சங்குகள ஒலித்தன. தேவர்கள் மலர்மாரி பெய்தனர். உலகமும் உலகத்துயிர்களும் மிக விளக்கத்தை யடைந்தன. தேவர் உலகமும் மிகுந்த களிப்பை யடைந்தது. ஏற்போரின் அவா எல்லாம் நீங்கி மன நிறைவு ஏற்பட்டது. மக்கள் அனைவருடைய தீவினைகளும் மக்களை வருத்தும் ஆற்றல் இழந்து மறைந்தன.

### மக்களின் மாண்பு

அம்மக்களுள் மூத்தவனுகிய விசயன் வெள்ளிய நிறமுடையவன். வாடுதலில்லாத மாலையை உடையவன். முழங்கால்வரை தொங்கும் கைகளையுடையவன். விளங்குகின்ற ஒளியை உடையவன். மலைகளைப்போன்ற தோள்களை யுடையவன். பெருமை பொருந்திய நடையை உடையவன். இளையவனுகிய திவிட்டனே, காயாம்பூவைப் போன்ற கரிய நிறத்தினை யுடையவன் தாமரைமலர்களை நிகர்த்த கண்களை யுடையவன். ஆம்பல் மலர்போலச் சிவந்த வாயினை யுடையவன். திருமகள் தங்கிய அகன்ற மார்பை யுடையவன். வலம்புரிச் சங்கு சக்கரம் ஆகியவைகளை ஏந்திய கையை உடையவன். இளமைமிக்க ஆண்யானையைப்போன்ற நடையை யுடையவன். அவ்விருவரும் கண்ணனையும் அவன் அண்ணனுகிய பலபத்திரனையும் போன்று விளங்கினர்.

அவ்வாறு விளங்கிய மக்களிருவரும நாளோர் உட லும் பொழுதொரு வண்ணமுமாக நன்கு வளர்ந்தனர். அரசர்களுக்குரிய அருங்கலைகள் அனைத்தையும் மன்னன் தன் மக்களுக்கு உரிய காலத்திலே கற்பித்தான். அவர் களும் கற்கவேண்டியவைகளை யெல்லாம் தெளிவுபெறக் கற்றுத் தேர்ந்தனர்.

## அரசன் கட்டளை

அவ்வாறு அரிய மக்கட்பேற்றினை யடைந்த அரசன் ஒருநாள் அரச அவையை அடைந்தான். அரச அவை யில் நிறைந்திருக்கவேண்டிய அனைவரும் நிறைந்திருந் தனர். அரசன், மணியாற் செய்யப்பெற்ற அரியணையிலே இனிது அமர்ந்திருந்தான். விசயனும் திவிட்டனும் அரச னுக்கு இருபக்கங்களினும் அமர்ந்திருந்தார்கள். அர சனைக் கற்பகமலரென எண்ணிய பாவாணராகிய வண்டுகள் பலவகைப் பாடல்களைப் பாடிப் பரிசிலாகிய தேனைப் பெற் றன. அப்போது அரசன் தன் வாயிற் காவலாளனை யழைத்து, 'ஏழுநாழிகை யளவு என்னைக் காண்டற்கு எத் தகையோர் வரினும் என் உடன்பாடின்றியே அவர்களை உள்ளே அனுப்புவாயாக' என்று கட்டளை பிறப்பித்தான்.

## நிமித்திகன் வருகை

அப்போது அளவுகடந்த சோதிட நூல்களைக் கற்றுச் சோதிடக் கடலின் கரையைக் கண்டவனும், முக்கால நிகழ்ச்சியையும் எக்காலத்தினும் முழுதும் உணரும் ஆற் றல் அமைந்தவனும், **அங்கதன்** என்னும் பெயரினையுடைய வனுமாகிய நிமித்திகன் ஒருவன் அரண்மனை வாயிலை யடைந்தான். அவன் காவலாளனை நோக்கி, 'உட்சென்று அரசனைக் காண்பதற்கு வேளை எப்படியோ?' என்று கேட்டான். காவலாளன் அரசன் கட்டளையைக் கூறி அவனை உள்ளே அனுப்பினான். அங்கதன் உள்ளே சென்று அரசனைக்கண்டு வாழ்த்தினான். அரசன் அந் நிமித்திகனுக்குத் தக்க ஓர் இருக்கையைக் காட்டினான்.

### கனவுநிலை கூறல்

அரசன் காட்டிய இருக்கையில் அமர்ந்த நிமித்திகன் அரசனை நோக்கிப், 'பெருந்தலை யமைந்த யானையையுடைய அரசர் பெரும! நீ இரவு விண்வழியாய் ஆண் யானையொன்று இறங்கிவந்து உன்னுடைய இளைய மகனாகிய திவிட்டனுக்கு ஒரு வெண்தாமரை மலரை யணிந்து சென்றதாகக் கனவு ஒன்று கண்டாய். அக்கனவின் பயன் யாதெனின், ஒரு வித்தியாதர மன்னன் தன் அழகிய திருமகளை இங்குக் கொணர்ந்து உன்னுடைய இளைய மகன் திவிட்டனுக்கு வாழ்க்கைத் துணைவியாக்கிச் செல்வான் என்பதேயாகும். அதன்பொருட்டு இன்றிலிருந்து ஏழு தினங்களுக்குள் ஒரு வித்தியாதர தூதுவன் வித்தியாதர மன்னனிடம் இருந்து திருமுகம் ஒன்று கொண்டுவருவான். அவன் உனது பூமலர்ச்சோலையாகிய புட்பமாகாண்டப் பொழிலில் இறங்குவான். அதனை நீ இப்பொழுதே உணர்ந்துகொள்வாயாக' என்று கூறினான்.

### அமைச்சருடன் சூழ்ச்சியும் முடிவும்

தான் கண்ட கனவினை யுணர்ந்து அதன் பயனையும் கூறிய நிமித்திகன் ஆற்றலைக்கண்டு அரசன் மிக வியப்படைந்தான். நிமித்திகன் பேசி முடித்தபோது அரச அவை ஆரவாரம் அடங்கியிருந்தது. அப்பொழுது நாழிகைக்கு ஒருமுறை அடிக்கப்படும் முரசு முரசறைவோனால் அடிக்கப்பட்டது. நாழிகை யதிகமானதை யுணர்ந்த அரசன் அனைவருஞ் செல்வதற்கு விடையளித்தான். பின்னர்த் தானும் அமைச்சர்களுமாகத் தனித்தெண்ணும் இடத்திற்குச் சென்றான். அங்கதன் கூறியதைப்பற்றி அமைச்சர்களைக் கலந்து ஆராய்ந்தான்.

அப்போது அமைச்சர்களில் ஒருவன், 'அரசே! தங்களுடைய இளையமகன் திவிட்டன் நிமித்திகன் கூறியவாறு பெருஞ் சிறப்படைதற்கு உரியவனே ஆவன். திவிட்டனது பிறந்த நாட்பயன் கூறியோரும் அங்கதன் கூறியதை ஒட்டியே கூறியிருக்கின்றனர். சோதிடத்தில் மாதிட

முடைய அங்கதன்உரை ஒருபோதும் பொய்யாகாது. திவிட்டனுடைய கையிலே சங்கக் கோடுகளும் சக்கரக் கோடுகளும் அமைந்துள்ளன திவிட்டன் திருமாலின் கூறே ஆவன் என்பதற்கு யாதும் ஐயமில்லை. நிமித்திகன் கூறியபடி வித்தியாதர அரசன் தன் திருமகளை இங்குக் கொண்டுவந்து திருமணஞ்செய்து கொடுப்பானேயாயின் அதைப்போன்ற வியத்தகு நிகழ்ச்சி விரிகடல்சூழ் உலகில் வேறொன்றுமே இராது. மூவுலகும் திவிட்டன் அடிப்படு மென்பது திண்ணம். இப்போது நாம் நிமித்திகன் இயம்பியபடி புட்பமாகாண்டப் பொழிலில் உள்ள பளிங்கு மண்டபத்தை அழகுபடுத்திக் குறிப்பிட்ட ஏழுநாள் அளவும் வித்தியாதரத் தூதுவனை எதிர்பார்ப்போம். எதிர் பார்த்தலுக்குத் துருமகாந்தனைக் காவல் வைப்போம்' என்றனன். மற்றவர்களும் அவ்வமைச்சன் கூறியபடி செய்தலே இப்போது செய்யத்தக்கது என்றனர். மன்னனும் அவ்வாறே செய்யுமாறு பணித்துவிட்டுத் தன்னுடைய இருப்பிடத்தை யடைந்தான்.

---

# ௪. இரதநூபுர நகர்

## வித்தியாதரர்கள்

மேருமலையின் ஒருபக்கத்தில் வித்தியாதரர் உலகம் இருக்கிறது. அது நமது இந்திய நாட்டைவிடப் பெரியது. மிகுந்த ஒளி பொருந்தியது. அவ்வுலகினர் எல்லாக் கலைகளையும் நன்கு கற்றுணர்ந்தவர்கள். அந்நாட்டு மலர்கள் பொற்றாமரை மலர்களாக விளங்கும். பூம்பொழில்கள் கற்பகச் சோலைகளாக விளங்கும். அந்நாட்டின் வளங்கள் ஏறக்குறைய தேவர் உலகத்து வளங்களை ஒட்டியே இருக்கும். அதனால் வித்தியாதரர்கள் தேவர்களாக எண்ணப்பெறுவர். ஆனால், அவர்கள் தேவர்களும் அல்லர். தேவர்கட்கும் மக்களுக்கும் இடைப்பட்ட ஓர் இனத்தினர் ஆவர். அந்நாட்டின் தென்பகுதிக்குத் தலைநகர் **இரதநூபுரச் சக்கரவாளம்** என்று கூறப்பெறும். அந்நகரத்துப் பொருள்களெல்லாம் இன்பத்தையே விளைப்பனவாம். அந்நகரத்திற்குச் **சுவலனசடி** என்பான் அரசன் ஆவான்.

## சுவலனசடியின் பெருமை

அந்தச் சுவலனசடியின் சீர்த்தி மூவுலகங்களினும் பரவியிருந்தது. பகைவர்கள் இடத்தில் அருள் செய்யாமை ஒன்றே அவனிடத்திற் பொருந்திய குற்றமாகும். அவன் ஆளுகையில் நாடு சீருஞ் சிறப்பும் நிறைந்து திகழ்ந்தது. அவன் ஆளுகையில் அந்நாட்டில் நடுங்குவன கொடி மரங்களிற் கட்டப்பெற்ற கொடிகளே. காமன் செய்யுங் கலக்கத்தைத் தவிர மற்றைய கலக்கங்களை அந்நாட்டார் அறியார். அந்நாட்டிற் கொடியன மாதர் இடைகளே. கடியன பொழிலில் உள்ள மலர்களே.

## மனைவி மக்களும் வேனில் வருகையும்

அரசனுடைய நலங்களுக்கெல்லாம் ஒத்தவகையில் **வாயுவேகை** என்பாள் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்திருந்தாள். அவள் திருமகள்போலும் அழகினையுடையவள். சிவந்த வாயினையுடையவள். அழகிய

பூங்கொம்பு போன்றவள். அவள் அரசனுக்கு அரிய விருந்தாக அமைந்திருந்தாள். ஆருயி ரனைய அவ்வரசி யோடு அரசன் இன்ப நலங்களை இனிது நுகர்ந்திருந்தான். அவர்களுக்கு முதலில் அருக்ககீர்த்தி என்ற அரிய மகன் பிறந்தான். பிறகு சுயம்பிரபை என்ற அரிய மகள் பிறந்தாள். சுயம்பிரபை எல்லா நலங்களும் இனிது செறிந்து இலங்கினாள் வெள்ளிய பிறையால் செவ்வான மும் உலகத்தாரால் தொழப்படுதலைப்போல, அரும்பெறற் பாவையாகிய சுயம்பிரபையின் பெற்றியால் நங்கையர் குலமே நற்பெரும் புகழடைந்தது. அவளுடைய புருவம் வில்லைப்போன்றது. இடை, இடையே உண்டோ இன்றோ என்னும் ஐயத்தையுடையது. நங்கையரிற் சிறந்த அம் மங்கை தோன்றியபின் அரசனுக்கு எல்லா நலங்களும் மிகுந்து பெருகின சுயம்பிரபை வளர்ந்து பேதை பெதும் பைப் பருவங்களைக் கடந்து மங்கைப் பருவத்தை யடைந் தாள். அவளுடைய பெண்மை நலத்தினை யுணர்ந்த அரசர்கள் பலர் அவள்மீது நாட்டங்கொண்டிருந்தனர். வேனிற் பருவம் வந்தெய்தியது. சுயம்பிரபை வேனில் விளையாட்டயர விழைந்தாள். தன் விழைவினை வயந்தமா திலகை என்னுந் தோழிமூலந் தந்தைக்குணர்த்தினாள்.

## பொழில் நலமும் புனைந்துரையும்

அரசன் தன் மனைவி மக்களுடனும் உரிமை மகளி ருடனும் மனோவனம் என்னும் மலர்ப்பொழிலை யடைந்தான். அரசன் சோலையை அடைந்தபோது தேமாவானது மலர் களைத் தூவி எதிர்கொள்வதுபோல மலர்களைத் தூவிற்று. குயில்கள் வாழ்த்துக் கூறுவனபோற் கூவின. இளங் கொடிகள் தம் தளிர்க்கையால் தொழுதலைப்போல அசைந் தாடின. அரசன் குணத்தைக் கூறிப் பாடுதலைப்போல வண்டுகள் பாடின அரசன்மீது நறுமலர் சொரிதலைப் போலக் கிளிகள் குளிர்ந்த மலர்களைச் சிந்தின. குராமலரில் ஆடிக், குளிர்ந்த தேனில் திளைத்து, அருவிநீரிற் பொருந்தி நறுமணத்துடன் வருந்தென்றல் மன்னற்கு வீசுதலைப் போல இனிமையுறத் தவழ்ந்தது. அரசன் தன்னுடைய

காதலிகளைப் பார்த்து நலம்புனைந்துரைக்கத் தொடங்கினான்.

அவன் மங்கையரை நோக்கி, அங்கிருந்த மாந்தளிர்களைக் காட்டி, 'இவை உமது உடல் நலத்தைக் கவர்ந்து விளங்குகின்றன' என்றான். குயில்களைக் காட்டி, 'இவைகள் நும்மிடம் சொல் பழகுதற்கு வந்திருக்கின்றன' என்றான். முண்முருக்கம்பூவைக் காட்டி, 'இவை நுமது செவ்வாயின் நிறத்தைப்போல' இருக்கின்றன என்றான். இவ்வாறு பலவகை இன்னுரைகளை நல்லாருடன் நவின்று வந்த அரசன் இறுதியில் அருகக் கடவுளின் திருக்கோயிலை யடைந்தான். கோயிலை வலம் வந்தான்.

## கடவுள் வழிபாடும் அறவுரை கேட்டலும்

மூடப்பெற்றிருந்த திருக்கோயில் கதவுகள் திறந்தன. பலவகைப் பாக்களைப் பாடி அருகக்கடவுளை வழிபட்டான். அருகதேவனின் அடிமலர்களில் இட்ட மலரைத் தன் முடியிலே அணிந்துகொண்டு திரும்பத் தொடங்கினான். அப்போது, **சகநந்தனன், அபிநந்தனன்** என்னும் இரு சாரணர் விசும்பாறாக வந்திறங்கி அருக தேவனை வழிபட்டனர். பின்னர் ஆங்கோர் இடத்தில் அமர்ந்தனர். அவர்கள் அரசனுக்கு அருகன் உணர்த்திய அறத்தை உரைக்க எண்ணினர். திரும்பற்கெண்ணிய அரசன் சாரணர்களாகிய முனிவர்களை யடைந்து பணிந்தான். அவர்கள் அரசனை அமருமாறு பணித்தனர். அரசனும் அவர்களை வணங்கி அமர்ந்தான்.

அரசன் அம்முனிவர்களுட் பெரியவர் முகத்தை நோக்கி, 'நான் அடிகளிடம் கேட்கத்தக்கது ஒன்று உள்ளது' என்றான். அதற்கு அம்முனிவர், 'நீ விரும்பிய தனை நாம் அறிவோம். அஃதாவது வினையின் திறத்தையும் அதனை அகற்றும் வழியினையும் அறிய விரும்புகின்றனை. **நல்வினை தீவினை ஆகிய இரண்டுமே பிறவிக்கேதுவாம். நல்வினை பொன் விலங்கையும், தீவினை இரும்பு விலங்கையும் போன்றது. இரண்டுமே ஆன்மாவைப் பிணிக்கும் தன்மை**

யுடையன. அவ்வினைகளை யொழித்தற்குவழி ஒப்புயர்வற்ற கடவுளின் திருவடி நினைப்பே யல்லாமல் வேறு யாதும் இல்லை' என்று பலவாறாக அருளுரைகள் வழங்கினர்.

## சுயம்பிரபை நோன்பு நோற்றல்

சாரணர் கூறிய நல்லுரைகளைக் கேட்ட அரசனுக்கு நல்லுணர்வு தோன்றிற்று அவன் மனைவி முதலாயினோரும் நல்லறிவு பெற்றனர். மகளிர் பலர் பலவாறான நோன்புகளை நோற்றற்கு உறுதிகொண்டனர். முனிவர்களின் அறவுரையை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த சுயம்பிரபை பெரிதும் மனங் கரைந்துருகினாள். அவள் அம்முனிவர்களுக்கு முன்பே சக்கிரவாளம் என்னும் அரிய நோன்பு ஒன்றினை நோற்கவேண்டுமென்று உறுதி பூண்டாள். சகநந்தனன் அபிநந்தனன் என்னும் பெயரையுடைய அச்சாரணரிருவரும் அரசனையும் மற்றவர்களையும் வாழ்த்தி விட்டு வந்த வழியே சென்றார்கள். அரசனும் தன் பக்கத்தினர் புடைசூழத் தன் அரண்மனையை அடைந்தான்.

சுயம்பிரபை தான் உறுதிபூண்ட நோன்பினை மேற்கொண்டு முறைமையாகச் செய்துமுடித்தாள். அதனால் அவளுக்கு இணையற்ற அறிவும் அழகும் திருவும் ஒருங்கே வந்து பொருந்தின. தான் நோன்பியற்றிய இடத்தில் அருகதேவனுக்கு ஒரு கோயில் அமைத்து வழிபாடு செய்தாள். பிறகு அவள் கடவுளை வழிபட்ட அருட்பொருட்களை யெடுத்துக்கொண்டு சென்று தன் தந்தைக்கு முன் வைத்து வணங்கிநின்றாள். பலநாள் உணவில்லாமல் வருந்தி நோற்ற தன் மகளை அரசன் பெரிதும் பாராட்டினான், அவன் தன் மகளை நோக்கி, "அருமைச் செல்வி! உன்னால் நான் மிகுந்த சிறப்பையடைந்தேன். இனி நீ நின் தாய்பாற் சென்று உணவு கொள்வாயாக," என்று கூறி அனுப்பினான்.

மணஞ்செய்ய எண்ணுதல்

அரசன் தன் மகளுடைய நற்குண நற்செய்கைகளைக் கண்டு மிகுந்த களிப்பினை யடைந்தான். இனிமேல் காலந் தாழ்த்தாமல் தன் திருமகளுக்குத் திருமணத்தைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அரசன் உள்ளத்தில் தோன்றியது. நமது வித்தியாதர அரச குலத்திலே இத் தகைய பெண்மணிக்கு மணமகனாகத்தக்க மாட்சியுள்ளான் யாவனென்று நெடுநேரம் எண்ணமிட்டுப் பார்த்தான். அவன் உள்ளத்திற்கு முடிவு ஒன்றுந் தோன்றவில்லை. மங்கையாற் காதலிக்கப் பெறுபவனையன்றோ மணமகனைத் தெரிந்தெடுத்தல்வேண்டும். இன்றேல், மணவினை மாண் புற்றதாக முடியுமே யென்று பலவாறு எண்ணமிட்ட மன்னன், இறுதியில் தன்னுடைய அமைச்சர்களை யழைத்து அவர்களைக் கலந்து ஆராய்ந்து பேச வேண்டுமென்று முடிவு செய்தான். உடனே ஏவலாளர்களை விளித்து அமைச்சர்கள் அனைவரையும் அழைத்து வருமாறு கட்டளை யிட்டான். அரசனது அழைப்பைக் கேட்ட அமைச்சர் கள் என்ன காரணமோ தெரியவில்லையேயென்று எண்ணி யவர்களாய் அஞ்சி விரைந்து மந்திரசாலை மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

# ரு. திருமணப் பேச்சு

அரசன் முன்னுரை

அரசன் அமைச்சர்களைப் பார்த்து, "அறிவுடை அமைச்சர்காள்! நிலவுலகத்தினைக் காக்கும் அரசர்கள் மிகுந்த பெருமை யுடையவர்களாயினும் அமைச்சர்கள் எண்ணப்படி நடப்பதே அவர்களுக்குச் சிறப்பைத் தருகிறது. அரசர்கள் அமைச்சரைக் கலந்து ஆராயாது செய்யுங் காரியங்கள் சிறந்து விளங்குவதில்லை. எத்தகைய உயர்ந்த அரசர்களாயினும் அவர்களுக்கு யாதொரு விதமான இழுக்கும் நேராமல் நல்வழிப்படுத்துவோர் அமைச்சர்களேயாவர். அமைச்சர்களே அரசர்களுக்குக் கண்ணுங் கருத்தும் உள்ளமும் செயலுமாக விளங்குகிறார் கள். அரசாட்சி என்னும் வண்டியிலுள்ள நுகத்தடியை அரசன் ஒருவனே இழுப்பானாயின் அவ்வண்டி நடவாது. ஒருபக்கம் அரசனும், மற்றொரு பக்கம் அமைச்சர்களும் நின்று இழுத்தால்தான் நன்கு நடக்கும். அரசன் அமைச்சர் கள் பலருங்கூடி எண்ணித் துணிந்து கூறும் முடிவுப்படி நடத்தல் வேண்டும். அவ்வாறு நடந்தால்தான் அரசாட்சி செம்மைபெற நடைபெறும். அரசன் எக்காரியத்தையும் அமைச்சர்களைக் கலந்தே செய்தல் வேண்டும். அரச னுடைய காரியங்கள் அனைத்துமே, அரசாட்சியுடன் தொடர்பு பெற்றுள்ளன. ஆகவே நான் உங்களைக் கலந்து எண்ணுமல் எத்தகைய காரியத்தையுஞ் செய்தல் கூடாது. அரசன் உலகத்தைத் தன் அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்குத் தோள்வலியும் சூழ்ச்சித்துணையும் வேண்டும். தோள்வலியைப் பார்க்கினுஞ் சூழ்ச்சித்துணையே சிறந்தது. சூழ்ச்சித்திறன் சிறக்குமாயின் தோள்வலியில்லாத மாத ரும் ஆட்சித் திறனை அடைவார்கள்.

அரசன், சிற்றின்ப நோக்கம் உடையவனுய்த் தன் நெறியில் தவறி யொழுகுவானுயின் தானுங் கேடடைவ துடன் பிறருக்குங் கேடு பல விளைவிப்பான். இம் மண் ணுலகம் முழுவதையும் அறிவாற்றலால் அடிப் படுத்தல்

வல்ல நீங்கள் என்னை அரசனுக்கி இராப்பகல் காத்து வருதலால் அன்றோ நான் இன்பக்கடலுள் திளைத்து இவ்வுலகைச் செம்மையுறப் புரந்து வருகின்றேன்! இப்பொழுது நான் உங்களை இங்கு அழைத்தது என்னுடைய திருமகள் சுயம்பிரபையின் திருமணத்தைப் பற்றிப் பேசுவதற்கேயாம். சுயம்பிரபை அறிவிலும் அழகிலுஞ் சிறந்து திகழ்கின்றாள். அவள் என் குடிக்கொரு மணி விளக்காக விளங்குகின்றாள். அவளுடைய அறிவிற்கும் அழகிற்கும் தக்க தலைவனைத் தேடித் திருமணம் புரிதல் வேண்டும். நம் குலக்கொழுந்தாகிய சுயம்பிரபைக்கு ஏற்ற தலைவன் யாவன் என்பதை நீங்கள் ஆராய்ச்சி செய்து கூறுங்கள் என்றான்.

## சுச்சுதன் என்னும் அமைச்சன் சொல்லுதல்

அரசன் கூறியதைக் கேட்ட அமைச்சர்கள் அரசனை வணங்கினார்கள். 'அரசே! நின் புகழ் நீடூழி வாழ்வதாக' என்று வாழ்த்தினார்கள். ஒவ்வொருவருந் தத்தமக்குத் தோன்றியவாறு உரைக்கலானார்கள். முதலில் சுச்சுதன் என்னும் பெயரினையுடைய அமைச்சன் கூறலானான். "அரசே! ஞாயிற்றின் ஒளிபடுதலால் சூரிய காந்தக்கல் அனற்பொறியை வெளிப்படுத்தும். திங்களின் ஒளிபடுதலால் சந்திர காந்தக்கல் தண்ணீரை வெளிப்படுத்தும். அவ்வாறே நினது கீர்த்தி யொளியால் யாமும் சிறப்பையடைகின்றேம்; அறத்தின்வழி செல்லும் அரசன் இல்லாவிட்டால் அமைச்சரால் யாது பயன்? யானையினது கதுப்பால் உராயப்பெற்ற சந்தனமரம் நறுமணத்தை வெளிப்படுத்தும். அதைப்போல், நன்னெறி யொழுகும் அரசர்கள் அமைச்சர்கள் முதலாயினோரை நன்கு போற்றுதலால்தான் அமைச்சர்கள் முதலாயினோருக்குச் சீர்த்தியும் பெருமையும் உண்டாகின்றன. நெடுங்கடல் தன்னிலை மாறிக் கொதிக்கத் தொடங்குமாயின், அதனை ஆற்றுதற்கு, வேறுநீர் உலகில் உண்டோ? அதனைப்போற் செங்கோல் மன்னர்கள் கொடுங்கோல் மன்னர்களாயின் அவர்களை நன்னிலைப்படுத்துவார் யாவருளர்? மக்கள் அனைவரும்,

'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்றே' என்றல்லவோ ஒடநேரிடும்? ஆதலின், எமக்குள்ள பெருமையெல்லாம் நின்னால் நேர்ந்ததேயாம். ஆயிரம் விண்மீன்கள் ஒன்றுசேரினும் ஒரு திங்களுக்கு நிகராதல் கூடுமோ? உலகில் எவ்வளவுபேர் சிறந்தவர்கள் இருப்பினும் அவர்கள் அரசனுக்கு நிகராவார்களோ? இவ்வுலகத்திற்குக் கண்கள் என்று சொல்லத்தக்கன மூன்றுளும். ஒன்று ஞாயிறு; ஒன்று கல்வி; ஒன்று அரசன். இம் மூன்றில் ஒன்றில்லாதொழியினும் உலகம் நன்கு நடவாது. கல்வியறிவோடு கூடிய அரசன் உலகத்தார்களுக்கு இரண்டு கண்களாகின்றான். இவ்வுலகிற் சிறந்தவை இரண்டு; அவை ஐம்பொறியடக்கித் தவம்புரிதலும் உலகைத் தன்னடிப்படுத்தி அரசுபுரிதலுமாம். அவை இரண்டும் நேரியமுறையில் இல்லாது, மாறுபடுமாயின் பெருங்கேட்டை விளைவிப்பனவாம். அரசனுடைய அரசாட்சிச்சுமை தாங்கவொண்ணாதது. அதனைத் தாங்கும் அரசரை ஒப்பார் இவ்வுலகில் எவரும் இலர். அரசற்குரிய நல்லியல்புகளெல்லாம் அமைந்த நின் முன்னர் அறநெறிகளை யெடுத்துப் பேசுதல் புல்லிய செய்கையாகும். உமது திருக்குலம் விளங்கவந்த பெண்மணிக்குத்தக்க கணவனை நான் உரைக்கிறேன்; சிறிது கேட்டருள்வீராக."

"நமது வித்தியாதர உலகின் உத்தரசேடியிலே இரத்தினபல்லவம் என்னும் பெயரையுடைய நகரமொன்று உள்ளது. அந் நகரத்தை முன்பு ஆட்சிபுரிந்த மயூரகண்டன் என்பவனுக்கு அச்சுவக்கிரீவன் என்னும் பெயரையுடைய மகன் தோன்றினான். அந்த அச்சுவக்கிரீவன் தகுந்த சுற்றத்தாராலும், குலத்தின் பெருமையாலும், கற்றுள்ள கல்வியின் திறத்தாலும், எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் வலிமையாலும், உலகம் முழுவதையும் தன்னுடைய ஆட்சிக்குள்ளாக்கி, ஒப்பாரும் மிக்காரும் இல்லாவாறு விளங்குகின்றான். அவனுக்கு நீலரதன், நீலகண்டன், வச்சிரகண்டன், சுகண்டன் என்னும் தம்பியர் நால்வர் உளர். அவர்களும் அச்சுவக்கிரீவனைப்

போன்ற ஆற்றல் படைத்தவர்கள். அரிமஞ்சு என்பான் அவர்களுக்கு அமைச்சனாக அமைந்துள்ளான். அவன் வரும்பொருளுரைக்கும் ஆற்றல் மிகுதியும் படைத்தவன். அன்றியும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலச் செய்திகளையும் தவறின்றி உரைக்கவல்ல சதவிந்து என்னும் நிமித்திகனும் அவனிடம் இருக்கின்றான். அவன் இத்தகைய உயர்ந்த நிலையிலே அமர்ந்துள்ளமையின் வித்தியாதர உலகம் முழுவதும் அவனுக்குத் திறை செலுத்தி வருகிறது. நம் திருமகள் சுயம்பிரபை பிறந்த பின்னர்த்தான் அவன் நம்மிடம் திறைப்பொருளை வாங்காதிருக்கின்றான். சுயம்பிரபையை அவனுக்குத் திருமணஞ் செய்துகொடுத்தல் சிறந்தது என்பது என்னுடைய எண்ணம். அவ்வாறு செய்யின் வித்தியாதரவுலகம் முழுவதும் நமக்கு அஞ்சிப் பெருமை பாராட்டும். இன்றேல், அச்சுவக்கிரீவனுடைய சினத்திற்கு நாம் ஆளாகவேண்டியதாக நேரிடும். அவனுடைய சினத்திற்கு ஆளாதல் அறிவற்ற செயலாகும். இதுவே என்னுடைய திண்ணமான எண்ணமாம்" என்றனன்.

பவச்சுதன் என்பவன் பகருதல்

**பவச்சுதன்** என்னும் பெயரையுடைய மற்றோர் அமைச்சன் எழுந்து, "அரசே! நுண்ணறிவாளனாகிய சுச்சுதன் சொல்லிய செய்திகள் யாவும் உண்மையே. அச்சுவக்கிரீவன் வித்தியாதர அரசர்கள் அனைவரினுஞ் சிறந்தவனென்பதற்கும் ஐயமில்லை. ஆயினும், அவனுக்கு அகவை மிக அதிகமாக ஆகிவிட்டது. ஒத்த அகவையுடையவனன்றோ மணமகனாதற்குரியவன்? மேலும், அந்த அச்சுவக்கிரீவனுக்குக் கனகசித்திரை என்பாள் பட்டத்தரசியாய் அமைந்திருக்கின்றாள். அவனுடைய மக்கள் ஐந்நூற்றுவருள்ளும் முதல்வனாகிய இரத்தினகண்டன் என்பவன் இளவரசனாக அமைந்திருக்கின்றான். அச்சுவகண்டனுக்குப் பின்னர் இரத்தினகண்டனே அரசாட்சிக் குரியவன். ஆகவே, சுயம்பிரபைக்கு அச்சுவகண்டன் ஏற்ற மணமகனாகான். சுயம்பிரபை பிறந்த நாளில் அவன்

பிறந்தநாட் பயன் கூறிய நிமித்திகர்கள் 'ஓர் அரசிளங் காளைக்குப் பட்டத்தரசியாய் அமைவாள் என்றும், அவ ளுடைய மகன் மூவுலக அரசாட்சியையும் பெற்றுச் செங் கோல் நடத்துவா' னென்றும் கூறியுள்ளனர். ஆகவே, அச்சுவக்கிரீவன் நம் நங்கைக்குத் தக்க தலைவன் ஆகான்," என்றனன். பவச்சுதன் இவ்வாறு கூறியதைக் கேட்ட சடியரசன், "ஆயின் நம் சுயம்பிரபைக்குரிய கணவன் யாவனேயோ?" என்று கேட்டனன்.

அரசன் அவ்வாறு கேட்கவே, மேலும் பவச்சுதன், "இம்மலைக்கு மேற்குப் பக்கத்தில் உள்ள கின்னரகீத நகரத்தை யாளும் அரசனுக்குப் பவநஞ்சன் என்றொரு மகன் இருக்கின்றான். அவன் குதிரையுள்ளம் (அசுவ விருதயம்) என்னும் குதிரை விஞ்சையில் வல்லவன். மேலும், அமுதமாபதியை அரசாட்சிபுரியும் அரசனுடைய மகன் வேகமாரதன் என்பவனும் இருக்கின்றான். அவனை உலகத்தார் 'இளங்களி யுழுவை' என்று உளங்களிகூர்ந்து புகழ்வர். வேகமாபுரத்தை யாளும் அரசன் மகன் பதுமரதன் என்பவனும் உளன். அவனை 'ஊழித்தீ' என்று கூறி அனை வரும் அஞ்சுவர். இரத்தினபுரத்தை யாளும் மன்னன் மகன் சுவர்ணரதன் என்பவன் ஒருவன் உளன். அவன் அரசர் களுக்கு இடியேற்றைப் போன்றவன். கீதமாபுரத் தரசன் மகன் அரிகண்டன் திருமாலையும் வெல்ல வல்ல திறல்மிகப் படைத்தவன். முப்புரவேந்தன் மகன் அரிநாங்கன் என் பவன் கல்விக்கடலைக் கரைகண்டவன். சித்திரகூடத்தரசன் மகன் ஏமாங்கதன் தேவர்கோன் மகனாகிய சயந்தனை யொத்தவன். அச்சுவபுரத்தை யாளும் அரசன் மகன் கனக சித்திரன் பூவுலகிற் சிறந்தவன். சீநிலையபுரத் தரசன் சித்திர ரதனும் அனைவோராலும் போற்றப்பெறுபவன். கனகபல்ல வத்தை யாளும் அரசன் மகன் சிங்ககேது பகைவர்களாகிய யானைகளுக்குச் சிங்கவேற்றைப் போன்றவன். இந்திர சஞ்சயபுரத்தரசன் மகன் அருஞ்சயன் வித்தியாதர உலகிற் கொரு சூளாமணி. இவர்களுள் சிறந்தவனைத் தேடியறிந்து மணஞ்செய்து கொடுத்தலே சிறந்ததாகும்," என்றனன்.

மற்றவர்களும் 'அவ்வாறே செய்யலாம்,' என்றனர். அப்போது சுதசாகரன் என்பவன் எழுந்து அரசனை வணங்கிக் கூறுகிறான்.

### சுதசாகரன் சொல்லுதல்

"அரசர்பெரும! பவச்சுதன் அச்சுவகண்டன் (கிரீவம் - கண்டம்) மீது கூறிய குற்றங்கள் யாவும் உண்மையே. ஆயினும், அவனுக்கு மாறாகச் சுயம்பிரபையை மண முடிக்க வல்லான் ஒருவனும் இலன். வேறொருவனுக்குச் சுயம்பிரபையை மணஞ்செய்து முடித்தால் அச்சுவகண்டன் பகை நமக்கு வந்து சேரும். அவன் பகையைத் தேடிக் கொள்ளுதல் அறிவுடைமையாகாது. இவ்வுலகையெல்லாம் ஒருகுடை நிழற்கீழ் ஆளும் சுரேந்திரகாந்த மன்னன் மதயானையைப் பார்க்கினும் வலிமையுடையவன். மேகவாகனன் என்னும் பெயரையுடையவன். அவனுடைய மனைவி மேகமாலினி; அவர்களுடைய அருந்தவத்தால் தோன்றியவன் விச்சுவன். விச்சுவன் இயமனும் அஞ்சத்தக்க ஆற்றல் படைத்தவன். அவன் தேவருலகை அரசாட்சி புரிந்து மண்ணுலகத்தோர்க்கு வழிகாட்டவந்தவன். அவன் பிறந்தபின் உலகம் இன்பத்துடன் விளங்குகின்றது. அவனுக்குப் பகைவர் ஒருவரும் இலர். சுயம்பிரபை அவனை மணஞ்செய்வாளாயின் இருவரும் இனிது வாழ்வர். அவ்விச்சுவனுக்குச் சோதிமாலை என்னும் பெயரினையுடைய தங்கை ஒருத்தி இருக்கின்றாள். அவள் நற்பண்புகளெல்லாம் நன்கமைந்தவள். கற்பகக் கொம்பை நிகர்த்தவள். இயற்கை மணம் வீசும் இருண்ட கூந்தலாள். அம்பினைவென்ற அழகிய கருநெடுங் கண்களை யுடையாள். அவ்வழகிய பெண்மணியினை நம் செல்வன் அருக்ககீர்த்திக்குக் கடிமணம் புரியலாம். ஆகவே, சுயம்பிரபையை விச்சுவனுக்கு மணம் செய்தல் எவ்வாற்றானும் நன்றெனத் தோன்றுகின்றது," என்று கூறினான்.

### சுமந்திரி கூறுதல்

மேற்கூறியவைகளை யெல்லாம் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த சுமந்திரி என்பவன் எழுந்து,

"மன்னர் பெரும! அச்சுவக்கிரீவன் மிகுந்த மூப்புடையோ னாயினன். அவனுக்குப் பட்டத்தரசியும் இருக்கின்றாள். இளவரசனும் இருக்கின்றான். ஆகவே, நம் செல்வி சுயம் பிரபையைத் திருமணம்புரிய அவன் தகுதியுடையவ னல்லன். மற்றவர்களோ அச்சுவக்கிரீவனுக்கு அடங்கிய வர்கள். அவன் மனக்கருத்திற்கு மாறாக மணம்புரியத் துணியார். சுயம்பிரபை அரசிளங்குமரன் ஒருவனை மணம் புரியாதிருப்பதும் நல்லதன்று. விச்சுவன் யாவரினுஞ் சிறந்தவனே; ஆயினும், அவன் காமனைக் கடந்த கடவுட் டன்மையை உடையவன். மங்கையர் கருநெடுங் கண் கள் அவனைச் சிறிதும் வருத்தும் ஆற்றலுடையன வல்ல. அவன் தேவர் உலக இன்பத்தையும் வெறுத்த வன்; எப்போதும் இறைவனை எண்ணி அருந்தவம் புரிகின்றான். அவனுடைய தந்தை அசோகர முனிவனிடம் அவனுக்கு நிகழற்பாலனவாகிய எதிர்கால நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டனன். அதற்கு அம் முனிவன், 'நின் மகன் முற்பிறவியில் தேவர் உலகைப் பதினேழு கடற்றுகை யாண்டுகள் அரசாண்டிருந்தவன். அவன் இவ்வுலக இன்பங்களைச் சிறிதும் பொருட்படுத்தான். அரசனுதலை யும் கருதான். இறைவனை யெண்ணி அருந்தவம் புரிந்து சிவகதியடைவான். இதற்குச் சிறிதும் ஐயமில்லை. இதனை நீ பொறுத்திருந்து பார்ப்பாயாக,'' என்று கூறினன்.

"ஆகையால், விச்சுவன் நம்மிடம் திருமணத்திற்குப் பொருந்தான். இனி, நாம் சுயம்வரத்தை ஏற்படுத்தினும் பயன் உண்டாகாது. அச்சுவக்கிரீவனைத் தவிர மற்றெவ ரும் மணம்புரியத் துணியார். நிற்க, எல்லாக் காரியங்க ளும் நம்முடைய எண்ணத்தின்படியே நடைபெறா; ஒன்றை நினைக்கின் மற்றொன்றாக முடிவுபெறுதலும் உண்டு. நாம் எதனையுந் துணிந்து செய்வதற்கியலாது. நம் குலத்தினர் அனைவரும் மேல் நிகழுங் காரியங்களை நிமித்திகர்களிடம் நன்கு ஆராய்ந்து புரிதலே தொன்று தொட்டுள்ள வழக்கமாக விருக்கின்றது. ஆகவே, நாமும்

அவ்வழக்கத்தைக் கடைப்பிடித்து நம்முடைய நிமித்திகனாகிய சதவிந்துவினிடம் சென்று கேட்டுத் தெளிதலே எல்லாவற்றினுஞ் சிறந்ததென்று எனக்குப் புலப்படுகிறது,'' என்று கூறியமர்ந்தான்.

## நிமித்திகனைக் கேட்டற்கு முடிவு செய்தல்

சுமந்திரி கூறியதைக் கேட்ட மற்றைய அமைச்சர்களும் 'அவ்வாறு செய்தலே சிறந்த' தென்று ஒரேயடியாக உரைத்தனர். 'இனி வேறெண்ணுதல் வேண்டாம். நம் ஆராய்ச்சி நீளுமாயின் யாது நிகழும் என்பது நமக்குத் தெரியாது. ஆகவே, தாங்கள் காலந்தாழ்க்காது சென்று சதவிந்து நிமித்திகனைப் பார்த்துக் கேளுங்கள்,' என்றனர். அரசனும் அவர்கட்கெல்லாம் விடைகொடுத்துச் சூழ்ச்சிச் சாலையில் நின்றும் அரண்மனையை அடைந்தான்.

## அரசன் நிமித்திகனிடம் செல்லுதல்

அரண்மனையை அடைந்த அரசன், நண்பகற் கடன்களை முடித்துக்கொண்ட பின்னர் சதவிந்து நிமித்திகனைப் பார்த்தற்குப் புறப்பட்டான். எத்தகைய ஊர்தியினுஞ் செல்லாது கால்நடையாகவே புறப்பட்டான். மெய்காவலர் அரசனைப் பாதுகாத்துச் சூழ்ந்து சென்றனர். அரசன் நிமித்திகன் மனையை அண்மினான். அரசன் வருகையை அறிந்த சதவிந்து நிமித்திகன் எதிர்சென்று போற்றினான். அயினிநீர் சுழற்றி வாழ்த்துக் கூறினான். உள்ளழைத்துச் சென்று குளிர்ந்த மண்டபத்தில் அமரச் செய்தான். சதவிந்துவை அரசன் குறிப்பாக நோக்கினான். குறிப்பறிந்த அரசனுடைய காவலரும் நிமித்திகனுடைய ஏவலரும் அகன்றனர்.

## சதவிந்து நிமித்திகன் பேசுதல்

அரசன் தன் எண்ணத்தை நிமித்திகன் அறிந்துரைத்தல் கூடுமோ என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். தன் வல்லமையினாலே அரசன் குறிப்பையுணர்ந்து சதவிந்து நிமித்திகன் அரசனை நோக்கி, "அரசரேறே! தாங்கள் தங்கள் மனத்தில் எண்ணியசெய்தி தங்கள் திருமகள்

சுயம்பிரபையின் திருமணத்தைப் பற்றியேயாம். தாங்கள் இங்குவர நினைத்து வரும்போது எதிர்கொண்டு வலமாகச் சென்ற பெண்மணி திருமகளே யாவள். தங்கள் திருமகளுக்கு நேரவிருக்கும் கணக்கற்ற நன்மையை எடுத்துரைக்க என்றால் இயலாது. இவளுக்குத் தலைவனாக வரும் இளவலைப்பற்றி முன்னாளில் அருகக்கடவுள் அருளிச் செய்த மாபுராணத்தில் உரைக்கப்பட்டிருக்கின்றது," என்றனன். நிமித்திகன் கூறியதைக் கேட்ட அரசன் உள்ளம் மகிழ்ந்து "நம் அருமைத் திருமகளுக்குரிய தலைவன் யாவன்? அவனைப்பற்றிய வரலாறு மாபுராணத்தில் எவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது?" என்று வினவினான்.

நிமித்திகன் மீண்டும் கூறத்தொடங்கி, "அரசர் பெரும! அப்புராணத்தில், 'மூவகை யுலகிற்கும் நடுவே யுள்ளதாகிய நிலவுலகம் கருமலோகம்; அஃது ஏழு தீவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; அவ்வேழு தீவுகளில் ஒன்றாகிய **நாவலந்தீவின்** நடுவே மேருவும் அதனைச் சூழ்ந்து ஏழுகுல மலைகளும் இருக்கின்றன. இவையன்றி அத்தீவிலே ஏழு யாறுகளும் பதினான்கு கடல்களும் ஏழு கண்டங்களும் அமைந்துள்ளன. அக்கண்டங்கள் ஏழனுள்ளும், பாரத கண்டமே சிறப்புடையது, என்று கூறப்பட்டிருத்தலுடன், அப் பாரத கண்டம் போக நிலமாய் மூன்று ஊழிக்காலம் இருந்ததென்றும், அதன் பிறகு பிரமர்கள் தோன்றி உலகங்களைப் படைத்தார்களென்றும், மூன்றாவது ஊழியின் முடிவில் உலகிலுள்ள உயிர்த் தொகைகள் உய்யும்பொருட்டு ஒளிவடிவாய் முதற்கடவுள் தோன்றினார் என்றும் உரைக்கப்பட்டிருக்கின்றன. அப்போது அருகக்கடவுளின் திருவருளால் தோன்றிய **பரதன்** உலகம் முழுவதையும் தனிச் செங்கோல் செலுத்தி மன்னுயிர் புரந்துவந்தான். அவன் ஒருநாள் அருகக்கடவுளை வணங்கித் தனக்குப் பிறகு நிகழும் வரலாற்றினைப்பற்றிக் கேட்டான். அக்கடவுள் பரதனை நோக்கி, "என்னை முதலாகக்கொண்டு இருபத்து நால்வர் தலைவர்களாவர். உன்னை முதலாகக்கொண்டு

பன்னிருவர் அரசர் தலைவர்களாவர். வாசுதேவர்கள் ஒன்பதுபேர்; பிரதி வாசுதேவர்கள் ஒன்பதுபேர்; உன்மகன் மரீசி போதனமாநகரத்து அரசனாவான். அவனே முதல் வாசுதேவன். அவன் குலத்தில் மற்றுமொரு வாசுதேவன் தோன்றிப் பிரதிவாசுதேவனாகத் தோன்றிய அச்சுவக்கிரீவனை ஒரு மங்கையின்பொருட்டுக் கொன்று அவன் கையாழியைத் தாங்கி உலகு புரந்தருள்வான்' என்று உரைக்கப்பட்டிருக்கிறது. அக்காளை சுவர்க்க நாட்டினை நீங்கி, நிலவுலகத்திலே போதனமா நகரத்திலே பயாபதி மன்னனுடைய இளைய மகனாகப் பிறந்து திவிட்டன் என்னும் பெயரோடு சிறந்து விளங்குகிறான். அத் திவிட்டனே தங்களுடைய திருமகளாகிய சுயம்பிரபைக்கு உரிமையுடைய தலைவன். அவன் சுயம்பிரபையைத் திருமணம்புரிந்த பின்னர், வாசுதேவனது கூறான அச்சுவக்கிரீவனது உயிரைப் போக்கி அவனது ஆழியைக் கைப்பற்றி வித்தியாதர உலகைத் தாங்களே அரசாளத் தருவான்," என்று கூறினான். சதவிந்து நிமித்திகன் இவ்வாறு கூறியதைக் கேட்ட அரசன் இன்பக்கடலுள் அமிழ்ந்தினான்.

## அரசன் திரும்புதல்

மேலும், நிமித்திகன் அரசனை நோக்கி, "அரசே! நான் கூறியன யாவும் உண்மை. இதற்கு அறிகுறியாகத் திவிட்டன் இன்னும் ஒரு திங்களுக்குள் ஒரு சிங்கத்தின் வாயைக் கிழிப்பான். அதனைப்பார்த்து நான் கூறிய மற்றவைகளெல்லாம் உண்மையே என்று உணர்வீராக," என்று உரைத்தனன். இவற்றையெல்லாங் கேட்ட சடியரசன் பெருமகிழ்வடைந்தான். அச் சதவிந்து நிமித்திகனுக்குச் சோதிமாலை என்று பெயரையுடைய வளநாடு ஒன்றை நன்கொடையாக அளித்தான். நிமித்திகனிடம் விடைபெற்றுக்கொண்டு ஞாயிறு மறையும் அந்திக் காலத்தில் அரண்மனையை அடைந்தான்.

## தன் மனைவிக்குச் செய்தி கூறுதல்

தன்னுடைய மனைவி வாயுவேகை இருக்கும் அந்தப்புரத்தை யடைந்தான். வாயுவேகை எதிரேவந்து

அரசனைத் தொழுதாள். அரசன் அவளைப் புகழ்ந்து பாராட்டினன். தான் நிமித்திகனிடஞ் சென்றமையையும் அவன் சுயம்பிரபையைப்பற்றிக் கூறிய செய்திகளையும் கூறினன். பின்னுந் தன்னுடைய மனைவியைப் பாராட்டிப், பெண்கள் தலைவியே! நல்ல இனியமலர்கள் நெருங்கியிராத பூம்பொழிலும், அழகிய தாமரை மலர்ந்து விளங்காத குளமும், தண்ணிய பிறைத்திங்களைப் பெற்றிராத மாலைக் காலத்தையும் போல்வதாகும்; மக்கட் செல்வத்தினைப் பெற்றிராத நன்மனை.

> "தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
> புக்கிளந் தாமரை நகாத பொய்கையும்
> மிக்கிளம் பிறைவிசும் பிலாத அந்தியும்
> மக்களை யிலாததோர் மனையும் ஒக்குமே."

ஆகவே, நல்லஅரசகுலமென்னும் கற்பகமரம் தலைமகனாகிய பாரரையையும், மனைவியாகிய கிளையையும், மக்களாகிய பூங்கொத்துக்களையும், மூத்தோர்களாகிய தேனையுங் கொண்டு சிறந்து வளரும். நற்குணத்தையும் நற்செய்கையையும் நல்லொழுக்கத்தையும் உடைய அழகிய மக்களைப் பெண்கள் பெறுவது உலகத்தில் அருமையினும் அருமை. முன்செய்த தவப்பயனால் பிறந்த நின்னுடைய திருமகள் நாம் பெறுதற்கரிய பேறாகத் தோன்றியவளாவள். விளக்கானது சிறுத்தும் தனித்தும் இருந்தாலும், அஃது இருளைப் போக்கி யாண்டும் வெளிச்சத்தை உண்டாக்குதல்போல, எல்லாத் திக்குகளிலும் தன்புகழ் மிக்குவிளங்கத் திகழ்கின்றாள். வலம்புரிச் சங்கின் வயிற்றில் தோன்றிய ஆணிமுத்தினைப்போன்ற அரிய பெண்மணியினைப் பெற்றதால் நம் குலம் சிறந்து திகழ்கின்றது. உன் மகள் பாற்கடலில் தெய்வத் தாமரைமலரின்மீது வீற்றிருக்கும் திருமகளேயாவாள். அவள் கடல்நிற வண்ணனாகிய வாசுதேவனுக்கே உரியவளாவள். இவைகளெல்லாம் எனக்கு நின்னால் வந்த சிறப்புக்களாகும்," என்று கூறிப் புகழ்ந்து பாராட்டினன்.

### வாயுவேகையின் பதில் உரை

அரசன் கூறியவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவனுடைய மனைவியாகிய வாயுவேகை உள்ளம மகிழ்ந்து கணவனை வணங்கினாள். 'அரசே! நம் கண்மணியனைய பெண்மணியாகிய சுயம்பிரபை தங்களுடைய திருவருளினாலன்றோ பிறந்தாள்? ஆகவே தம்மாலன்றோ எனக்கு எல்லாப் பெருமைகளும் ஏற்பட்டன? தந்தையினாலன்றோ மக்கள் சிறப்பை யடைகிறார்கள். தாயால் ஆகக்கூடியது என்னவிருக்கிறது?' என்று தானும் பணிமொழி பலவற்றைப் பகர்ந்தாள். இருவரும் அளவளாவி இனிது மகிழ்ந்திருந்தனர். அன்றைய இரவும் அகன்றது.

### மற்றவர்களுக்குச் செய்தி கூறுதல்

மற்றைநாட் காலையில் அரசன் தன்மகன் அருக்ககீர்த்தியையும் அமைச்சர்களையும் வரவழைத்தான். சுயம்பிரபையைப் பற்றி நிமித்திகன் கூறிய யாவற்றையும் கூறினான். தன் திருமகளின் பெருஞ்செல்வப்பேற்றையும், அவளால் தன் குலத்திற்கும் அரசாட்சிக்கும் ஏற்பட்டுள்ள பெருமையையும், திவிட்டநம்பியின் சிறப்பையும் எடுத்துப் பாராட்டிப் பேசினான். செய்தியைக் கேட்டோர் அனைவரும் இன்பக் கடலுள் இனிது திளைத்தனர்.

### தூது அனுப்புதல்

அமைச்சர்கள் அரசனைநோக்கி, 'அரசே! தங்களுடைய செல்வப் புதல்வி செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகளே யாவளென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இனி நாம் செய்யற்பாலது யாதெனின், அத் திவிட்டநம்பியின் தந்தையாராகிய போதனமாநகரத் தரசருக்கு மணவினை குறித்துத் தூது விடுதலே யாகும்' என்றனர். மேலும் தூதுபோதற்கு மரீசியே தக்கவன். அவன் எல்லா நூல்களையும் நன்கு கற்றவன். கற்றவர்கள் கேட்கும் வினாக்கட்குத் தக்கவாறு விடையளிக்கத்தக்க ஆற்றல் பொருந்தியவன். தூதனுக்கு இருக்கவேண்டுவனவாகிய

தன்மைகளும் அமையப்பெற்றவன். அவனே நமது குல முறை வரலாற்றையும் மணவினைச் செய்தியையும் மாண்புற எடுத்துப் பேசும் வன்மையுடையான் ஆவன்,' என்று கூறினர்.

அரசன் அமைச்சர்கள் கூறிய மொழிகளுக்கு உடன் பட்டான். மரீசியை அழைத்தான். தன்கையால் மணவினை குறித்துத் திருமுகம் ஒன்று எழுதினன். அதனை மரீசியினிடம் அளித்து மணவினை இனிது நிறைவேறற் காவனபுரிந்து வருமாறு கூறி விடுத்தான். மரீசியும் மன்னனைப் பணிந்து விசும்பாறுகச் சென்றுன். சுரமை நாட்டை யடைந்து போதனமாநகரத்தை எய்தினன்.

# ௬. மரீசி மணத்தூது செல்லல்

## மரீசி பூம்பொழிலில் இறங்குதல்

போதனமா நகரத்தையடைந்த மரீசி புட்பமாகாண்டம் என்னும் பெயரையுடைய பொழிலில் இறங்கினான். அப்பொழிலின் எழிலை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழில் இனியமணங் கமழ்ந்தது. தேன்மாரி சொரிந்தது. வகுளம், தேமா, சுரபுன்னை, புன்கு, சண்பகம், குரவம், அசோகம் முதலிய மரங்கள் மலர்கள் மலிந்து தண்ணென்றிருந்தது. மல்லிகை, முல்லை, அனிச்சம், மாதவி முதலியவைகளின் மலர்கள் நறுமணத்தை மிகுதியாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. வண்டுகள் இசை பாடுவார் போல மலர்கள்தோறுஞ் சென்று ஒலிசெய்து தேனுண்டுகொண்டிருந்தன. குயில்கள் இனிய குரலில் கூவிக்கொண்டிருந்தன. நாகணவாய்ப் பறவைகள் அவ்வொலிகளைக் கேட்டு இன்பமடைந்து கொண்டிருந்தன. அக்காட்சிகளையெல்லாம் மரீசி பார்த்துக் களித்துக்கொண்டு, ஆங்கொரு பக்கத்திலிருந்த தடாகக் கரையை அடைந்தான். அத் தடாகம் திரைகளாகிய கைகளால் நீர்த் துளியாகிய பன்னீரை இறைத்தது. வண்டுக்கூட்டங்களால் இன்னிசை பாடச் செய்தது. இளந்தென்றலால் சாமரை வீசச் செய்தது. மரீசி தனக்குக் கிடைக்கும் அவ்வியற்கை வரவேற்பைக் கண்டு மகிழ்ந்துகொண்டே அப்பாற் சென்றான். அசோக மரத்தடியில் அமைக்கப்பெற்றுள்ள மணிக்கல் இருக்கையைக் கண்டான். அம் மணிக்கல் இருக்கையின் அரிய வேலைப்பாட்டைக் கண்டு வியந்தான். பயாபதி மன்னனால் விஞ்சையர் தூதனின் வரவை எதிர்பார்த்து அப்பொழிலில் அமர்த்தப்பட்டிருந்த துருமகாந்தன் கண்டான். சில அறிகுறிகளால் விஞ்சையர் தூதுவன் இவனாகத்தான் இருக்கவேண்டுமென் றுணர்ந்தான். மணிக்கல் இருக்கையைக் கண்டு வியந்து நிற்கும் மரீசியிடஞ் சென்று அவன் அடிகளில் மலர்கள் இட்டு வணங்கினான். 'இம் மணிக்கல் இருக்கைமீது எழுந்தருள்வீராக,' என்று பணிவுடன் வேண்டிக்கொண்டான். மரீசி, துருமகாந்தனை

நோக்கி, "இது மக்கள் அமரும் இடமாகத் தெரிய வில்லையே! நம் இறைவன் அருக்கடவுள் கோயில் கொள்ளும் இடம்போலன்றோ காணப்படுகிறது!" என்றான். தருமகாந்தன் மரீசியைப் பார்த்து, "அப்படியன்று; எம் அரசர் பயாபதி மன்னருடைய இளைய புதல்வர் திவிட்ட நம்பிக்கு மணம் பேச ஒரு விஞ்சையர் தூதன் திருமணத் திருமுகங்கொண்டு ஏழு நாட்களுக்குள் வருவான் என்றும், அவன் இப்பொழிலிடை வந்து இறங்குவானென்றும் அங்கத நிமித்திகன் அரசர்க்குப் புகன்றான். எம் அரசர் நும்மை யெதிர்கொள்ளுமாறு இம்மணிக்கல் இருக்கையை அமைத்து என்னையும் இப்பொழிலில் காவலாக வைத்துள்ளார்," என்று இயம்பினன். தருமகாந்தன் சொல்லிய வற்றைக் கேட்ட மரீசி மகிழ்ந்து, அம்மணிக்கல் இருக்கை மீது அமர்ந்தான். தருமகாந்தன் மரீசியைப் பலவகை யாகப் போற்றி மகிழச்செய்தான். பின்னர் விஞ்சையர் தூதனாகிய மரீசியின் வரவைப் பயாபதி மன்னனிடஞ் சென்று தெரியப்படுத்தினான்.

## மரீசியைப் போற்றுதல்

பயாபதிமன்னன் விஞ்சையர் தூதனது வரவைக் கேட்டுப் பெருமகிழ்வடைந்தான். வயந்தமாதிலகை, கலியாணிகை, வயந்தசேனை, கமலமாலதை என்னும் பெயர்களையுடைய கணிகையர் நால்வரை யழைத்து 'விஞ்சையர் தூதனது களைப்பை மாற்றுக' என்று கட்டளையிட்டனன். அக்கணிகையர் பொன் தட்டில் பனிநீர், சந்தனக் குழம்பு, பூமாலை வகைகள், சிற்றுணவு, பேருணவு ஆகியவைகளை எடுப்பித்துக்கொண்டு சென்று, மரீசியின் பக்கத்தை யடைந்தார்கள். அவன்மீது பனிநீரைத் தெளித்துச் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களைப் பூசி, மாலைகளை யணிந்து உணவுகளை உண்ணச்செய்து, விருந்தினரைப் பேணும் வகைகளையெல்லாம் திருந்தச் செய்தார்கள். மரீசி அம்மங்கையர் வழிபாடுகளை யெல்லாம் கண்டு மிகுந்த இன்பமடைந்தான். இதுவே விண்ணவர் உலக போகமென்று எண்ணி மகிழ்ந்தான்.

## விசய திவிட்டர்கள் மரீசியை அழைத்துச் செல்லுதல்

அங்கு அவ்வாருக, அரசன் தன்னுடைய புதல்வர்களாகிய விசய திவிட்டர்களைப் பார்த்து, 'நீங்கள் சென்று விஞ்சையர் தூதனை மிஞ்சிய சிறப்புடன் அழைத்து வாருங்கள்' என்று பணித்தான். அவர்களும் அரசன் கட்டளைப்படி நாற்படையும் புடைசூழ, இருமருங்குங் கவரிவீசப் பட்டத்து யானை மீதேறி மரீசி இறங்கியிருந்த புட்பமாகாண்டப் பூம்பொழிலை யடைந்து மரீசியைக் கண்டார்கள். சிறந்த கோலத்துடன் வந்த திருக்குமாரர்களைக் கண்ட மரீசி இருக்கையை விட்டுத் திடீரென வெழுந்து தன்னிரு கைகளையுங் கூப்பி அவர்களை வணங்கினன். மரீசி தம்மை வணங்கியதைக் கண்ட விசய திவிட்டர்களில் மூத்தவனை விசயன் மரீசியைப்பார்த்து, 'ஐய! அருங்குணமுடைய தாங்கள் எங்களுக்குக் குரவராகவும் விளங்கத்தக்கவராவீர் : மேலும் விஞ்சையின் மிஞ்சிய மேன்மையுடையீர். அவ்வாருகவும் எம்மைப் பணிதல் என்னை ?' என்று கேட்டனன். மரீசி அவ்விளங் காளைகளை அடிமுதல் முடிவரை உற்று நோக்கினன். அவர்களுக்கமைந்துள்ள நல்லிலக்கணங்களையெல்லாம் பார்த்து உள்ளங்களித்தான். அவர்களைப் பார்த்து, 'அரசிளஞ் செல்வர்காள்! நீங்கள் விண்ணுலகை விட்டு மண்ணுலகம் கடைத்தேறும்படி தோன்றியுள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் மக்களுருவைப் பெற்றிருந்தாலும் விண்ணுலகத்தவரே யாவீர்கள். நான் முன்பிறப்பில் நல்வினை செய்திருந்தமையால்தான் இன்று உங்களைக் கண்டு வணங்கும் பேற்றினைப் பெற்றேன்,' என்றுரைத்து மேலும் வணங்கினன். விசய திவிட்டரிருவரும் மரீசியின் கையை அன்புடன் பற்றினர். 'உங்களுடைய போற்றுதலெல்லாம் இருக்கட்டும். எந்தையார் தங்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டுள்ளார். உடனே புறப்படுக! இப்பட்டத்து யானையின்மீது ஏறியருள்க,' என்று வேண்டிக் கொண்டனர். மரீசியை யானையின்மீதேற்றி அழைத்துக் கொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டனர். பல வகை ஒலிக்கருவிகளும் முழங்கின. பாவையர் பல்லாண்டு

பாடினர். வந்தியர் வாழ்த்தெடுத்தனர். மங்கையர் சுண்ணப்பொடியினை நறுமலருடன் கலந்து வாரி வீசினர். மிக்க சிறப்புடன் அரண்மனை வாயிலை யடைந்தார்கள்.

### அரசன் மரீசியை வரவேற்றல்

காவலன் விரைந்து சென்று விஞ்சையர் தூதனும் விசய திவிட்டர்களும் அரண்மனை வாயிலை யடைந்த செய்தியை அரசனுக்கறிவித்தான். அரசன் அமைச்சர்களுடன் அரசியல் மண்டபத்தில் புகுந்து, செம்பொன்னால் செய்யப்பெற்ற அரியணைமீதமர்ந்தான். அமைச்சர்களும் அவரவர்கட்குரிய இருக்கையில் இனிதமர்ந்தார்கள். அரசன் காவலனைப் பார்த்து, 'விஞ்சையர் தூதனையும் விசய திவிட்டர்களையும் உள்ளே அழைத்து வருக,' என்று கட்டளையிட்டான். காவலன் வெளியே வந்து அரசனுடைய கட்டளையைத் தெரியப்படுத்தினான். அனைவரும் உள்ளே புகுந்தனர். விஞ்சையர் தூதன், விண்மீன்களுக்கிடையே விளங்கும் வெள்ளிய திங்களைப் போல் வீற்றிருக்கும் அரசனைக் கண்டு வணங்கினான். அரசன் அவனுக்கமைக்கப்பெற்ற இருக்கையைக் காட்டி அதில் அமரச்செய்தான். நன்மைச் செய்திகளையெல்லாம் கேட்டான். மரீசி மகிழ்ச்சியுடன் சில மொழிகள் பேசினான். பின்னர் இருக்கையை விட்டெழுந்தான். தன் அரசனுடைய வெள்ளிமலையைத் திக்குநோக்கி வணங்கினான். அரக்கு முத்திரை யிடப்பெற்ற திருமுகத்தை அரசன் முன்பு நீட்டினான். அரசன் படிப்போனுடைய முகத்தைப் பார்த்தான். படிப்போன் அரசனுடைய குறிப்பை யுணர்ந்து அத்திருமுகத்தைத் தன் கையில் வாங்கினான். முத்திரை நீக்கி அதில் எழுதியுள்ள பொருளை உள்ளத்திற் பதியும்படி ஊன்றி யுணர்ந்தான். பிறகு, எல்லோரும் அறியும்படி அதனைப் படிக்கலானான்.

### பயாபதிமன்னன் செய்தியுணர்ந்து வியப்படைதல்

"இரதநூபுரத்தை யாளும் சுவலனசடியின் திருமுகத்தைப் போதனமாபுரத்தை யாளும் பயாபதி மன்னன்

காண்க: வீரக்கழலை யணிந்த அரசனுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகுக. தங்களுடைய இளையபுதல்வன் திவிட்டநம்பிக்கு எம் திருமகள் சுயம்பிரபை வாழ்க்கைத் துணைவியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறாள். வலிமை தங்கிய மார்பையுடைய அரசன் தன் மருமகளாகிய இவளை யழைத்துத் திவிட்டனுக்கு மணம் புரிந்திடுக. அனைவரும் இனிது நீடூழி வாழ்க.'' இவ்வாறு படிப்போன் படித்து முடித்தான். பயாபதி மன்னன், "வித்தியாதரர்கள் பல்லாற்றானும் நம்மினும் மேம்பட்டவர்களல்லரோ? அத்தகைய வித்தியாதரர்களுடைய அரசன் நம் புதல்வனுக்குத் தன் திருமகளைத் திருமணஞ் செய்து கொள்க' என்று முடங்கல் விடுத்தது இறும்பூதன்றோ? இத்தகைய பெருஞ்சிறப்பு மண்ணுலகத்து மன்னர் அடையக்கூடியதா? நமது நல்வினை இவ்வாறமைந் திருத்தல் பெரிதும் போற்றக்கூடியதன்றோ?'' என்று இவ்வாறு பலவகையாகத் தன்னுள்ளே யெண்ணி மகிழ்ந்து, விஞ்சையர் வேந்தன் திருமுகத்திற்குப் பதில்கூடப் பகராது தன்னையும் மறந்து செயலற்றிருந்தான் பயாபதி அரசனுடைய உள்ளக்கிடக்கையை உள்ளவாறுணராத மரீசி தவறான எண்ணத்தைத் தன்னுள்ளே கொண்டான். 'நம் அரசர் விடுத்த திருமுகத்தை இவன் மதித்து மறுமொழியொன்றும் உரைக்காதிருக்கின்றான். செருக்கினால் தான் இவன் இவ்வாறு இருக்கின்றான்.' என்று மாறுபாடாக எண்ணினான். அவனுக்குச் சினம் மிகுதியாக மூண்டது. அவன் பயாபதி அரசனைப் பார்த்துப் பலவாறு வசைமொழி வழங்கலானான்.

## மரீசி சினத்துடன் சில மொழிகள் பேசுதல்

"விளங்குகின்ற வேற்படையையுடைய அரச! 'எத்தகையோராயினும் தமக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றினைக் குறித்து, இந்நிலவுலக மனிதரிடம் வந்து சொல்லுவார்களானால், அவர்கள் மனிதரால் இகழப்பெறுவார்கள்' என்னும் உலக மொழி உண்மையாதலை இன்று நீ விளக்கமாகக் காட்டினாய். மலையைப்போல் விளங்குகின்ற

தோளையுடையவனே! நோயினால் வருந்தி மயங்கிக் கிடப்பவர்கள் அமுதம்போலும் சுவையினையுடைய இனிய தீம்பாலைச் சுவைதெரிந்து உண்ணுதல் முடியுமோ? நறுமணம் மிக்க மாலையை யணிந்த வித்தியாதரர்களுடைய செல்வத்தை ஓட்டையுடலையுடைய மக்களால் நுகர முடியுமோ? அறவழியில் நின்று தவமியற்றுந் தக்கோரேயன்றித் தீவினையில் அழுந்திய சிறியோர் பிறவியின் வேரினை யறுக்கும் பெருமையை யுடையவராவரோ? நறுமணம் மிக்க மாலையை யணிந்த வித்தியாதரர்களுடைய நன்கொடையை மறதியினாலே மயங்கி வாழும் மக்களுக்குக் கொடுக்கலாமோ? மும்மதம் பொருந்திய வலிய யானையின் ஆற்றலை யானையின் குட்டியினாலே மதிக்கமுடியுமோ? இந்நிலவுலக மக்கள் தவம்புரிந்தாலும் எம்மவரைப் போலப் பெருமையெய்துதல் இயலுமோ? பொழில்கள் மிகுந்த மண்ணுலகிலே வாழுகிற மக்கள் அறிவுடையவர்களேனும் தகுதியான காரியத்தை அறிபவர்கள் யாருமில்லைபோல் தெரிகின்றது. வெள்ளி மலையின்கண் வாழும் எம் மன்னன் உன்னிடம் தூது விடுத்ததனை, அவனை இகழ்தற்கு ஒரு காரணமாகக் கொண்டு ஒரு மொழியும் உரையாதிருக்கின்றாய் போலும்,'' என்று சினத்துடன் கூறினான்.

மன்னன் பொறுமையுடன் மறுமொழி வழங்கல்:

வெஞ்சினத்துடன் விஞ்சையர் தூதன் மொழிந்தவைகளைக் கேட்ட பயாபதி மன்னன் மிக்க பணிவுடன் மரீசியைப் பார்த்து, "ஐய! நாம் ஒன்றும் பேசாது வறிதேயிருந்ததால் நும் அரசன் தூதினை அவமதித்திகழ்ந்ததாகச் சிறிதும் எண்ணிக்கொள்ளுதல் வேண்டாம். வித்தியாதரர்கள் என்போர் மிகுந்த பெருமையையுடையவர்கள். ஆராயுமிடத்து அவர்கள் தேவரே யாவார்கள். மண்ணுலகில் வாழும் மக்கள் அந்த வித்தியாதரர்களோடு இன்பத் தொடர்ச்சி யெய்துவது மிகவும் அரிது. ஆனால், அமைந்த உடலினையுடைய எம்மிடத்தில் நீ சுவலனசடி மன்னனுடைய ஓலையைக் காட்டி உரைத்தவைகளையெல்லாம் கனவு என்று எண்ணினேமே யல்லாமல், உண்மை

யாக நனவில் நிகழ்ந்த செய்தி யென்று எண்ணினேமில்லை. இவன் 'இதனை யெய்துக' என்று இறைவன் விதித்த படியே நிகழ்வதல்லால் வேறுவகையாக நிகழாது.

"மண்ணுலகில் வாழும் மக்களுக்கு விஞ்சையர் செல்வம் கிடைத்தல் அரிது. அருந்தவம் புரியினும் வித்தியாதரர் பெருமையை இத்தரையோர் அடையார். நீவிர் கூறியபடி நம் பெருமையை ஒட்டையுடலையுடைய மக்கள் ஒரு சிறிதும் உணரார். நம் அரசன் எமக்குக் கொடுத்த சிறப்பினை யெண்ணி நுந் திருமுகத்திற்கு எவ்வாறு விடையளிப்பது என்பதை எண்ணியே ஆராய்ந்து நின்றேம். நம்மை அவமதிக்கக் கருதி மறுமொழி பேசாதிருந்தேமல்லேம்," என்று இயம்பினன்.

பதறியதற்கு மரீசி வருந்தல்

பயாபதிமன்னன் பகர்ந்தவற்றைக் கேட்ட மரீசி, அரசனது பொறுமையையும் தனது சிறுமையையும் எண்ணி நாணினன். அவனது வெகுளி அடங்கிற்று. 'ஆ! ஆ!! என்ன தீவினை! அரசனது கருத்தை அறியாமல் பலவகையான புன்மொழிகளைப் புகன்றேனே' என்று தனக்குள் எண்ணி வருந்தினன். பயாபதிமன்னனை வணங்கினன். தான் புகன்ற கொடுமொழிகளுக்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென்று வேண்டினன். அரசனைப் பார்த்து, 'மன்னர் மன்ன! என் சிறுமைக்குணத்தை என் விரைவுத்தன்மையால் வெளிப்படுத்திக்கொண்டேன். அதனைச் சிறிதும் உள்ளங்கொள்ளற்க' என்று கூறி மேலே மொழியலானன்.

குல வரலாறுகள் கூறுதல்

"வித்தியாதரர்கள் தமது வித்தையினால் அல்லாமல் வேறெவற்றானும் மக்களினுஞ் சிறந்தவரல்லர். அவர்களும் மக்களைப் போன்றவர்களே. யாதும் வேறுபாடில்லை. பவபுரம் என்னும் நகரத்தை யாளும் பவனவேகனுடைய மனைவி வாயுவேகையின் உடன்பிறந்தான் நான். என் பெயர் மரீசி. என்னுடைய தந்தை அளவற்ற கல்வி கேள்விகளையுடைய அஞ்சுமான். என்னுடைய தாய்

கலைமகளினும் மேம்பாட்டினையுடைய அருசிமாலை. நான் என் தாயினிடத்தில் பல கலைகளையும் கற்றறிந்தேன். அப்போது உலக வரலாறுகள் பலவற்றையுங் கற்று, மன்னர் வரலாறுகளையும், வரன்முறைகளையும் உள்ளவாறு நன்குணர்ந்துள்ளேன். அவ்வரலாற்றில் இரண்டொன்றை ஈண்டு எடுத்துக் கூறுகிறேன் ; அமைதியுடன் கேட்பீராக.

முன்னாளில் அரசகுலம் ஐந்துண்டு. அவற்றை யேற்படுத்தி நல்லொழுக்கத்தைக் கொடுத்தருளிய அறவாழி வேந்தன் அடிகளை மறவாது அரசாட்சி புரிந்தருளிய காசி தேசத்தரசன் கச்சன். சுதஞ்சனை என்பவள் அவன் மனைவி. இவர்களுடைய மகன் நமி என்பவன் எல்லா வுலகத்தாராலும் போற்றப்பெறுபவன். அவன் அரச இன்பத்தை வெறுத்து, அறவாழிக் கடவுளுடைய அடிமலரிடத்தில் அமைத்த அன்புடையவனாய் இன்னிசை பாடிப் போற்றினான். அவன் பாடிய பாடல்கள்,

“ அலகிலா ஞானத் தசத்தடங்க நுங்கி
உலகெலாம் நின்னுள் ஒளித்தாயு நீயே
ஒளித்தாயு நீயே உயிர்க்கெலாங் கண்ணாய்
அளித்தாயுங் காத்தாயு நீயேவாழி யறவேந்தே

அழனாறும் வெங்கதிரோன் ஆண வலராது
நிழனாறும் மூர்த்தியாய் நின்றாயு நீயே
நின்றாயு நீயே நிறைபொருள் எல்லைக்கண்
சென்றாயும் வென்றாயும் நீயே வாழி திருமாலே

நிறைதரு கேவலத்தோய் நின்னடியார்க் கெல்லாம்
குறைதலில் இன்பங் கொடுப்பாயு நீயே
கொடுப்பாயு நீயே யெய்ங்குற்றேவல் வேண்டாய்
விடுத்தாயு நீத்தாயு நீயே வென்ற பெருமானே.”

என்பவைகளாம். நமியின் இசையைக் கேட்டுக் கல்லும் உருகிற்று. கானப் பறவைகளும் வானத்தினின்றும் இழிந்து செயல்மறந்தன. மாக்கள் பலவும் இயங்குதலற்று நிலைத்து நின்றன. பட்ட மரங்களும் தளிர்த்தன. இன்னிசை வல்ல கின்னரரும், இன்னலடைந்தார் போலத் துன்னி நின்றனர். தேவர்களும் தம் அமுதவுணவினை மறந்து இவ்விசை யமுதையே நசைமிக வுண்டு களித்தனர்.

அப்போது பாம்புலக (நாகலோக) அரசனாகிய ஆதி சேடன் அவணடைந்து, கடவுள் திருவடிகளைப் போற்றித் தன் செயல்மறந்து, தலைவனையே எண்ணிநின்ற நமியரச னைப் பார்த்து, 'அரசே! அறப்பெருங் கடலாகிய அருகக் கடவுளின் அடிமலரிடத்திலேயே நீ அளவற்ற அன்பு கொண்டு அவரது அளவிலாப் பெருமையை யெடுத்துப் புகழ்கின்றாய். நீ விரும்புவது யாது?' என்று கேட் டருளினன். ஆதிசேடன் கூறியதைக் கேட்ட நமி, 'விண் ணுலகத்தில் வாழும் தேவர்கள் தாம் வேண்டியவற்றை வேண்டியாங்கு அடைவது போல, அடியேனும் இம்மண் ணுலகத்தில் பெறற்கரும் பேற்றினைப் பெற நினைத்தாலும் நினைத்தவாறடையும் மேன்மையை எனக்கு அளித்தருள வேண்டும்.' என்று வணங்கிக் கேட்டுக்கொண்டனன். ஆதிசேடன் அவனுடைய வேண்டுகோளுக்கு இரங்கினான். தேவர்களின் தன்மையை உண்டாக்கவல்ல திருமந் திரத்தை அவனுக்கு உரைத்தருளினான். செல்வ நலங்களெல்லாம் வழங்கினான். 'அரசனாக எக்காலத்தும் அமர்ந்திருப்பாயாக' என்று வாழ்த்துக் கூறினான். பின் னர் தன்னுலகத்தை யடைந்தான். "எண்டிசையினும் மண்டிய புகழையுடைய அந்த நமியரசனின் குலவழி வந்தவனே யாவன் எம்முடைய சுவலனசடி யரசன். ஆத லின், அவனும் மக்கட் டன்மையனே. நீவிரும் செல்வச் சிறப்பாலும் சீர்த்தியாலும் எமதரசனுக்கு ஒப்பாவீர். ஆதலின், நீங்களிருவரும் உறவு முறைகொண்டு கலத்தலில் மறுவியாதும் உண்டாகாது. பாலுந் தேனுங் கலந்தாற் போல இனிமையே உண்டாகும்." என்று உரைத்தான்.

அப்பேது பயாபதியரசனுடைய அங்கத நிமித்திகன் எழுந்து மரீசியைப் பார்த்துப், "பெரு மையிற்சிறந்தோய்! நும் அரசன் குலப்பெருமை யைக் கூறினாய்; எம்முடைய அரசர் குலப்பெருமையை யும் கூறுகிறேன் கேட்டருள்வாயாக; முன்னாளில் உலகமெல்லாம் எவனாற் படைக்கப்பெற்றனவோ, எவன் அவற்றையெல்லாம் காத்துத் தன்னடிப்படுத்தி

ஞனே, எவன் மார்பிடத்தில் திருமகள் சேர்ந்து திகழ்கின்றளோ; எவன் நம்மை நல்லுலகிற் செல்ல அருள்வானே அவனுடைய திருவருளினலே தோன்றியவன் வாகுவலி என்னும் அரசன். அவன் அரசாட்சிபுரிந்து நடந்து காட்டிய வழியினைப் பின்பற்றியே அவனுக்குப் பின்வந்த அரசர்களும் நல்லொழுக்கவழியிலே நின்று நிலவுலகாளும் நன்னெறி மன்னராயினர். அந்த வாகுவலிமன்னன் தனது அரிசாட்சிச்சுமையைத் தன் மகனிடம் கொடுத்து விட்டுக் கயிலையிற்சென்று கடுந்தவம் புரிந்தான். அவனுடைய தவத்தீயின் வெம்மையால் விண்ணும் வெந்து நொந்தது. அவன் அடிகளிற் பெரும்புற்றுப் பற்றி மேலோங்கியது, அப்புற்றில் நஞ்சுடைய பாம்புகள் குடியேறி வாழ்ந்தன. அசைவற்றுநின்ற அவனது உடலைச் சுற்றிக் கொடிகள் படர்ந்தன. அவனது கற்றையான மயிர் முடிச்சுமையில் குருவிக்கூட்டங்கள் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுபொரித்தன. இவ்வாறு அவன் நெடுங்காலம் தவம்புரிந்து இறைவன் அருளால் தேவர்க்குத் தலைவனுயினுன் அவ்வாகுவலி மன்னனது வழியில் வந்தவனே எம்முடைய பயாபதி மன்னனுவான்'' என்று கூறினுன்.

அரச அவையிலிருந்த அனைவரும் இருகுடித் தொடர்பையுங் கேட்டு மெய்ம்மயிர் சிலிர்க்க இன்பக்கண்ணீர் சொரிந்தனர் அருகக்கடவுளின் திருவருட்பெருமையைப் புகழ்ந்தனர். பயாபதி மன்னன் வாய்திறந்து பேசுவதற்கு முன் மரீசி, "அவ்வாறு அருந்தவமியற்றிப் பெரும் பேற்றினைப்பெற்ற வாகுவலி என்னும் நம் குலஅரசர் நம் குல முதல்வனுகிய அரசன் கச்சனுக்கு மருகன் என்று மாபுராண நூல்கள் கூறுவதை நான் நன்கறிவேன். இப்பொழுது இப்பழங்குலத்துத் தலைவர்கள் திருமணவினை காரணமாக ஒன்றுகூட நேர்ந்ததைக்குறித்து என் உள்ளம் பெருமகிழ்வடைகின்றது'' என்று கூறினன்.

### மன்னன் மரீசியைப் புகழ்தல்

மரீசி கூறியதைக் கேட்ட பயாபதி மன்னன் பெருவியப்படைந்தான் இறைவனை உள்ளத்தால் வணங்கி

வாழ்த்தி இயம்புகிறான்: “அறிவிற்சிறந்தோய்! உன்னைப் போல உலக நூல்களும் குலங்களும் குலமுறைகளும் ஆன பல செய்திகளையும், நன்குணர்ந்தோர் எவருமிலர். அரசாட்சி என்னும் பொறிக்கு (இயந்திரத்திற்கு) அமைச்சர்களே கண்கள். மக்களே தாள்கள். தோழர்களே தோள்கள். ஒற்றர்களே செவிகள். நல்லுணர்வு அறநூல்களே. வாய் தூதுவனே.

மந்திரக் கிழவர் கண்ணு
மக்கள்தன் தாள்க ளாகச்
சுந்தர வயிரத் திண்டோள்
தோழராச செவிக ளொற்று
அந்தர வுணர்வு நூலா
அரசெனும் உருவகொண்ட
எந்திர மிதற்கு வாயாத்
தூதுவர் இயற்றப் பட்டார.

அமைச்சருக்குரைத்த அறநெறியும் மிகப்பொருந்தி நின்றானொருவன் தூதுவனாயின், அவன் கண்ணினுஞ் சிறந்தோன் என்பதற்கு ஐயமில்லை. யாதேனும் தீங்கு நேரிடின், அதைப் போக்கற்கான வழிதேடி, அரசனைத் தேற்றிப் பாதுகாத்தற்கு அமைச்சனையொத்த தூதுவனா லன்றிப் பிறரால் ஆகுமோ? நல் இயல்புகளெல்லாம் ஒருங்குசேர அமையப்பெற்ற உன்னைத் தூதுவனாக அடையப்பெற்ற சுவலனசடியரசர் எக்காரியத்தைத்தான் எளிதில் இயற்றார்? அவ்வரசர் எம்மை உறவாக நினைத்து நின்னைத் தூதாக அனுப்பியது எமக்குப் பெறற்கரும் பேறாகும். 'இனி நான் உன்முன் கூறக்கூடியது ஒன்று மில்லை. எல்லாவற்றையும் நீயே நன்குணர்வாய். இன்று முதல் எம் நினைவு விஞ்சையர் வேந்தரிடத்திலேதான் பொருந்தியிருக்கும். இந்நாள்தொடங்கி என் புதல்வர்கள் நின் அரசரின் குற்றேவல் புரிதலுக்குரியவராவார்கள். விரும்பினால் இவர்களை ஆங்கு அழைத்து வேண்டிய பணிகளைப் பெற்றுக்கொள்ளட்டும். அதற்கு யான் யாதும் தடை கூறேன்,” என்றுரைத்தான்.

**மரீசி திரும்புதல் :**

விஞ்சையர் தூதன் பயாபதி மன்னனைத்தொழுது தான் திரும்பிச்செல்லுதலுக்கு அரசனுடைய உடன்பாட்டைக் கேட்டனன். பயாபதிமன்னன் மரீசியால் தாங்கமுடியாத அளவு பொன்னருங்கலன்களை அவனுக்குப் பூட்டிச் செய்ய வேண்டிய வழிபாடுகளையெல்லாஞ் செய்து, தன் அரண் மனையிலும் மற்றைய இடங்களிலுமுள்ள வேடிக்கைகளை யெல்லாம் காட்டி அன்று அங்கேயே தங்கச் செய்து, மறு நாள் பெரியோர் பலருடன் வழியனுப்பினான். மரீசியும் விசும்பாறுகத் திரும்பி இரதநூபுர நகரத்தை யெய்தினான்.

---

## எ. திவிட்டன் அரிமாவை அழித்தல்

### மரீசி தூதில் நிகழ்ந்த செய்திகளைக் கூறுதல்

மரீசி இரதநூபுர நகரத்தையடைந்ததும், அரண்மனை வாயில்கள் மூன்றையுங் கடந்து சென்று, சுவலனசடி மன்னனின் அரசிருக்கை மண்டபத்தையடைந்து, அரசனைத் தொழுது நின்றான். அரசன் தன்னைத் தொழுதுநின்ற மரீசிக்குத் தன்கையால் ஓர் இருக்கையைச் சுட்டிக் காட்டினான். மரீசி அவ்விருக்கையில் அமர்ந்தான். அரசன் மரீசியின் முகக்குறிப்பைப் பார்த்து அவன் சென்றுவந்த காரியம் வென்றியாக முடிந்ததென்று மெய்யறிவாளர்களைப்போல ஐயமறவறிந்தான். மரீசி அரசனைநோக்கித் தொழுது, 'அரசே! நினக்கு வெற்றியுண்டாகுக! வீரக்கழலையணிந்த நின்னுடைய திருவடிகள் வாழ்வதாக! தீயவைகளெல்லாம் கெடுக! நின் புகழ் சிறந்தோங்குக! நீ பணித்த காரியத்தை இனிது முடித்துவந்தேன். மும்மதம்பொழிகின்ற யானையையுடைய அரசர் பெருமானே! இங்குநின்று நான் சென்றது முதல் இதுவரை நிகழ்ந்தவைகளைக் கூறுகிறேன் கேட்டருள்க' என்றுகூறித் தன் செய்திகளையெல்லாம் சாற்றலானான். புறப்பட்டவன்றே போதனமா நகரத்தைச் சார்ந்து புட்பமாகாண்டப் பொழிலில் இறங்கியதைப் புகன்றான். அப்பொழிலில் இடையறாது தேன் துளிகளை மலர்கள் வெளிப்படுத்துவதால் தேனாறு பாய்தலைக்கண்டு வியந்ததைச் செப்பினான். நன்மணம் திகழும் தாமரைத்தடாகக் கரையில் தனக்கு நல்வரவேற்பு அளித்தலுக்காகப் பயாபதிமன்னன் முன் அறிவினால், அணிமணிக் கல்லிருக்கையொன்று அருகக்கடவுளுக்கு அமைக்கப்பட்டாற்போல் அமைந்திருந்ததை அறிவித்தான். அப்போது துருமகாந்தன்போந்து தனக்கு வழிபாடு செய்து அவ்விருக்கையில் அமரச்செய்ததையும் அறைந்தான். பின்னர்த் துருமகாந்தன் தன் வரவினைப் பயாபதியரசனுக்கு அறிவித்ததையும், அரசன் தேவமடந்தையரி

னும் சிறந்த மங்கையர்மூலம் தன்னை உண்டியாலும் பலவகைப் பொருள்களாலும் ஆடல்பாடல்களாலும் மகிழ்வூட்டிக் களைப்பாற்றிப் பெருமைப்படுத்தியதைப் பேசினான். அரசனது ஆணையால் விசய திவிட்டர்கள் தக்க சிறப்புக்களுடன் தன்னை வந்தடைந்து போற்றி இன்மொழிகள் இயம்பியதையும், பட்டத்தியானையின்மீது அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு சென்றதையும் பகர்ந்தான். அரண்மனையிலே அரசிருக்கை மண்டபத்தில் தான் அரசனைக் கண்டமையையும், திருமுகத்தை யளித்தமையையும், திருமணச்செய்தியை யுணர்ந்த அரசன் மகிழ்ச்சிப்பெருக்கால் யாதும் பேசாதிருந்ததையும், அதனைத் தான் தவறாகக்கொண்டு தூற்றியதையும் சொன்னான். தான் தூற்றியதற்கு அரசன் சினங்கொள்ளாமல் பொறுமைகாட்டிப் பேசியதையும், தனக்கு விருந்தளித்து ஆடையணிகலன்களால் சிறப்புச்செய்து பெரியோர்களுடன் வழியனுப்பியதையும் கூறினான்.

மேலும் மரீசியானவன் அரசனைப்பார்த்து, "அரசே நான் பல அரசர்களைப் பார்த்திருக்கிறேன். அந்தப் பயாபதி மன்னனைப்போன்ற உயரிய தன்மைகள் நிறைந்த அரசர்களை யாண்டுங் கண்டதில்லை. அப் பயாபதி மன்னன் கற்றநூல்களின்படி நடப்பவன். பெருங் கொடைச் சிறப்பையுடையவன்; பெருமையிற் சிறந்தவன்; காண்டற்கு எளியன்; நட்புக் கோடலுக்கு அரியன். அம்மன்னனுடைய புதல்வர்களும் சிங்கவேறெனச் செப்பத்தக்க சிறப்பையுடையவர்கள். அவர்களுள்ளும் இளையநம்பியாகிய திவிட்டனுடைய வலிமையையும், அவன் திருமாலைப் போலச் சிறந்தவன் என்பதையும், அவன் நிலவுலகம் முழுமையும் ஆள்வதற்கே மண்ணுலகில் தோன்றி யிருக்கிறான் என்பதையும், அத் திவிட்டநம்பியை அடையும் நங்கை செய்த நல்வினையே நல்வினையென்பதையும் கூறியதுடன், திவிட்டனை மணம் புரியப்போகும் சுயம்பிரபை மிகச் சிறப்படைவாளென்றும், இருகுலமும் இப்பொழுது ஒன்றுபடுதல் நல்வினையே," என்றுங் கூறிமுடித்தான்.

மரீசியுரைத்தவைகளைக் கேட்ட மன்னனும், பிறரும் உவகைக் கடலுள் திளைத்தனர்.

அரசன் மரீசிக்குப் பலவகைச் செல்வங்களையும் பிருதியாகக்கொடுத்து மேன்மைப்படுத்தி அவன் தன் இருப்பிடஞ்செல்ல விடையளித்தான். தான் அமைச்சர்களுடன் சூழ்ச்சிச்சாலையை அடைந்தான். மரீசி தூது சென்றுவந்த செய்திகளை யெல்லாம் விளங்க வுரைத்தான். 'மேல் நாம் செய்யவேண்டியது யாது?' என்று கேட்டான்.

## மேல் நிகழ்வையறியத் தூதனை அமைத்தல்

அமைச்சர்கள் அரசனைப்பார்த்து, "அரசே! நிகழ்வதை யாய்ந்து கூறிய சதவிந்து நிமித்திகன், 'திவிட்ட நம்பி இன்னும் ஒரு திங்களுக்குள் கோளரி யொன்றினைக் கொல்வான்' என்று கூறியிருக்கின்றான் அன்றோ? அதனையும் பார்த்தல் வேண்டும். ஒரு தூதனை மண்ணுலகிற்கனுப்பித் திவிட்டன் சிங்கத்தினைக் கொலைபுரிகிறானா? என்று தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்துகொண்டு மேல் நடக்கவேண்டியவைகளைப்பற்றி ஆராய்வோம்," என்று கூறினர். மன்னன் அவர்கள் கூறியவாறே செய்யலாமென்று ஒருப்பட்டான். ஒற்றன் ஒருவனை நிகழ்வன அறியுமாறு மண் உலகிற்கு அனுப்பினான். அமைச்சர்களும் அரசனும் தத்தம் இருப்பிடமடைந்தனர்.

## அச்சுவக்கிரீவன் இன்ப வாழ்வு

மேற்கூறிய செய்திகளெல்லாம் அவ்வாறிருக்க; உத்தரசேடியில் இரத்தினபல்லவத்தில், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் தனியாட்சி செலுத்தும் அச்சுவகண்டன் செய்தியை இனிக் கூறுவோம். அவன் தன் பெயர்கூறிய அளவில் யாவரும் அஞ்சி நடுங்கத்தக்க வண்ணம் அரசுபுரிந்துகொண்டிருந்தான். அவனுடைய வெற்றிக்கொடி எட்டுத்திக்குகளிலும் பறந்தன. எவருந் தனக்கு இணையில்லை யென்னும் ஆணவம் அச்சுவகண்டன் உள்ளத்தே குடிபுகுந்தது. அரசாட்சிக் காரியத்தில் ஊக்கங் குறைந்தான். மாதர் இன்பத்தையே பெரிதாக எண்ணி

ஞன். எக்காலமும் அவர்களுடைய இன்ப நலத்தையே உள்ளங்கொண்டான். இரவும் பகலும் காமக் கள்ளையே பருகி மயங்கிக்கிடந்தான். இன்ப விளையாடலே யல்லாமல் ஆடல் பாடல்களிலும் அவாக்கொண்டான். தடாகக்கரை, மண்டபம், சோலை, செய்குன்று, வெண்மணல் பரப்பிய விளையாட்டிடம் ஆகிய விடங்கட்கு அழகிய அணங்கனார்களோடு இணங்கிச்சென்று பலவகை விளையாடல்கள் புரிந்தான். களிமயக்கத்தின் மிகுதியால் அச்சுவகண்டனுக்கு ஒன்றுமே தெரியாமற் போய்விட்டது. அச்சுவகண்டன் தன்னை யணைந்து தனக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல்போகவே நிலமகளுக்கு ஊடலுண்டாகிவிட்டது. அச்சுவகண்டனை விட்டுப் பிரிந்துசெல்வதற்குக் காலம் பார்த்துக்கொண்டே யிருந்தாள்.

## நிமித்திகன் அறவுரை

அச்சுவகண்டன் இவ்வாறு அரசாட்சியை மறந்து இன்ப ஆட்சியையே புரிந்துகொண்டிருத்தலைக் கண்ட சதவிந்து நிமித்திகன் என்பான் அரசனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்துதற்கு எண்ணினான் தக்ககாலம் பார்த்திருந்த அவன் ஒருநாள் அரசனையடைந்து, "அரசே! நிலவுலகம் முதலிய எல்லா வுலகமுந்தொழப் பகையிருள் அகற்றி வெற்றிமாலை யணிந்து தனியாணை செலுத்துபவனாக வாழ்கின்றனை. அறுவகை உட்பகைகள் ஆகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் இவைகளையும் வெற்றிகொண்டாலல்லவோ சிறந்து விளங்குவாய்; உட்பகையை வென்றவர்களே சிறந்தவர்களாவர்; அவர்கள் வாழும் நாட்டில்தான் எல்லா வளங்களும் இனிது சிறந்து விளங்கும்; அறுபகை வெல்லாது நேர்மையற்ற வழியிலே நடக்கும் அரசர்களைவிட்டுத் திருமகள் நீங்குவாள். அறிவாகிய ஞாயிற்றினலே மலர்ந்த செல்வமாகிய செழிய தாமரைமலர், செருக்காகிய பனிநீர் வீழ்தலால் வாடியழியும். 'ஒருவன் செல்வச் செருக்காற் காமக்கடலில் ஆழ்ந்து உள்ளத் தியக்கமுறும்போது அத்தகைய தியக்கத்தினல் கெட்டவர்களை எண்ணுக' என்று அறநூல்கள்

அறிவுறுத்துகின்றன. அறநூல்களையெல்லாம் நன்குணர்ந்த நினக்கு யான் கூறுவது குற்றமாகும். அக் குற்றத்தின் பொருட்டு நீ சினங்கொள்ளினும் கொள்க. நான் இதுபோது உன்னை இடித்துரைக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது. நான் சொல்லும் உறுதி மொழிகளைச் சிறிதே நீ செவிகொடுத்துக் கேட்டருள்வாயாக," என்று கூறினான். சதவிந்து நிமித்திகன் இவ்வாறு கூறக்கேட்ட அச்சுவகண்டன் 'அப்படியே கூறுவாயாக' என்று கட்டளையிடுதலும், சதவிந்து நிமித்திகன் சாற்றுவானாயினான்.

"அரசர்க்கரசே! நிலவுலகத்தின்கண் பலவகைச் செல்வ நலங்களாலும் சிறப்புடையதாய் ஒரு நகரம் இருக்கின்றது. அதனைப் 'போதனமாநகரம்' என்று சொல்லுவார்கள். அந்நகரத்தை யாளும் பயாபதி யரசனுக்கு விசயன் என்றும் திவிட்டன் என்றும் பெயரையுடைய இரண்டு மக்கள் உளர். அவர்களுள் திவிட்டன் என்பவன் உனக்கு வெல்லுதற்கரிய பகையாக முடிவானென்று சோதிடநூல் வன்மையால் யான் அறிந்தேன். அவனால் உனக்குக் கேடுண்டாகும் என்பதை உனக்குக் கூறும் பொருட்டே யான் இப்போது நின்னிடத்திற்கு வந்தேன். நீ மேல் நடக்கவேண்டியவைகளை நன்கு ஆராய்ந்து செய்வாயாக," என்றான்.

### அச்சுவகண்டன் சினம்

நிமித்திகன் கூறியவற்றைக் கேட்ட அச்சுவகண்டனுக்கு அளவற்ற சினமுண்டாயிற்று. இரு கண்களிலும் சினத்தீ மிகுந்து விளங்கிற்று. கையோடு கையைப் புடைத்தான். பற்களை "நெறுநெறு" வெனக் கடித்து நகைத்தான். நச்சுப் பாம்புபோற் சீறி நவிலலானான். "நிமித்திக! நின்னுரை நன்றாக இருக்கின்றது! விஞ்சைய மன்னர் பலரையும் வென்று, எஞ்சாப் புகழுடன் இலங்குகின்ற என்னை எதிர்க்க நினைப்பாரும் இருக்கின்றனரோ? சிறிய விசிறிக்காற்றால் மேருமலை அசையுமோ? இழிந்த மக்கட் பிறவியினரோ என்னைப் பகைத்தெதிர்க்கும் இயல்பு

பொருந்தியவர்கள் ? எண்குல மலைகளையும் இனிது பிளக்கும் வலிமையையுடைய யானையின் கொம்புகள் வாழைத்தண்டினால் மழுங்குதலுறுமோ ? என்னுடைய தோள்வலிமையை மக்களோ அறிபவர் ? உலகமுடிவுக் காலப் பெருங்காற்று ஓங்கி யடிக்கும்போது முகிற் கூட்டங்கள் சிதறாதிருக்குமோ ? எதிரற்ற எனது சினப் பாய்ச்சலுக்குமுன் நிலைத்து நிற்பவர் யார் ? தேவர் தலைவனுடைய ஏவலால் அவனது வச்சிரப்படை மலைகளை யழித்துப் பொடிப்படுத்துவதுபோல, என்னுடைய ஆணையால் எனது உருளைப்படை பகைவரைப் பொடிப்படுத்தி விடுமென்பதை நீ உணராயா ? நீ கூறியதை ஆராயுமிடத்தில், இச்செய்தியில் மட்டும் உனது சோதிடம் பொய்யாகிவிடுமென்றே நான் எண்ணுகிறேன். 'அறிஞர் உரையை அரசன் கேட்கவில்லை' என்னும் பழமொழி ஏற்படக் கூடாது. ஆகையால் நீ அமைச்சர்களுடன் கலந்து இதனைப் பேசி ஆராய்ந்து தகுந்தவாறு செய்க'! என்று கட்டளையிட்டனுப்பினான்.

## அமைச்சர்கள் சூழ்ச்சி

நிமித்திகனால் செய்தியறிந்த அமைச்சர்கள் ஒன்று கூடி எண்ணமிட்டனர். எரியும் தீப்பொறி எவ்வளவு சிறிதாயினும் பற்றுக்கோட்டைப் பெறுமானால், உலகம் முழுவதையுமே சுட்டு நீராக்கும். அதைப்போலப் பகைசிறிதாயினும் இடமுங் காலமுங் கிடைத்தால் வலிய பகையையும் வென்றுவிடும். ஆகையால் இப்பகையை உடனே தொலைக்காமல் வளரவிட்டால் நம்மை வென்றுவிடும். 'முள்மரம் சிறிதாக இருக்கும்போது நகத்தினாற்கூடக் கிள்ளி யெறிந்துவிடலாம் ; அது வளர்ந்து முற்றிவிடுமானால் எளிதாக ஒழிப்பது அரிது,' என்று முடிவு கட்டினார்கள். பின்பு அமைச்சர்களுக்குத் தலைவனாகிய அரிமஞ்சு என்பவன் அரசனை அணுகி, "அரசே! சதவிந்து நமக்கு உளதாகக் கூறும் பகை உண்மையா என்பதை முன்னர் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அவ்வாறு தெளியாமல் யாதுஞ் செய்தலாகாது. நமக்குப் பகையல்லாதவர்களைப் பகையாக்

இக் கொள்ளுதலும், தீயவர்களை நட்பினர்களாக எண்ணிக் கொண்டிருத்தலும் பின்னால் துன்பந்தருவதாகும்.

'பகைய லாதவ ரைப்பகை யாக்கலும்
நகையில் தீமனத் தாரைநண் பெண்ணலும்
முகையின் வேய்ந்தமென் மொய்ம்மலர்க் கண்ணியாய்;
மிகையின் மற்றவை பின்னை வெதுப்புமே.'

ஆகையால், அவர்கள் பகைவர்களா அல்லரா என்பதை முன்னர் அறிந்து துணிந்துகொள்ளுதல் வேண்டும். அவ்வா றறிதற்கு வழி யாதெனின்; சுரமைநாட்டரசனாகிய பயாபதி மன்னனிடம் நாம் சிலரை யனுப்பித் திறைப் பொருள் கேட்போம். மன்னன் மறுக்காமல் திறைப் பொருளைக் கொடுப்பானாகின் நமக்குப் பகைவனாகான். திறைப்பொருளைத் தர மறுத்தானாயின் அவனைப் பகைவனாக எண்ணித் தொலைத்துவிடுவோம். இதுவே செய்யத் தக்கது," என்றனன்.

## திறைப்பொருள்பெறத் தூதுவர் செல்லுதல்

அரசனும் அவ்வாறே செய்வோமென்று கூறித் தூதுவர் சிலரை அழைத்து, 'பயாபதி மன்னனிடஞ் சென்று திறைப்பொருள் வாங்கி வாருங்கள்,' என்று கூறித் திருமுகங்கொடுத்தனுப்பினான். அத்தூதர்களும் போதனமாநகரம் போய்ச்சேர்ந்தார்கள். சேர்ந்தவர்கள் நகரத்தினுட் சென்று நகர வீதிகளின் ஒழுங்கையும் மாடகூடங்களின் விளக்கத்தையும், மக்கள் அணிந்துள்ள அணிபணிகளின் மிகுதியையும் பார்த்து, விஞ்சையர் செல்வமும் ஒரு செல்வமோ என வெறுப்படைந்தனர். அரண்மனை வாயிலையடைந்து வாயிற்காப்போனைப் பார்த்து, 'காவல! விஞ்சையர் உலகை யாளும் அச்சுவகண்டனுடைய தூதர்கள் சிலர் வந்திருக்கின்றனர் என்று அரசனுக்குத் தெரிவிப்பாயாக' என்று கூறினர். காவலனும் அவ்வாறே சென்று அரசனுக்குத் தெரிவித்தான் அரசன் காவலனைப் பார்த்து, 'அவர்களை இங்கே வரவிடுவாயாக' என்று கட்டளையிட்டனன். காவலன் அரசன் கட்டளையைத் தூதர்களுக்குத் தெரியப்படுத்தினான். தூதர்கள் உள்ளே

சென்று அரசனைக் கண்டு வணங்கி அச்சுவகண்டனுடைய திருமுகத்தைக் கொடுத்தனர். அரசன் அதனைப்பெற்று வாசிப்போனிடம் கொடுத்து வாசிக்கச் செய்தான். தூதர்களும், அத்திருமுகத்திலுள்ளபடி "ஆயிரங்கோடி பொற்காசு, ஆயிரம் நாடகக்கணிகையர், முத்து, பவழம் முதலிய மணிக்குவியல்கள், உயர்ந்த பட்டாடைகள், யானைத்தந்தங்கள், வெண்சாமரைகள் இன்னும் இங்குள்ள புதுமையான பொருள்கள் முதலியவைகளை எம்முடைய அரசனுக்குத் திறைப்பொருளாகத் தந்தனுப்புக. இது நாங்களாகக் கேட்பதன்று, யாவரினும் மேம்பட்ட அரசர்கள் தலைவனான அச்சுவகண்டராசனின் கட்டளை!" என்று படித்தும், வாயினாலும் கூறினார்கள்.

பயாபதி திறைகொடுத்தல்

தூதர்கள் சொல்லிய மொழியினைக் கேட்ட பயாபதி மன்னனுக்குச் சினம் மூண்டது. ஆயினும், அவன் அதனை வெளிக்குக் காட்டாமல் உள்ளத்திலேயே அடக்கிக் கொண்டான். அரசன் அவ்வாறு அடக்கிக்கொண்டது யானை தன்மீது ஒருவன் எறிந்த கல்லைத் திருப்பி வீசுவதற்குக் காலங் கிடைக்கும்வரை கடைவாய்க்குள் அடக்கி வைத்துக்கொண்டதை ஒத்திருந்தது. அரசன் தனக்குள் எண்ணமிடலானான். சிறந்த அறிவும், உயர்ந்த குலமும், நல்ல அழகும், அளவற்ற கல்வியும், பெருந்திறலும் ஆகியவைகளை ஒருவன் அடைந்திருப்பினும் மற்றொருவருக்குக் குற்றேவல் செய்து, வாழுமாறு வினைப்பயனுக்குத் தக்கபடி இறைவனால் அமைக்கப்பட்டிருப்பான். அன்றியும், தம் அறிவு வலிமையின் சூழ்ச்சியால் பெருமுயற்சிகள் செய்து தேடிய பொருளினை நுகர்தற்கு எண்ணியிருக்கும்போது அதனைப் பறித்து மற்றவர் களிக்கும் வினையினை யாவரால் விலக்க முடியும்? புகழினாலும் வலியினாலும் மிகுந்த அரசனது உள்ளத்தை மகிழச்செய்து அவனுடைய அருளால் உயிர் வாழக் கருதும் சிற்றரசர்களுள் யானும் ஒருவனாகிறேன். இவ்வாறிழிந்தவனாகிய என்னைக்காட்டினும் இழிந்த அறிவின் உலகிலுண்டோ? எனது சிறுமையைக் கண்டு

எவரே இகழாதார்? பழவினைப்பயன் என்னை இவ்வாறு செய்யுமாயின் யான் வேறு என்ன செய்யமுடியும்? இந்த அச்சுவகண்டனுக்கு என்னுடைய முன்னோர்களுந் திறைப் பொருள் செலுத்தி யிருக்கின்றனர் என்பதையுங் கேள்விப் பட்டுள்ளேன். என் முன்னோர்களாலும் தள்ளப்பெறாத அவனுடைய ஆணையை, நான் மட்டும் எவ்வாறு ஒதுக்கிவிட முடியும்? அச்சுவகண்டனோ அளவிடற்கரிய பேராற்ற லுடையவனென்று பலரும் பகரக் கேட்டுள்ளேன். ஆகவே, அவன் கேட்குந் திறைப்பொருளைக் கொடுத்து நட்புக் கொள்ளுவதே நனிசிறந்த செயலாகும், என்று தன் உள்ளத்திலே ஆராய்ந்து முடிவுசெய்துகொண்டு தன் எதிரிலுள்ள தூதர்களைப் பார்த்துத், "தூதர்காள்! அச்சுவகண்டன் கட்டளைப்படி அவன் குறிப்பிட்டுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் அளிக்கின்றேம். அவற்றை நீங்கள் அரசனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதுடன், யாம் கூறும் இனியமொழிகளையுங் கூறுங்கள்" என்று கூறினான்.

பிறகு, தான் திறைகொடுப்பதைத் தன்னுடைய மக்களாகிய விசய திவிட்டர்கள் உணர்வார்களானால் சினம் மிகுந்து தடுத்து விடுவார்களென்று நினைத்துத் தூதர்களை விரைவில் அனுப்பிவிட வெண்ணினான். அச்சுவகண்டன் திருமுகக் கட்டளைப்படி, ஆடல்மகளிர் ஆயிரவர், ஆயிரங் கோடி பொற்காசு, ஒன்பதுவகை மணிக்குவியல்கள், யானைக்கோடு, அகில், சாமரை முதலிய அரும்பொருள் களையும், மற்றும் பல விலையுயர்ந்த ஆடையணிகலன்களை யும் அச்சுவகண்டன் உள்ளம் உவக்குமாறு கொடுத்தான். தூதுவர்களுக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களையும் அவர் கள் உள்ளம் உவக்குமாறு செய்தான். பல இனியமொழி களையும் அச்சுவகண்டனுக்குக் கூறினான். பின்னர் அவர் கள் தம் உலகுசேறற்கு உடன்பாடுங் கொடுத்தான். விஞ்சையர்கள் அரசன் அளித்த திறைப்பொருளையும் ஆடன்மகளிரையும் கொண்டுபோய்ச் சேர்த்தலுக்கு ஆவன புரிந்தார்கள். பொருட்குவியலையும் மாதர்களையும் தங்

னுடைய விமானத்திலே ஏற்றித் திரையிட்டு மறைத்துக் கொண்டிருந்தார்கள்.

### விசய திவிட்டர்கள் திறைப்பொருளைப் பிடுங்கிக்கொண்டு தூதர்களை அனுப்புதல்

இங்கு இந்நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்ந்துகொண்டிருக்குங்காலை விசய திவிட்டர்கள் வெளியே சென்றிருந்தனர். விஞ்சைய தூதர்கள் விமானத்திற்குத் திரையிட்டு மறைக்கும்போது விசய திவிட்டர்கள் அவ்விடத்திற்கு வந்துவிட்டனர். அவர்கள் தங்களுடைய பொருட்குவியலும் ஆடன்மகளிரும் விமானத்திலேற்றி மறைக்கப்படுதலைக் கண்டார்கள். உடனே திவிட்டன் அங்கு நின்றவர்களைப் பார்த்து, "இவர்கள் யாவர்? இங்கிருந்த நம்முடைய இப்பொருள்களையும் இம்மாதர்களையும் இவர்கள்பால் கொடுத்தோர் யாவர்? நாங்களிங்கு இல்லாதகாலையில் நிகழ்ந்தது யாது?" என்று கேட்டான். திவிட்டன் கேட்டதற்கு எவரும் பதிலுரைத்தார் அல்லர். திவிட்டன் சினத்தைக்கண்ட அவர்கள் யாது நேரிடுமோ என்னும் அச்சத்தால் நடுங்கிநின்றனர். அப்போது அவ்விடத்திலே ஒரு குறத்தி நின்றிருந்தாள். அவள் பூதம் போன்ற தோற்றமுடையவள். எதற்கும் அஞ்சா இயல்பினையுடையவள். அவள் திவிட்டனைப் பார்த்து, "ஐய! விஞ்சைய ருலகினுள்ள உத்தரசேடியை அச்சுவகண்டன் என்னும் ஆணையுருளை யுருட்டுவோன் அரசாட்சி புரிகின்றான். அவன் எண்டிசையுந் தன்னாணை செல்லத்தக்க புகழ் படைத்தவன். அவன் இன்று திறைவாங்கி வரும்படி இத்தூதர்களை உம்முடைய தந்தைபால் அனுப்பிவைத்தான்; அத்தூதர்களே இவர்கள்; அரசன் அளித்த திறைப் பொருள்களே இப்பொருள்கள்; இதுதான் இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி" என்று பணிவுடன் கூறினாள்.

திறை யென்ற சொல் காதுகளில் விழுந்த அளவில் திவிட்டனுக்கு அளவற்ற சினம் உண்டாகியது. மணிமுடியிலிருந்து முத்துக்க ளுதிர்ந்தாற்போல நெற்றியிலிருந்து வியர்வைத்துளிகள் உதிர்ந்தன. கண்கள் சிவந்து

நீரைச் சொரிந்தன. படத்திலுள்ள உயிர்மணியின்மேல் அடிபட்ட பாம்பைப்போல அவன் சீறினான். கண்களில் நின்றுந் தீப்பொறி யெழுந்து நாற்புறமும் சிதறச் சின நகை நகைத்தான். "எம் அரச வாழ்க்கையின் பெருமை இதுவோ? உலகத்தில் உழவுத்தொழில் புரிந்து பலரை யும் பணிந்து வயிறுவளர்க்கும் மக்களைப்போல நாமும் வேறொருவருக்கு அடிமைத்தொழில் புரிந்து அவர் கேட்ட திறைப் பொருளைக்கொடுத்து உயிரைச் சுமந்துவாழும் வாழ்க்கை நன்றாகவிருக்கின்றது! நாங்கள் உங்களுக்குத் திறை கொடுத்தால் நாடாள்வோம்; இன்றேல் அழிவோ மெனின், எங்களுடைய தோள்வலியாலுந் தாள்வலியாலும் வாள்வலியாலும் யாது பயன்? கலங்கிய அறிவினையுடைய விஞ்சையர்காள்! உங்களுடைய அரசன், தன் பார்வை யினாலேயே நஞ்சினைப் பரவச்செய்து கொல்லுங்கொடுந் தன்மையுடைய 'பார்வை நஞ்சு' (திட்டிவிடம்) என்னும் பாம்பினுடைய படத்தின் நடுவிலிருக்கும் மணியைக் கொள்ள நினைத்த அறிவற்றவனைப் போன்றவன். மிகுந்த படைப்பெருக்கினாலும் வலியினாலும் எம்முடைய அரும் பொருளைப் பெறுதல் அரிதினும் அரிது. முற்காலத்தில் ஆற்றல் குன்றியவர்களாகவிருந்த எம்முடைய முன்னோ ரிடத்தில் அச்சுறுத்தித் திறை வாங்கியதைப்போல எம்மை யும் அச்சுறுத்தித் திறைவாங்க எண்ணாமல், இனிமேல் ஒழுங்காக உயிர்வாழக்கடவீர். அல்லது நும் அரசன் திறைவாங்க எண்ணினால் மலைமீது உட்கார்ந்துகொண்டு வாங்குவதென்ன? இங்கு அவனையே நேரில்வந்து வாங்கிக் கொள்ளுமாறு கூறுவீர்களாக. அவ்வாறு திறைபெறுவ தற்கு நும்மரசன் இங்கு வருவானாயின், அவனுக்கு யான் விண்ணக பதவியையும் கொடுக்கிறேன். வீணாகப் பெண் களைப்போலப் பலமொழிகளைக் கூறிப் பயன் என்ன? திறைகொடுக்க மறுத்தவர்களிடத்தில் செய்யவேண்டியதி யாதோ அதனை யெம்மிடத்துச் செய்யுமாறு சென்று கூறு வீர்களாக" என்று அத் தூதர்கள் அஞ்சுமாறு கூறினான். தூதர்கள் நாண மிக்கடைந்தவர்களாக இப்பகை நம் முடைய அரசனுக்குக் கடுமையாக மூண்டிருக்கிறதென்று

திரும்பிச் சென்றார்கள்; பொருள்கள் பொற்களஞ்சியத்தையடைந்தன. ஆடன்மாதர்கள் அந்தப்புரத்தையடைந்தனர்.

## தூதர்கள் தலைமை அமைச்சனிடம் செய்தி கூறல்

திரும்பிச்சென்ற தூதர்கள் தங்களுடைய அரசனாகிய அச்சவகண்டனிடஞ் சென்று, நிகழ்ந்த செய்தியைக் கூறுவதற்கு மிகவும் அஞ்சினார்கள். சமயத்திற்குத் தக்கபடி காரியங்களைச் சூழ்ந்துசெய்யும் தலைமையமைச்சனாகிய அரிமஞ்சு என்பவனைக்கண்டு, தாங்கள் பயாபதிமன்னனிடஞ் சென்று திருமுகங் கொடுத்ததையும், அரசன் திறைப் பொருள் கொடுத்ததையும், அரசிளங் குமரனாகிய திவிட்டன் அவற்றைப் பறித்துக்கொண்டு கூறியவற்றையுங் கூறினார்கள். தூதர்கள் சொல்லியவற்றைக்கேட்ட அரிமஞ்சு 'இச்செய்தியை நம் அரசன் அறிவானாயின் அளவற்ற சீற்றங்கொள்வான். இப்பகையினை ஒழிக்குமாற்றை நாமே யெண்ணுவோமென்று நன்கு ஆராய்ந்து பார்த்தான். திவிட்டன் மிகுந்த இளைஞனாக விருக்கின்றான். நன்மை தீமையைப் பகுத்தறியும் ஆற்றலுடையவனல்லன். நன்கு எண்ணிப்பாராமல் தூதுவர்களைக் கடிந்துபேசித் திறைப் பொருளைப் பிடுங்கியிருக்கிறான். சூழ்ச்சியொன்றினால் இவனை வெல்லவேண்டுமென்று முடிவுசெய்தான். அரிகேது என்னும் பெயரினையுடைய விஞ்சையன் மாயைகள் செய்வதில் வல்லவன். அந்த அரிகேதுவை அரிமஞ்சு அழைத்தான். நடந்தவைகள் எல்லாவற்றையும் நவின்றான். மேற்செய்யவேண்டியவைகளையும் விளக்கமாகக் கூறினான். அரிகேதுவை அரிமா வடிவங்கொள்ளுமாறு கட்டளையிட்டான்.

## அரிகேது மாயச் சிங்கமாதல்

அமைச்சன் ஆணையை அரிகேது மேற்கொண்டான். ஒளிவீசும் தீம்பிழம்பினை ஒழுங்குபடுத்தினால் ஒத்த பிடரி மயிரினையும் மலைகளையுங் கிழித்துப்பிளக்கும் வலிய நகங்களையும், பிறைத் திங்களைப்போன்ற வன்மையான பற்

களையும், தீப்பொறி வெளிச்சிதறும் இரண்டு கண்களையும், கோடையிடிபோற் குமுறும் பேரொலியினையும் உடைய தான சிங்கத்தின்வடிவத்தை யெடுத்தான். இமயமலையைக் கடந்து சிந்துநதி பாயும் சுரமைநாட்டை யடைந்தான். மண்ணும் விண்ணும் மயங்கவும், எண்வகை மலைகளும் உடைபட்டுத் தகரவும், ஏழ்கடலும் அலைவீசிக் கரைபுரண்டு கலங்கவும் தன் பேழ்வாயைத்திறந்து பேரொலி செய்தான். அப் பேரொலியின் அதிர்ச்சியால் ஆண்டுள்ள காடுகள் யாவும் பொடியாயின. விலங்குகள் பலவும் அறிவழிந்து சோர்ந்தன. களிற்றோடு பிடிகள் கையெடுத்து மெய் கலங்கிப் பிளிறின. பெரிய பாறைகளெல்லாம் புடைக்கப் பெற்ற பதர்களைப்போலப் பறந்தன. இப்பேரொலியைக் காதிற்கேட்ட மக்கள் இடியொலியைக்கேட்ட பாம்பைப் போல மயங்கிச் சோர்ந்து வீழ்ந்தனர்.

## திவிட்டன் செய்தி உணர்தல்

அரிமஞ்சு என்னும் அமைச்சன் முன்னர்த் திறைப் பொருள் வாங்கும்பொருட்டுப் பயாபதிமன்னன்பால் தூதுசென்ற விஞ்சையர் நால்வரையும் அழைத்தான். “நீங்கள் மீண்டும் போதனமாநகர் போய்த் திவிட்டனைக் கண்டு அரிமாவின் செய்தியை அறிவித்து வாருங்கள்,” என்று கட்டளை இட்டான். அவர்களும் அமைச்சன் கட்டளைப்படியே போதனமாநகர்போய்த் திவிட்டனைக் கண்டு செய்திகூறப் புறப்பட்டனர். தூதர்கள் சுரமை நாட்டையடைந்து போதனமாநகருக்குப் போனபோது விசய திவிட்டர்கள் நால்வகைப்படையும் புடைசூழ ஊர் வலம் வந்துகொண்டிருந்தனர். தூதர்கள் திவிட்டனைக் கண்டு, “ஓ இளவரசே! உன் தந்தை தந்த திறைப்பொருளை நீ தடுத்துப் பறித்த செய்கையையும் கடுத்து மொழிந்த மொழியையும் எம் அரசன்பாற் சென்று தெரிவித்தோம். அவன் ‘நன்று நன்று’ என்று கூறி நகைத்துச் சினந்தனன். நாங்கள் அதுகாலை, ‘இவ்வாறு செய்தவன் மிக இளைஞனாதலின் சிறுபிள்ளைத்தன்மையால் அறியாது செய்தானென்று உரைத்தோம். ஆகவே, அவன் சினந்தணிந்தான்.

அவன் தன்னுடைய பெருமையையும் வலியையும் மதித்துத் தான் ஒரு சிறுவனுடன் சென்று போர்புரிவது தக்கதன்று என்று முடிவுசெய்தான். மேலும், எம்மைப் பார்த்து 'நீங்கள் திரும்பவும் போதனமாநகரத்திற்குப் போய், நமது திறைப்பொருளைத் தடுத்துப்பறித்த சிறுவனைக் கண்டு, 'உன்னுடைய நாட்டை யழிக்கும்படி ஓர் அரிமாவினை அனுப்பியுள்ளோம். நீ வலியுள்ளவனாகின் அதனையெதிர்த்துக் கொன்று வெற்றிபெறுக' என்று கூறிவரும்படி எம்மையனுப்பினான். இதனை நீ நன்குணர்வாயாக," என்று கூறினார்கள்.

## விசய திவிட்டர்கள் காடு சேறல்

தூதர்கள் சொல்லியவற்றைக் கேட்ட அளவில் திவிட்டனுக்குச் சினம் பொங்கியது. தன் பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்து, "இவர்கள் கூறியபடி கோளரியொன்று நாட்டிற் புகுந்து கொலைத்தொழில் புரிந்து திரிகின்றதோ?" என்று வினவினான். சிலர் திவிட்டனைப் பார்த்து, "ஆம் ஐய! இந்தச் சிந்துநாட்டில் ஆற்றல்மிக்க அரிமா ஒன்று புகுந்து பல வுயிர்களையுங்கொன்று கூற்றைப்போல் திரிகின்றது. அதனையணுக எவருக்கும் வன்மை இல்லை. முகிலு மஞ்சப் பேரொலி செய்யும் அவ்விகன்மா மலைமுடியிலுள்ள முழை யொன்றில் உறைகின்றது," என்றனர். உடனே திவிட்டன் தூதர்களைப்பார்த்து, "நான் இப்போதே சென்று என்னுடைய இரண்டு கைகளையுமே படைக்கலன்களாகக் கொண்டு அவ்வரிமாவழிய அதன் முழைபோன்ற வாயைப் பிளப்பேன். அவ்வாறு பிளவாதொழியின் உங்கள் அரசன் முன் சிறியனென்று இகழ்ந்து கூறியபடி சிறியவனேயாகக்கடவேன்," என்று சூள்மொழி சொன்னான். தன்னைத் தொடருதற்கு எண்ணி நின்ற நால்வகைப்படைகளையும் தன்பின்னே வருதல் வேண்டாமென்று தடுத்து விட்டு அரிமாவுறையும் வரையை நோக்கிப் புறப்பட்டான். தன் இளவல் தனியனாகச் செல்வதைக்கண்ட விசயன் தானுந் துணையாகப் புறப்பட்டான். இருவரும் கால்நடையாக மலைப்பக்கத்தை யடைந்தனர்.

### மாய அரிமா மறைதல்

மாய அரிமா, மன்னன் மைந்தர்களைக் கண்டது. உலகங்களெல்லாம் நடுங்கும்படியாகப் பேரொலி செய்தது. திவிட்டன் தானும் அப்பொய்ம்மா மெய்யாக நடுங்கும் வண்ணம் பேரொலி செய்தான். அப்பேரொலியால் அசையும்பொருள் அசையாப்பொருள் ஆகிய எல்லாம் தந்நிலை குலைந்து தடுமாறுதலையடைந்தன 'பெரிய உலகம் வெடித்ததோ; அன்றித் தேவர் தலைவன் தன்னுடைய வச்சிரப் படையால் மேருமலையை இடித்துப் பொடிசெய்தானோ' என்று ஐயமடைந்து தேவர்களும் கலங்கினார்கள். பொய்ம் மாவாக நடித்துநின்ற அரிகேது உடல் நடுங்கி ஓடினான். திவிட்டன் அப்பொய்யரிமாவைப் பின்தொடர்ந்து ஓடினான். திவிட்டன் சென்ற விரைவால் அவனுடைய கால்கள் நிலத்திற்படியவில்லை. திவிட்டனின் விரைவான ஓட்டத்தைக்கண்டு தேவர்களும் வியந்துநின்றனர். எட்டுத்திக்குகளும் தட்டுக்கெட்டுத் தடுமாறின. திவிட்டனின் விரைவால் மரங்களும் வேரற்று அவனைப் பின்தொடர்ந்தன. விலங்குகள் தஞ்செயலற்றுக் கலங்கித் துன்புற்றன. விண்ணிற்பறக்கும் புட்களும் அறிவுசோர்ந்து மண்ணில் வீழ்ந்தன மலைமுடிகள் திவிட்டனுடைய கால்விரலின் நுனி பட்டமையால் நொறுங்கிப் பொடியாயின. காட்டிலுள்ள காட்டுத்தெய்வங்கள் ஏதோ தீமை நிகழ்வதற்கு இது முன் அறிகுறி என்று எண்ணி நடுங்கி நாற்புறமும் ஓடின. அரிகேது அப் பெருமலைமுடியிலுள்ள முழையொன்றிற் புகுந்து மறைந்தான்.

### மெய்ச்சீயம் ஒன்று ஒழிதல்

அரிமா முழையினுட் புகுந்து மறைந்ததைக் கண்ட திவிட்டன் முழைவாயிலில் இருந்துகொண்டு உலகம் முழுவதுஞ் செவிடுபட்டுக் கலங்கும்வண்ணம் பேரொலி செய்தான். அப்போது அம்முழையினுள் உண்மையான அரிமாவொன்று நன்றாக உறங்கிக்கொண்டிருந்தது. அந்த மெய்ம்மா திவிட்டனுடைய பேரொலியைக் கேட்டு உறக்கங்கலைந்து எழுந்து வெளியே வந்தது. திவிட்டனைக்

கண்டு மிகுந்த சினங்கொண்டது. தன் கண்களில் நின்றுந் தீப்பொறி பறக்கக் கூரிய நகங்களை நீட்டி ஆவென வாயைத் திறந்து வாலையுயர்த்தித் திவிட்டனது மார்பைநோக்கிப் பாய்ந்தது. அவ்வரிமாவின் சீற்றத்தையும் பாய்ச்சலையுங் கண்ட தேவர்கள் தங்களுடைய கைகளாற் கண்களைமூடி உடல்நடுங்கினர். திவிட்டனோ அவ்வரிமாவிற்குச் சிறிதும் அஞ்சினானில்லை. தன்மேற் பாய்ந்துவரும் அரிமாவின் மேல் தானும் உயரவெழுந்து பாய்ந்தான். அதனுடைய பிடரியின்மீது உதைத்துக் கீழே தள்ளினான். கூரிய பற்களமைந்த அதனுடைய மேல்வாயையுங் கீழ்வாயையும் தன்னுடைய கைகளினாலே பற்றிக் கிழித்தெறிந்தான். மிகுந்த வலியினையுடைய அவ்வரிமா குருதியைக்கக்கி இறந்தொழிந்தது. ஆயிரக்கணக்கான உயிர்த்தொகை களை அழித்தொழிக்கும் அவ்வரிமா இவ்வாறு மிக வெளி தாகத் திவிட்டனாற் கொலைசெய்யப்பட்டமையைக் கண்டு விண்ணவரும் வியந்தனர். தம் வாயின்மீது விரல்வைத்து மருட்சியோடு பார்த்தனர். பலவாறாகத் திவிட்டனது ஆற்றலைப் புகழ்ந்தனர். அரிமா இறந்தபோது விசயனும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான். திவிட்டன் விசயனை வணங்கி, "ஐய! நான் அவ்வரிமாவைக் கிழித்துக் கொன்று விட்டேன். இனி நகரத்திற்குத் திரும்பலாம்," என்றனன். விசயன் தன் இளவலுடைய ஆற்றலைக்கண்டு உளம் மிக மகிழ்ந்தான். தம்பியைப் பலகாலுந்தழுவி மகிழ்ந்தான். "நாம் இம்மலையின் அடிவாரத்தின் இயற்கைக்காட்சிகளை இனிது கண்டு களித்துப் பின்னர்ச் செல்வோம்," என்று சொல்லினான். இருவருஞ்சேர்ந்து காட்டின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழலாயினர். விசயன் காட்டின் காட்சிகளையெல்லாம் திவிட்டனுக்குக் காட்டுவானாயினான்.

## காட்டுவளங் காண்டல்

"பறவைக்கூட்டங்களின் ஒலி, எப்பொழுதும் நீங்கா துள்ள பொழில்கள் நான்கு பக்கங்களினும் சூழ, நடுவண் நீர்நிலைபோல விளங்கும் பளிங்குப்பாறையின் அழகினைப் பார். கருமை நிறத்தையுடையனவாய் எப்போதும் இனிய

நீர்த்துளிகளைப் பொழிந்துகொண்டு வெண்மையான தந்தங்களின் ஒளியோடு விளங்கிக் குமுறிப்பிளிறுவன முகிற் குலங்களல்ல யானைக்கூட்டங்களே. மேலும் அந்தப் பக்கத்திலே பார்; வெண்மையுடைய கவரிமானின் கூட்டங்கள் தமது மயிற்கற்றைகளை மேலே உயர்த்தி அணி அணியாக அம்மலைச் சாரலில் ஏறும்பொழுது வெண்ணிற முகில்கள் அங்குப் படிந்தாற்போல விளங்கும் அழகினைக்கண்டு உளம் மகிழ்வாயாக. அந்தக் கரும் பாறையினிடத்திலே அரிமா ஒன்றினால் மத்தகம் பிளக்கப் பெற்று மாய்ந்த யானையொன்று கிடக்க, நாற்புறங்களினும் அதன் தலையினின்றும் உதிர்ந்த முத்துக்கள் சிதறிக்கிடக்க, அவ்வானையின் கோடொன்று பக்கத்திற்கிடந்து, நீல விண்ணினிடைக் கொண்மூ வொருபுறமிருப்ப, மீன் கூட்டத்திடையே விளங்கும் இளம்பிறைபோல விளங்கு தலைப் பார்ப்பாயாக. எக்காலத்தினும் மாறாது முகிற் கூட்டங்கள் மூடிக்கிடத்தலால் இரவினையல்லாமல் பக லினைக் கண்டறியாத பெருமலைச் சாரலில் மலையருவிகள் புரண்டு ஓடிவருதலால் எவரும் அவ்விடங்களில் திரியார் கள். கருங்கற்றூண்கள் விழுந்து கிடத்தலைப்போல் மலைப்பாம்புகள் பெரிய யானைகளைக் கவளங்களாக விழுங்கி, ஒரு பக்கத்திலே அசைவற்றுக் கிடக்கின்றமையைப் பார். பலவுயிர்களையும் கொன்று திரியும் புலிகளும், கரடிகளும், மதயானைகளும், அரிமாக்களும் கூட்டங் கூட்டமாகத் திரிகின்றன பார். இவைகளெல்லாம் நம்மைத் தவிர மற்றவர்களை வருத்தும் வலியுடையன. இவற்றால் நமக்கு இடையூறு ஒருசிறிதும் இல்லை. மரகதப் பாறையொன்றின் மேலே ஏழிலைம்பாலைப் பூவொன்று வண்டினம் இரங்க விழுந்து கிடப்பது, தாமரையிலை பொருந்திய குளத்தில் தேன் இனம் இசைபாட மலர்ந்த வெண்டாமரை விளங்கு தலை நினைப்பூட்டுவதைப் பார். நீர் அரமகளிர், சூர் அர மகளிர், தேவர், விஞ்சையர், கின்னரர் ஆகியோர் விளை யாடும் இடங்களும் இவையே. வண்டினால் தொளைக்கப் பட்ட மூங்கிலொன்று காற்றின் இயக்கத்தால் வேய்ங்குழ லிசையினை வெளிப்படுத்த, அதன் அடியிலுள்ள மாணிக்

கப் பாறை யொன்றின்மீது மயிலொன்று தன் தோகையை விரித்தாடத், தேனினங்கள் பாட, முகில்கள் முழவைப் போற் குமுறப் பரத நாட்டியம்போல் விளங்குவதைப் பார்.'' என்று விசயன் திவிட்டனுக்கு மலைவளங்கள் பல வற்றையுங் காட்டினான். இருவருந் தமது நகரை நோக்கித் திரும்பினர். திரும்பி வரும்போது விசயன் திவிட்டனை நோக்கி, 'உலகில் வாழும் உயிர்த்தொகைகளுக் குண் டாகும் இன்னல்களை நீக்குவதே மன்னர்களின் கடமை யாகும். கற்றவர் துறவிகள் முதலானோருக்குத் துன்பம் யாதேனும் நேர்ந்தால் அதனைப் போக்காதிருக்கும் அரசன் பெற்ற வுடம்பினால் யாது பயன்? மன்னுயிர்கள்படுந் துன் பத்தினைப் பார்த்தும் தம் வாழ்வையே பெரிதாக நினைக் கும் அரசர்களின் பேராண்மை அலியினுடைய அழகு போல வீணாக அழியும். நம் நாட்டிற்குப் பெருந்துன்பஞ் செய்து திரிந்த அரிமாவை அழித்துக் காத்த நின்னைப் போலத் தனக்கு நேரும் இடையூற்றைப் பொருட்படுத் தாது பிறர் துன்பங் கண்டு வருந்திக் காப்பவர்களுடைய புகழல்லவோ இந்நிலவுலகில் என்றும் இனிது விளங்கும். ஒருவனுக்குக் கூறிய உடல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று எழுவகைப்பட்ட பொருள்களால் அமைக்கப்பெற்ற இப் பரு உடல்; மற்றொன்று புகழாகிய உடல்; முற்கூறியது வினைப் பயனால் வந்து அழியும். பிற்கூறியது நல்வினைப்பயனால் உண் டாகிச் சிறந்து என்றும் அழியா இயல்பினை யுடையது'

ஒருவனது இரண்டு யாக்கை
    ஊன்பயில் நரம்பின் யாத்த
உருவமும் புகழும் என்றுஆங்கு
    அவற்றின்ஊழ் காதது வந்து,
மருவிய உருவம் இங்கே
    மறைந்துபோம் மற்ற யாக்கை,
திருவமர்ந்து உலகம் ஏத்தச்
    சிறந்துபின் நிற்கும் அன்றே.

என்றிவ்வாறு பல அறவுரைகளையும் எடுத்துக் கூறிக் கொண்டே சென்றனன். இருவரும மாலைப்போதில் போதனமாநகரத்தை யெய்தினர். அமைச்சர்கள் நால்

வகைப் படைகளோடும் அரசிளஞ் செல்வரை எதிர்கொண்டனர். வணங்கி வாழ்த்தி யானையின் பிடரியில் ஏற்றி நகர் வலஞ் செய்வித்தனர். நகரமக்கள் பலரும் விசய திவிட்டர்க்கு வாழ்த்துக் கூறி அயினிநீர் சுற்றி மங்கலம் பாடினர். விசய திவிட்டரிருவரும் அரண்மனை வாயிலை நெருங்கினர். அரசன் தன்னுடைய புதல்வர்களை உள்ளே அழைத்து வருமாறு கூறினன். அரசிளஞ் சிறுவர்களும் தம் தந்தையையடைந்து வணங்கினர். உடன்பாடு பெறுமல் அரிமா வேட்டைக்குச் சென்றதற்காகச் சினந்தால் யாது செய்வதென்று அஞ்சி நின்றனர். மன்னன் தன்னுடைய மக்களை மார்புறத் தழுவி உச்சி மோந்து மகிழ்ந்தான். அவர்களுடைய தலையிலே காட்டுச் சருகுகள் படிந்திருத்தலைக் கண்டான். அவ்வாறு காட்டுச்சருகுகள் படியக் காரணம் யாது? என்று கேட்டான். அரசனை விசயன் அடிவணங்கி, “எம் ஐய! பனிமலைப் பக்கத்திலிருந்து வலிமிக்க அரிமா ஒன்று நமது நாட்டிற் புகுந்து, பலவுயிர்களையுங் கொன்று வருத்தியது. அதனை அச்சுவகண்டன் தூதுவர் சிலர் வந்து சொல்லிச் சென்றனர். இளவல் திவிட்டன் பனிமலைப் பக்கஞ் சென்று அவ்வரிமாவை வாய்கிழித்துக் கொன்றான். அவனோடு அடியேனும் ஆண்டுச் சென்றேன். பின்னர் மலைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்துவிட்டு இங்கு வந்து சேர்ந்தோம். இதனால்தான் எம் குஞ்சியில் காட்டுச் சருகுகள் படிந்தன” என்று கூறினான். மன்னன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். மறுபடியும் மக்களை மார்பாரத் தழுவி மகிழ்ந்தான். மாளிகைக்குச் செல்லுமாறு பணித்தான். அரிமாவைத் தம் மக்கள் அழித்த செய்தி அரசனுக்குப் பெருமகிழ்வை யளித்தமையின் உவகைக் கடலுள் அமிழ்ந்தான். அரிமாவை யழித்த அரசிளஞ் செல்வரும் தம் இருக்கையை யெய்தினர்.

## அ. திவிட்டன் திருமணம்

### திருமணத்திற்குப் புறப்படுதல்

வானின்கண்தோன்றும் குழவித்திங்கள், மலைமுழையி னின்றும் வெளிப்பட்டாற்போன்ற பற்களையும், வலிமை யினையுமுடைய அரிமாவைத் திவிட்டன் வாய்கிழித்துக் கொன்ற செய்தியைத் தூதுவன் வாயிலாகவுணர்ந்த சுவ லனசடியரசன் உவகைக் கடலுள் ஆழ்ந்தான். கரிய பெரிய கண்களையுடைய சுயம்பிரபையைத் திருமாலின் கூறுகிய திவிட்ட நம்பிக்கே திருமணஞ் செய்துகொடுப் பேன் என்று முடிவு செய்தான். தன்னுடைய அமைச் சர்களோடும் உறவினர்களோடும் எண்ணியாராய்ந்து திரு மணத்திற்காகுங் காரியங்களைச் செய்யலானான்.

திருமணத்தை மண்ணுலகிற்குச் சென்று போதனமா புரத்திலேயே நடத்துவதென்று முடிவு செய்தான். தான் சென்று திருமணவினையை இனிது நடத்தித் திரும்பும் வரையிலும் இரதநூபுரச் சக்கரவாள நகரினைப் பாதுகாத் தற்குத் தக்கார் யாவரென்று ஆராய்ந்தான். தன்னுயிரி னுஞ் சிறந்த நண்பர்களாகிய வர்த்தமானத்து அரசன் பிரீதி வர்த்தனன், கந்தர்வ நகரத்தரசனான விருககடி, கந்தமாதன அரசன் திவாகரதேவன் சக்கிரவாள அரசன் வச்சிரதாடன், தேவரவண அரசன் இரமியதரன், விசயகூடத் தரசன் வேக மாரதன், கிருதமாதன அரசன் கருடாங்கதன், சோபனநகர அரசன் சித்திரரதன், ஆகிய எண்மர்களையும் அழைத்து இரதநூபுர நகரைக் காக்கும்படி ஏற்பாடுசெய்தான். தன் னுடைய நால்வகைப் படையினையும் அழகுபடுத்திக் கொண்டு வருக என்று கட்டளை பிறப்பித்தான். படைத் தலைவர்களும் படையினைப் பண்ணுறுத்திக் கொணர்ந்தார் கள். அமரபுர அரசனும் சடியரசன் இளவலுமாகிய சுவ லனரதனும் சடியரசன் மருகனாகிய அரிபுர அரசன் வியாக் கிரரதனும், சடியின் மகனாகிய அருக்ககீர்த்தியும் தத்தமக் குரிய நால்வகைப் படைகளுடனும் வந்துகூடினார்கள்.

அப் படைப்பெருக்கின் பாரத்தைத் தாங்கவியலாமல் நிலமும் ஒருபுடை நெளிந்தது. அரசன் தன் மகள் ஏறிச் செல்வதற்குப் பொன்னாலும், ஒன்பதுவகை மணிகளாலும் விமானம் ஒன்று மிக வியக்கத்தக்கமுறையில் அமைக்கச் செய்தான். அதில் பலவகை மணிகளும் பதிக்கப் பெற்றிருந்தமையின் வானவில்போல விளங்கிற்று. அதன் நாற்புறங்களிலும் முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. பட்டால் இயற்றப்பெற்ற பலநிறக் கொடிகளும் நடுவே பொன்னிறச்சூலங்கள் ஒளிரவும் அவ்விமானத்தின் முடி விளங்கிற்று. கந்தருவர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர், மிதுனர் முதலியோரின் அழகிய வடிவங்கள் அவ்விமானத்தின் பல பகுதிகளிலும் தக்கவாறு அமைக்கப்பட்டுத் திகழ்ந்தன. அவ்விமானத்தின் ஒளி, கண்டோர் கண்களைக் கவர்வதாக விருந்தது. அதன் ஒளிக்குக் கூசிய கதிரவனும் கண்புதைத்துத் சென்றான். அவ்விமானத்தை ஒட்டி அமைக்கப்பெற வேண்டியவைகளையும் அழகுற அமைத்தனர். மண்ணுலகினும் விண்ணுலகினும் இவ்விமானத்திற் கிணையில்லையென்று சொல்லும்படி விளங்கிற்று அவ்விமானம். பேரழகுடன் திகழ்ந்த விமானத்தைக் கண்டு சுவலனசடி மன்னன் மிகமகிழ்ந்தான்.

அரசன் சுயம்பிரபையை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். அவன் கட்டளையை அரசி வாயுவேகைக்கு ஏவலர் உணர்த்தினர். அவள் தன் மகள் சுயம்பிரபைக்கு அறிவித்தாள். சுயம்பிரபை பஞ்சணையினின்றுமிறங்கி ஐவகைத் தாயரும் சூழத் தன் நற்றாய் இருக்கும் அரண்மனையை அடைந்து, தாயினைப் பணிந்து போற்றினாள். வாயுவேகை தன்மகளைத் தழுவி மகிழ்ந்தாள். பலவகை நறுமணங்களூட்டப்பெற்ற நன்னீரால் நீராட்டினாள். மெல்லிய ஆடையால் ஈரம் ஒற்றினாள். மிக விலையேறப் பெற்ற பொன்னாடை புனைந்தாள். பாரமான அணிகலன்களைச் சுயம்பிரபையினுடைய கொடியிடை பொறாது என்று விலக்கினாள். மிக வொளிதங்கிய அரிய அணிகலன்கள் சிலவற்றைமட்டும் அணிந்தாள். அவ்வணி

கலன்கள் சிலவேயாயினும், பெருமையால் பல அணி கலன்களை யணிந்தாலன்ன பெரும் பேரழகுண்டாயிற்று. காமன் கைவாளென விளங்கும் இருகண்களுக்கும் நஞ் சூட்டுவாள்போல மையெழுதினாள். எட்டாம் நாட் பிறையையொத்த வட்டந்தங்கிய நெற்றியில் அழகிய மணிப் பொட்டிட்டாள். மற்றும் பலவகையான அழகு கள் செய்தாள். தன்னுடைய அரண்மனையிலே வைத்துச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்தாள். கணிதநூல் வல்ல நிமித்திகர் நல்லவேளை நெருங்கியதை அவட்குத் தெரியப் படுத்தினர். அரசனும் தன் மகளை விமானத்திலேறப் பணித்தான்.

சுயம்பிரபை தன்னுடைய தாயார்களோடும், தோழி மார்களோடும் விமானத்தில் ஏறினாள். அழகுமிகுந்த ஈராயிரம் கன்னிப்பெண்கள் வேலும் வாளும் ஏந்திச் சுயம்பிரபையைக் காத்துச் சென்றனர். சுயம்பிரபை அன் பினோடும் வளர்த்துவந்த கிளி, பூவை, மான் முதலியவை களும் அவளுடன் விமானத்திற் சென்றன. சுயம்பிரபையி னுடைய ஏவன்மகளிர் அவள் விளையாடும் பந்து, கழல் முதலியவற்றையும், ஆடை அணிகலப் பேழைகளையும், நறுஞ்சாந்துச் செப்புக்களையும், நறுமலர்த் தட்டுக்களையும் தாங்கி அவ்விமானத்திற் சென்றனர். அளவற்ற படைகள் நான்கு பக்கங்களினும் சூழப், பலவகை ஒலிக்கருவிகளும் ஒலிக்க, அரசயானையின் பிடரியின்மேல் வைத்த அம்பாரி யிலே சுவலனசடிமன்னன் அமர்ந்து புறப்பட்டான். மற்றையோர்கள் தத்தமக்குரிய ஊர்திகளிலே, ஏறிக் கடல் முழக்கத்திற்கொத்த பேராரவாரத்துடன் விண்வழியாகச் சென்றனர். எல்லோரும் அவ்வாறு செல்லும்போது சுயம்பிரபையினுடைய உயிர்த்தோழி அமிர்தப்பிரபை வழியி லுள்ள வியத்தகு காட்சிகளையெல்லாம் விளக்கிக் கூறு வாளாயினாள்.

### வழியில் உள்ள சிறப்புக்களை விளக்கிக் கூறல்

"நங்கையர் தலைவியாகிய மங்கை! ஈண்டுக் காணப் பெறுகிற யாறு நம்மலைக்கு மேலுயர்ந்த பொன்மலையின்

சாரலினின்றிறங்கும் கங்கையாறுகும். அதன் இருகரை களிலும் கற்பகப் பொழில்கள் அழகுபெற விளங்குவதைப் பார். விண்ணின்கண் மிக உயரத்தில் நாம் செல்லுகிறபடி யால் அப்பொழில்கள் மிகச் சிறியனவாக நம் கண்களுக் குக் காணப்படினும், அவைகள் மிகப் பெரியவைகளாகும். இக்கங்கையாறு ஒலிக்கின்ற பலவகைப் பறவைக்கூட்டங் களும் வண்டுக் கூட்டங்களைப் போலப் பக்கங்களிற் பொருந்த, மலையினின்றுவருஞ் சந்தனக்கட்டைகளைத் தன் அலையாகிய கைகளால் சாந்தரைக்கும் பெண்போலக் கரையிலரைத்து நுரைகளாகிய சந்தனக் குழம்பினை வழித்தெறியுங் காட்சியைப் பார். இவ்வாறு கீழ்கடலிற் சென்று சேருமளவும் விரைந்துசெல்லும் தன்னுடைய போக்குச் சிறிதும் குறைவுபடாது. இந்தப் பக்கத்தில் விளங்கும் அந்த யாறு அதே பொன்மலையில் தோன்றி நமது மலையிலுள்ள முழையின் வழியாய் வெளிப்பட்டு, வள்ளல்களைப்போலப் பொன்னையும் மணியையும் இருபுறங் களிலும் வீசிச் சிந்துகின்ற சிந்து நதியாகும். அந்த ஆறு திரைகளாகிய கைகளால் நுரையாகிய மலர்ச்செண்டினை வீசி விளையாடும் அழகையும் பார். இவ்வியாறு மேல் கடலிற்சென்று கலப்பது.

"தேனொடு பால் நெய் ஆகியவற்றைக் கலந்தாலொத்த மொழியினையுடையாய்! விண்ணின்கண் நம்முடைய படை கள் அதிர வியங்குதலால் முகிற்கூட்டங்கள் வாய்விட் டலறுகின்றன. முகில் முழக்கத்தைக்கேட்டு யானைக் கன்றுகள் அஞ்சுகின்றன. அக்கன்றுகளைப் பாதுகாத் துக்கொண்டிருக்கும் பெரிய யானைகள் அடங்காச் சினங் கொண்டு பிளிறுகின்றன. தொங்கலணிந்த கூந்தலையும் இனிய மொழியினையுமுடைய அணங்கே! ஆங்கு மலைகளைப் போலக் காணப்பெறுபவை உண்மையில் மலைகளன்று. வெண்மருப்பிரண்டுடைய நடைமலைகளாகும். அவைகள் பெரிய மலைகளைக் குத்தித் தோண்டி விளையாடுதலால் அம் மலைகள் பிளந்து இருபக்கமுஞ் சரிந்து அணிகலப் பேழை களைக் கவிழ்த்தாற்போல ஒளிபரப்பும் ஒன்பதுவகை மணி

களைச் சிதறிக்கிடக்கும் அழகினைப் பார். பசிய கண்ணை யும், சிவந்த முகத்தினையும், பெரிய கைகளையுமுடைய ஆண் யானைக் கூட்டங்கள் தம்மையடுத்துப் பிடிகளும் உடன் வரச்சென்று, பெரிய மலையருவி நீரினைப் புடைத்து நீர் விளையாடல் புரிந்து செம்மணிப்பொடியினை வாரித் தம் மத்தகத்தின்மீது வீசியாடுதலானே, அப்பொடிகள் சிதறி மலைமுடிகளெல்லாம் குங்குமம் அப்பினாற்போன்ற அழ கைக் காட்டும் காட்சியைக்கண்டு மகிழ்வாயாக."

### திருநிலையகப் பொழில்

இவ்வாறு தோழியானவள் வழியிலுள்ள வளங்கள் பலவற்றையும் சுயம்பிரபைக்குக் காட்டினாள். யாவரும் சிந்துநதி பாயும் வளவயல்கள் நிறைந்த சுரமை நாட்டை யடைந்தனர். பேரொளி பரப்பும் போதனமாநகரத்தைச் சேர்ந்த திருநிலையகம் என்னும் பொழிலில் இறங்கினார்கள். அச்சோலையின் அழகினைக் கண்டு வியந்து அதுவே தாங்கள் தங்குவதற்குத் தக்கவிடமென்று முடிவுசெய்தார் கள். யானைகளையும் குதிரைகளையும் அங்குள்ள மரங்களிற் பிணித்தனர். பல மாடங்களோடு அரசனுக்குத் தங்கு மிடம் அமைத்தனர். அதனைச் சுற்றிலும் மற்றவர்களுக்கு அணி அணியாக இடங்கள் அமைத்தனர். மற்றொருபுறத் தில், அரசிக்கு அழகிய மணிமண்டபங்களும் ஆடரங்கும் பொற்கூடமும் பள்ளியம்பலமும் அருகன்கோயிலும் அமைத்தனர். சுயம்பிரபைக்குக் கன்னிமாடம் ஒன்றை யமைத்தனர். அதைச்சுற்றி மதிலமைத்துப் பாதுகாப் புச் செய்தனர். அக்கன்னிமாடத்தைக் கன்னியர்பலர் கண்ணை இமைகாப்பதுபோலக் காத்துநின்றனர். சுயம் பிரபை விமானத்தை விட்டிறங்கி அக்கன்னிமாடத்தை யடைந்தாள்.

### பயாபதி மன்னன் செய்தி உணர்தல்

அரசன் முதலிய அனைவரும் இவ்வாறு திருநிலையகப் பொழிலில் இனிதமர்ந்திருக்கும்போது, மரீசியானவன் பயாபதியரசனுடைய அரண்மனையை யடைந்து, சுவலன சடியரசன் மணவினையைக் குறித்துத் தன்மகளுடனும்

மற்றையோருடனும் வந்து திருநிலையகப் பொழிலில் இறங்கியுள்ள செய்தியைக் கூறினாள். மரீசி கூறிய நற் செய்தியைக் கேட்ட பயாபதிமன்னன் மிகுந்த வியப் படைந்தான். மகிழ்ச்சியால் அவனுடைய உடல் பூரித்தது. தன்னருகிருந்தவர்களைப் பார்த்துப் போதனமாநகர மக்கள் அனைவரும் பொன்னணிபூண்டு புத்தாடையணிந்து மணக்கோலங்காண்டற்கு எழும்புமாறு பறையறைவிக்கச் செய்தான். மேலும் நகரம் முழுவதையும் அழகுபடுத்து மாறுங் கட்டளையிட்டான். யாண்டுந் தோரணங்கள் நாட்டவும், நிறைகுடங்கள் வைக்கவும், எண்வகை மங்க லங்களை இனிதமைக்கவும், நறுமணமாலைகளை மறுகெங் கும் தொங்கவிடவும் ஆணையிட்டான். இரவலர்களின் அவாக்கெடும்படி அரும் பொருள்களை வாரி வீசச்செய் தான். அருகனுடைய கோயிலில் திருவிழா நடத்தக் கட்டளையிட்டான். மற்றை நாட்டரசர்களை யழைத்து வர ஒற்றர்களை ஓட்டினான். சுயம்பிரபையைக் காணத் தக்க மாதர்கள் தம்மைப் புனைந்துகொள்ளவும், அவரேறிச் செல்வதற்கு இளம்பிடிகளை அழகுபடுத்தவும் அவர்கட்குக் காவலாகப் படைக்கலமேந்திய வீரர்கள் சூழ்ந்து செல்ல வும் பணித்தான். திருமணச் செய்தியைக் கூறிய மரீசிக்கு ஆடையணிகலன்களை மிகுதியாக அளித்துப் பெருஞ் சிறப்புச் செய்தான். அவன் தன்னுடன் திருநிலையகப் பொழிலகத்திற்குச் செல்லலாமென்று கேட்டுக்கொண் டான்.

## பயாபதி திருமணத்திற்கு ஏற்பாடு செய்தல்

பின்னர் பயாபதி மன்னன் தன்னுடைய அமைச்சர் களை அழைத்து, 'விஞ்சையருலக வேந்தனாகிய சுவலன சடிக்குத் தான் செய்யத்தக்க சிறப்புக்கள் யாவை?' என்று கேட்டான். அமைச்சர்கள், 'அரசே! விஞ்சையர்கள் நற்குலப் பிறப்பினாலும் நற்பண்பினாலும் நமக்கு நிகரான வர்களேயாவர். தோள்வலிமையில் நமக்கு மேலானவர் கள். அவர்கட்கு எத்தகைய சிறப்பினையும் வரையறை யின்றிச் செய்தலே மாண்பாகும். சிறப்பினை எவ்வளவு

மிகுதியாகப் புரியினும் குற்றமாகாது' என்று மொழிந்தனர். அரசன் அமைச்சர்களை நோக்கி, 'விஞ்சையருலக வேந்தன் தன் அருமைத் திருமகளை நம்முடைய திவிட்டனுக்கு மணஞ்செய்தற்கு இங்குக் கொண்டுவந்த பெருஞ் சிறப்பானும், நற்பண்பும், நற்செய்கைகளும், நல்லறிவும் மிகுந்த நீவிர் எனக்கு அமைச்சர்களாக அமைந்த சிறப்பினாலும், என்னினும் அருந்தவம் புரிந்தார் உலகில் எவருமிலர்' என்று கூறி மகிழ்ந்தான். தனது பட்டத்து யானை ஒன்று நீங்கலாக மற்றைய யானை, குதிரை முதலிய ஊர்திகளை அழகுபடுத்திக்கொண்டு வருக என்று கட்டளை பிறப்பித்தான். பாகர்கள் கட்டுத்தறியினின்றும் யானைக் கூட்டங்களை வெளிப்படுத்தினர். ஓடை முதலிய அணிகலன்களை யணிந்து ஒப்பனை செய்தனர். தேர்ப்பாகர்கள் தேர்களை அழகுபடுத்திக் குதிரைகளைப் பூட்டிக் கொணர்ந்தனர். அணிமணிக் கோவைகள் ஒளிரக் குதிரைகளைப் பண்ணுறுத்திக் குதிரைப்பாகர்கள் தெருவில் நிறுத்தினர். காலாட் படைஞர்கள் பூணத்தக்கன பூண்டு வாள், வேல் முதலிய படைக்கலமேந்திய கையினராய் மலர்த் தொங்கல்கள் தாங்கி எங்கணும் நெருங்கிச் சூழ்ந்தனர்.

பயாபதியரசன் தன்னுடைய அமைச்சர்களையும் மரீசியையும் யானைகளின்மேல் ஏறித், திருநிலையகப் பொழிலகஞ்செல்ல விடையளித்தனன். தன்னுடைய அரண்மனைப் பெரிய அலுவலாளனாகிய சித்திரதனை யழைத்து, விஞ்சையர் அரசனுக்கும் அவனுடன் வந்துள்ளோருக்கும் செய்யவேண்டிய சிறப்புக்குரிய பலவகைப் பொருள்களையும் தாராளமாக அனுப்புமாறும், போதன மாநகரத்தை அழகுபடுத்தி மணவினைக்குரிய மாநகரமாக மாற்றுமாறும் ஆணையிட்டான்.

தன்னுடைய பட்டத்து யானையை நன்கு பண்ணுறுத்திக் கொண்டுவரப் பணித்தான். பாகனும் அவ்வாறே பிறைத்திங்களைப்போன்ற கோட்டையும், செம்புள்ளிகளமைந்த முகத்தையுமுடைய பட்டத்து யானையை எழில்படுத்திக் கொண்டுவந்து நிறுத்தினன். பயாபதிமன்னன்

தன் அருமை மக்களாகிய விசய திவிட்டர்களோடு அவ் வியானையின்மேல் ஏறினான். வெண்கொற்றக்குடை முழுத் திங்களைப்போல மேலே நிழலைச்செய்தது. இரண்டு பக்கங்களிலும் அழகிய மாதர்கள் கவரி வீசினர். நகரத் தெருவழியாக அரசன் திருநிலையகப்பொழிலை நோக்கிச் சென்றான். தோற்கருவி, தொளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவியாகிய நால்வகை ஒலிக்கருவிகளும் கடலைப் போல் ஒலிசெய்தன. நகரமக்கள் அனைவரும் மலர்மாரி பெய்தனர். மகர தோரணங்களும் கொடிகளும் ஆல வட்டங்களும் குடைகளும் யாண்டும் நிறைந்து தெருவிற் செல்லும் வழிதெரியாமல் மிகுந்த இருளினை யுண்டு பண்ணின. ஆயினும், ஆங்குச்செல்லும் மக்கள் அணிந் துள்ள அணி, முடி முதலியவைகளின் மணியொளிகளால் எங்கும் ஒளிமிகுந்து விளங்கியது. அத்தோற்றம் இரவும் பகலும் தம்முள் மாறுபட்டுப் போர்செய்வதைப்போன் றிருந்தது.

## இரு பேரரசர்களும் அளவளாவி மகிழ்தல்

பயாபதி மன்னனும் அவனுடைய மைந்தர்களும் நால்வகைப் படைகளும் புடைசூழப் பலவகைச் சிறப்புக்க ளுடனும் திருநிலையகப்பொழிலை நெருங்கினார்கள். சுவலனசடியரசன் பயாபதிமன்னனும், அவனுடைய மைந்தர்களும் வருதலை மரீசியாலுணர்ந்து இவர்களை யெதிர் கொள்ளும்படி தன்னுடைய நால்வகைப் படைகளுடனும் எழுந்தான். இவர்களுடைய படைகளும் கங்கையும் யமுனையும் ஒன்றாய்க் கலப்பதுபோலக் கலந்தன. புகழ் மிகுந்த விஞ்சையர் அரசனும் கீர்த்தி மிக்க பயாபதி மன்னனும் ஒருவரையொருவர் பார்த்தபோது, இருபக்கத் துப் படைகளில் நின்றும் பலவகை இசைக்கருவிகளும் முழங்கின. மாதர்கள் வாழ்த்துப்பாடிப் பல்லாண்டு கூறினர். வானுறைதேவர்கள் மலர்மாரி பெய்தனர். பயாபதியரசன் சுவலனசடியின் கையைப்பற்றித் தழுவி நன்மை வினவினான். விசயனும் திவிட்டனும் சுவலனசடி யைப் பணிந்தனர். அவன் தன்னை வணங்கிய மைந்தர்

களை வாரி மார்புறத்தழுவி வாழ்த்துக்கூறினான். அருக்க கீர்த்தி பயாபதி மன்னன் அடியினை வணங்கினான். பயாபதி மன்னன் தன்னைவணங்கிய அருக்ககீர்த்தியைத் தழுவித் தன்னருகில் வைத்துக்கொண்டான். சுவலனசடியரசன் இளவல் சுவலனரதனும் மருகன் வியாக்கிரரதனும் பயா பதிமன்னன் அடிகளை வணங்கினார்கள். பயாபதிமன்ன னும் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினான். பயாபதிமன்னன் இளவல் சீபாலன் சுவலனசடியை வணங் கினான். சுவலனசடி தன்னைவணங்கிய சீபாலனை மார் புறத் தழுவி உவகையடைந்தான். இரு பேரரசர்களும் இவ்வாறு தழுவி அளவளாவி மகிழ்ந்தபின், யாவரும் சுவலனசடி தங்கியிருக்கும் இடத்தையடைந்து, மாதர்கள் இருமருங்கும் கவரிவீச ஒன்பதுவகை மணிகளும் பதிக்கப் பெற்ற அரியணையில் இனிதமர்ந்திருந்தார்கள். பயாபதி யரசன் விஞ்சையர் அரசனை நோக்கி, 'மன்னுதிமன்ன! ஒன்றிற்கும் பற்றாத சிறியேனையும் ஒரு பொருட்படுத் திப் பெருஞ்செல்வனாகிய நீ மகட்கொடை கொடுக்க விரும்பி வலிய வந்தது நான் செய்த நல்வினைப் பயனே யாகும். இத்தகைய பேறு எம்மைப்போன்றார் பெறத் தக்கதாமோ?' என்று பெருங்களிப்புடன் வியந்து பேசினான்.

பயாபதிமன்னன் கூறியதைக்கேட்ட சுவலனசடி யரசன், 'ஓ பயாபதி மன்ன! நீ மிகுந்த சிறப்பினையுடைய இக்குவாகு குலத்தில் தோன்றிய உயர்ந்தோன் என்பதை நான் மரீசியால் உணர்ந்தேன். விண்ணகத் தேவர்களும் மண்ணகநீரின் சீர்கெழு நல்வினைத் தன்மையை யுணர்ந்து நிலவுலகு போந்து நீராடுவர். மேலும், புராணநூல்களை யெல்லாம் நன்குணர்ந்த அறிஞர்களும், கரிய பெரிய கண்களையுடைய சுயம்பிரபை கடல்நிறவண்ணனாகிய திவிட்டனுக்கே உரியளென்று கூறினர். ஆகையால்தான் ஈண்டு யான் மணவினை கருதிப் போந்தேன். நீ சிறிதும் தாழ்த்தல் செய்யாது மணவினையை இனிது நடத்துவா யாக' என்று கூறினான். அவ்வாறு இருவரும் பேசி

மகிழ்ந்திருக்கும்போது சுவலனசடியரசன் விசய திவிட்டர்களையும் தன் மைந்தனுகிய அருக்ககீர்த்தியையும் போதனமாநகரத்திற்குப் போங்களென்று பணித்தான். அவ்வாறே அவர்களும் வேழமேறி அணிமிகு நகரத்தை நோக்கிச் சென்றனர்.

அப்பொழுது சுயம்பிரபை, வெளியில் நடக்கும் வேடிக்கைகளைக்காண விரும்பித் தன் விமானத்தின் மேல் மாடத்திற்கு மயில்போல ஏறி ஏழாநிலையை அடைந்தாள். சுயம்பிரபையினுடைய உயிர்த் தோழியாகிய அமிர்தமா பிரபை யென்பவள், ஏழாநிலை மாடத்தின் சாளரவாயிலைத் திறந்து சுயம்பிரபையை அழைத்து 'இந்நகரின் வளத்தைப் பார்ப்பாயாக' என்று காட்டினாள். அச்சமயத்தில் விசய திவிட்டர்களும் அருக்ககீர்த்தியும் பட்டத்து யானையின் மேற்.சென்றுகொண்டிருத்தலைக் கண்டு, அவர்கள் யாவரென்பதையும் சுயம்பிரபைக்குச் சொல்லினாள். சுயம் பிரபை திவிட்டனைப் பார்த்தாள். திவிட்டனுடைய பேரழகு சுயம்பிரபையின் கண்களைக் கொள்ளைகொண்டது. அவள் தன்னுடைய கண்களை மீட்கும் ஆற்றலற்றவளாய்த், தனது பெருங்காதலைப் பிறர் அறியாமல் மறைக்கும் நாணினையும் இழந்து நலிந்து நின்றாள். செவ்விய தாமரையைப்போன்ற கண்களும் கையும் பவளவாயும் காயாம்பூப்போன்ற உடலும் நீலமேனி கொழுந்துவிட்டாற் போன்ற குஞ்சியும் உடைய திவிட்டன் சுயம்பிரபையின் கண்களைச் சிறை செய்துவிட்டான். தண்ணீர் மிகுந்து பெருகுமாயின் சிறை செய்யமுடியாது. காமம் வளர்ந்தோங்குமாயின் நிறை யென்பது நிலைபெறாது. திவிட்டன் அழகில் ஈடுபட்ட சுயம்பிரபை உள்ளம் நெகிழ்ந்து உருகினாள். அப்போது சுவலனசடியரசன் தன் மகளை அழைப்பதாகச் செய்தி வந்தது. அவ்வளவில் சுயம்பிரபை தன்னுள்ளத்தில் புகுந்த திவிட்டனை நாணுகிய திரைச்சீலையால் மறைத்துச்சென்று தன்னுடைய தந்தையின் அடிகளை வணங்கி நின்றாள். ஆயிரங் கண்ணில்லாதவர்களுக்குக் காணமுடியாத அழகினையுடைய சுயம்பிரபையை அரசன்

தன் மடிமீதுவைத்து மாலை கூந்தல் முதலியவைகளைத் திருத்திப் பின்னர், 'மாமனுருடைய அடிகளை வணங்குக' வென்று கூறிப் பயாபதி மன்னனுடைய அடியில் வைத்தான். மருமகளாகிய சுயம்பிரபை தன்னை வணங்கிய அளவில் அரசன் அவளைத் தன்னுடைய மடியின்மீது தூக்கி வைத்து அவளுடைய பேரழகைப் பார்த்து வியந்து 'திருமகளைப்போன்ற இவளைப் பெறுந் தவமுடையவன் உலகங்களை யெல்லாம் தன்னோர் ஆணையுருளையினுல் ஆள்வதற்கு யாதும் ஐயமில்லை. திவிட்டன் நல்வினை செய்திருந்தமையால்தான் இவ்வரிய பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாகப் பெறுகிறுன்' என்று வியந்து பேசினுன். பின்னர் இருவரும் சுயம்பிரபையைத் தன் இருப்பிடஞ் செல்லப் பணித்தனர். அவ்வாறே அவளும் விமானமேறிச் சென்றுள்.

கன்னிமாடத்தையடைந்த சுயம்பிரபைக்கு மையனோய் மிகுவதாயிற்று. திவிட்டனைப்பற்றிய எண்ணம் உள்ளத்தைத் துளைத்தது. 'ஐயோ! இக் காமநோயை ஆற்றும் மருந்தும் உண்டோ!' என்று அவள் புலம்பினொந்திருந்தாள்.

பயாபதி யரசன் மனைவியாகிய சசிதேவி தன்னுடைய ஏவன் மகளிராகிய மதுகரி, வசந்தசேனை முதலிய ஆயிரத்தெண்மரை நன்கு ஆடையணிகளால் அழகுபடுத்தி 'எண்வகை மங்கலப் பொருள்களுடன் சென்று மணமகளாகிய சுயம்பிரபையைக்கண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டாள். மாதவசேனை முதலிய பெண்கள் மணமலர் மாலை, தோடு, குண்டலம், முத்துமாலை முதலியவைகளை யெடுத்துக்கொண்டு அவர்களுடன் சென்றனர். திவிட்டனுடைய ஐவகைத்தாயர்களும் அவர்களுடன் சென்றனர். யாவரும் பல்லக்கு, பிடியானை, தேர் முதலியவைகளில் ஏறிச்சென்றனர். திருநிலையகத்தையடைந்து சுவலனசடியரசனை வணங்கினர். அவனுடைய உடன்பாடு பெற்றுச் சுயம்பிரபையின் கன்னிமாடத்தை யடைந்தனர். வந்துள்ளவர்கள் யாவரென்பதனைச் சுயம்பிரபையின் தோழிகள் சுயம்பிர

யைக் குணர்த்தினார்கள். மதுகரி, வசந்தசேனை முதலியவர்கள் சுயம்பிரபையை வலஞ்செய்து வாழ்த்தி வணங்கினார்கள். சுயம்பிரபையின் அழகொளியைக் கண்ட நங்கையர்கள் அவள் ஒளியைக்கண்டு கண் கூசினார்கள். வந்துள்ளவர்கள் தன் காதலனுடைய பக்கத்திருக்கும் பெண்கள் என்றறிந்து மகிழ்ந்ததனால் உண்டாகிய முகமாற்றத்தை மறைக்கும் பொருட்டு, சுயம்பிரபை நறுமலர் ஒன்றை முகர்ந்துகொண்டிருந்தாள். எல்லாவற்றிலும் வல்லவளாகிய மாதவசேனை சுயம்பிரபையினுடைய உருவத்தைப் பளிங்குச் சுவரின்மேற் கண்டு அவ்வுருவத்தை நன்றாக உள்ளத்தில் பதியவைத்துக்கொண்டு பின்னர் அதனை ஒரு பலகையில் எழுதி வைத்துக்கொண்டாள். பிறகு யாவரும் சுயம்பிரபையைப் பார்த்து, 'பொற்பாவையைப்போல்வாய்! உன்னுடைய மாமியார் எம்முடைய கண்களைத் தம்முடைய கண்களாகப் பாவித்து நின்னைக்கண்டுவரப் பணித்துள்ளார். யாங்கள் திரும்பிச்சென்று அவர்க்குச் சொல்லும் மொழியொன்றினைச் சொல்லியருள்க' என்று கேட்டனர். சுயம்பிரபை நாணத்தினால் யாதும் பேசாதிருந்தாள். அப்போது மாதவசேனை சுயம்பிரபையைப் பார்த்து, 'எங்கள் முன் பேசுவதால் யாதும் குற்றம் நேரிடாது' என்றாள். சுயம்பிரபை முறுவல்கொண்டு தன்னுயிர்த் தோழியின் முகத்தைப் பார்த்தாள். சுயம்பிரபையின் உள்ளக்கருத்தினை யுணர்ந்த அமுதமாபிரபை அத்தோழிகள் கூட்டத்தைப்பார்த்து, 'தாய்மார்களே! எம்முடைய மாமியின் திருவடிகளை நீங்கள் உங்களுடைய தலைகளை எம்முடைய தலைகளாக நினைத்து நாங்கள் வணங்கியதாக நீங்கள் வணங்கியருளுங்கள்' என்று மறுமொழி பகர்ந்தாள். யாவருந் திரும்பிச் சசிதேவியை அடைந்தனர். நிகழ்ந்தவைகளையும் சுயம்பிரபையின் பேரழகினையும் எடுத்துக் கூறினார்கள் சுயம்பிரபையின் வடிவை எழுதிய மாதவசேனை அதனை ஒரு துணியினால் மறைத்து அரசியினிடம் எடுத்துக்கொண்டு சென்றாள். மாதவசேனை எதனையோ மறைத்துக்கொண்டு வருதலைக்கண்ட அரசி, மாதவசேனையைப் பார்த்து, 'நீ எதனையோ மூடிக்கொண்டு வருகின்

றூயே அது யாது?' என்று கேட்டாள். 'யான் மறைத்துக்கொண்டு வருவது வேறொன்றுமன்று. நின்னுடைய மருமகளது உருவந் தீட்டப்பெற்ற ஓவியந்தான். நீ கண்டு மகிழ்தற்காக எழுதிக்கொண்டு வந்தேன்' என்று கூறித் தான் எழுதிவந்த ஓவியத்தை அரசிக்குக் காட்டினள். அவ்வோவியம் கண்கூசும்படியாக ஒளி வீசிற்று. அதனைக் கண்டு அரசி கழிபேருவகையடைந்தாள். எழுதுதற்கரிய இவ்வடிவத்தை நீ எவ்வாறு எழுதினையென்று மாதவ சேனையின் கைத்திறனை வியந்தாள். இப்படமே இவ்வளவு சிறப்புற்று விளங்குமாயின் அப்பெண்மணி எத்தகைய பேரழகோடும் பெருஞ்சிறப்போடும் விளங்குவாளோ என்று எண்ணி மிகுந்த திகைப்படைந்தாள். மாதவ சேனைக்கு ஆடையணிகலம் முதலிய பலவகைப்பொருள்களையும் வழங்கிச் சிறப்புச் செய்தாள். 'இப்படத்தினைத் திவிட்டனுக்குக் காட்டுவாயாக' வென்று கட்டளையிட்டாள்.

மாதவசேனை அரசியைப் பார்த்து, 'நினைத்தற்கும் எழுதுதற்கும் அழகிய பேரழகினையுடைய மங்கையின் ஓவியத்தை உன்னுடைய அருளின் பெருமையால்தான் ஒருவாறு எழுதினேன்,' என்று கூறியதுடன் சுயம் பிரபை தன்னுடைய தோழி மூலமாக, 'எம்முடைய மாமியாரடிகளை நாங்கள் மிகுந்த அன்புடனிறைஞ்சியதாக நீங்கள் இறைஞ்சுங்கள்' என்று கூறியதையும் கூறினாள். பின்பு திவிட்டன் அரண்மனைக்குச்சென்று அவனை வணங்கி, 'தங்களுடைய தாயாரின் கட்டளைப்படி இவ்வோவியத்தை உனக்குக் காட்டும்படி கொண்டுவந்திருக்கின்றேன். அருங்கலம் அரசர்க்கே உரித்து; அழகுமிகுந்த இப்படத்தைக் காண்பாயாக' என்று கூறிப் படத்தைக் காட்டினாள். திவிட்டன் அவ்வோவியத்தைக் கண்டான். அளவுகடந்த மகிழ்ச்சிகொண்டான். இதனிற் கண்ட மங்கை விண்ணுலக மங்கையோ, அல்லது மண்ணுலக மங்கையோ என்று ஐயுற்று வியப்படைந்தான். திவிட்டனது ஐயத்தையும் வியப்பையும் கண்ட மாதவசேனை திவிட்டனைப்பார்த்து, 'இவ்வோவியம் விண்ணக மடந்தையி

னுடையதுமன்று; மண்ணக மடந்தையினுடையதுமன்று. இன்னவளுடையது என்று நீயே நன்கு நினைத்துப் பார்த்துச் சொல்வாயாக' என்றாள். திவிட்டன், 'அவ்வாறாயின், இது விஞ்சையரசன் மகளின் ஓவியமேயாகும்' என்றனன். காமனும் கரும்புவில்லை வளைத்து அரும்புக் கணைகளைத்தொடுத்துத் திவிட்டனை வருத்துவானாயினன். கதிரவனும் குடகடல் நாடினான். மாலைபொழுது வந்தது.

### காதலர் கலக்கம்

காதலரைப் பிரிந்துள்ள கற்புடையார்களைப்போல தாமரைமலர்கள் பொலிவகன்று வாடின. செவ்வல்லி முதலிய மலர்கள் மலர்ந்து சிறப்படைந்தன. திவிட்டன் மையனோயால் மெலிவடைந்து வாடினான். அவனுடைய நிலை அழலிடைப்பட்ட வெண்ணெயாக விருந்தது. காமத் தீயை மிகுதிப்படுத்தும் இளந்தென்றலும் இரவெலாம் இனிமையாய் வீசியது. இவற்றால் சுயம்பிரபையும் ஆற்றாக் காமநோய் அடைந்து வருந்தினாள். அவள் காமன் குறும்புக்கும் திங்களின் இனிமைக்கும் இளந்தென்றலுக்கும் சிறிதும் ஆற்றாதவளாய்த் தயங்கிப் புலம்பினாள். தன்னுடைய தணிப்பருங் காமநோயை ஒருவாறு தணிக்கக் கருதி, அப்பொழிலில் அமைந்திருந்த அருகன் கோயிலுட் புகுந்து, அருகக்கடவுளை எண்ணி, அவனடிமலரைப் போற்றி யுள்ளத்தில் பற்றியிருந்தாள். பிறகு அருகதேவனது புகழை இனிமை ததும்பப் பாடினாள். மீண்டும் தன்னுடைய கன்னிமாடத்தை யடைந்தாள். அதுவரையிலும் உள்ளடங்கிநின்ற காமநோய் மீண்டுந்தோன்றி வருத்தத் தொடங்கியது. அதனால் உறக்கமற்றுத் தியங்கித் தவித்தாள். சுயம்பிரபையினுடைய தோழிகள் தங்களுடைய தலைவியின் இன்பநோயை உள்ளவாறுணர்ந்தனர். பலரும் ஒருங்கு கூடினர். வேடிக்கைமொழிகள் பலவற்றைப் பேசி அவளது துன்பநோயை ஒருவாறு மறக்கச்செய்தனர். விஞ்சையருலகிலிருந்துவந்த பலரும் போதனமா நகரின் புதுமைகளைக் கண்டு மகிழ்ந்தும், ஆடல் பாடல் முதலியவைகளைப் புரிந்தும் இராப்பொழுதைக் கழித்தனர்.

## திருமணம்

ஞாயிறோன் குணபால் தோன்றினான். பயாபதி மன்னன் உறக்கத்தினின்றுமெழுந்தான். அருகக்கடவுளைத் தொழுது போற்றக் கருதினான். நாட்கடன்களை முறைப்படி செய்து முடித்தான். இன்று அருகக்கடவுளுடைய திருவிழா நாளென்று யாவருக்கும் அறிவித்தான். நகர மக்களுடன் அருகக்கடவுளின் கோயிலடைந்தான். மக்கள் பலரும் வழிபாட்டிற்குரிய பொருள்களெடுத்துச் சென்றனர். பயாபதிமன்னன் அருகக்கடவுளை மலர்களால் போற்றி வணங்கி அருள்பெற்று மீண்டான். திவிட்டனுக்கும் சுயம்பிரபைக்கும் இன்று திருமணமென்று யாவரும் அறிய முரசறைந்து தெரிவிக்கப்பட்டது பலவகை ஒலிக்கருவிகளும் கடல்போல் ஒலித்தன. எல்லாவிடங்களிலும் களியாட்டங்கள் நிறைந்து விளங்கின. விண்ணகத் தேவர்கள் மலர்மாரி பெய்தனர். திருமணத்தைக் காண்டற்கு மண்ணவரும் விண்ணவரும் விஞ்சையரும் ஒருங்கு நிறைந்தனர். எல்லாப் பொருள்களும் மிகுந்து விளங்கியபடியால் அந்நகரம் ஊழிக்காலத்துத் திருமால் வயிறுபோல விளங்கியது. அரசர்கள் பலர் யானையின்மேற் சென்று கங்கை முதலிய தெய்வத்தன்மை பொருந்திய யாறுகளின் நன்னீரைப் பொற்குடங்களிற் கொண்டுவந்தனர். திவிட்டனை ஒளிமிகுந்த பொன்னணைமீது வைத்து நீராட்டினர். பின்பு திருமணக்கோலம் செய்தனர். விண்ணவர் பூமழை பொழியத் திவிட்டன் திருமண மண்டபம் புகுந்தான். சுயம்பிரபையையும் விஞ்சை மாதர்கள் தம் உலகில் நின்றும் கொண்டுவந்த நன்னீர்களால் நீராட்டினர். நறுமண மலர்மாலைகளைச் சூட்டினர். மிக விலையேறப்பெற்ற மாணிக்கம் முதலியவற்றினானாய மணிக்கலன்களை யணிந்தனர். மூவுலகினும் பெறுதற்கரிய உயர்ந்த பொன்னாடையைப் புனைந்தனர். பலவகை மங்கல வாத்தியங்கள் முழங்கவும், மகளிர் இன்னிசை பாடவும் திருமண மண்டபத்திற்கு அழைத்துவந்தனர். மணமக்களிருவரும் மணவறையைச்சேர்ந்து மணவணையில் அமர்ந்தனர்.

திருமண வேள்வி யாசிரியன் வேள்வித்தீயை வளர்த்துத் திருமணக் காரியங்களைத் தொடங்கினான். புனுகினால் தரையை மெழுகிப், பொற்சுண்ணத்தால் கோலமிட்டு, வெண்மணலைப்பரப்பித், தருப்பைப்புல்லை யமைத்துச், செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்தான். பிரகத் பதியும் திங்களுஞ் சேரும் ஓரை வந்தது. அவ்வரிய வோரை யிலே மங்கல வாத்தியங்கள் முழங்க மறையவர் முதலிய பெரியோர் வாழ்த்துக்கூறத் தீக்கடவுளையே நற்சான்றாக வைத்து (சாட்சியாகவைத்து) சுவலனசடியரசன் தன் மகள் சுயம்பிரபையைத் திவிட்டனுக்கு நீருடனே தானஞ் செய்தான். அக்காலை திவிட்டன் சுயம்பிரபையினுடைய கையைப்பற்றித் தீவலம்புரிந்தான். செய்யவேண்டிய மணச்சடங்குகளெல்லாம் இனிது செய்யப்பெற்றன. திருமண வேள்வி செய்த ஆசிரியனுக்குப் பெரும்பொருள் வழங்கப்பெற்றது. திவிட்டன் சுயம்பிரபைக்கு அருந்ததி யைக்காட்டினான். பின்னர்ச் சுயம்பிரபையினுடன் தன் னுடைய அரண்மனையை அடைந்தான். ஆங்கு சுயம் பிரபையினுடைய அழகுநலம் இன்பநலம் முதலியவை களைப் பலபடப் பாராட்டினான். பெறற்கரும் பாவையாகிய சுயம்பிரபையினுடைய இன்பநலத்திலே திளைத்துக் காமக் கடலில் வீழ்ந்து கரையேற வகையறியாது அதனில் நீந்திக் கொண்டிருந்தான்.

# ௧௯. போரும் முடிசூடுதலும்

அனைவரும் திவிட்டன் திருமணக் கொண்டாட்டத்தில் இனிது திளைத்திருக்கும்போது, இரதநூபுரச் சக்கரவாளத்திலிருந்து தூதன் ஒருவன் வந்தான். அவன் சுவலனசடியரசன் அடிகளில் முடிபட விழுந்து வணங்கினான். திருப்பாற்கடலின் நடுவில் நஞ்சுத்துளி யொன்று விழுந்ததுபோல அந்த இன்பவேளையில் துன்ப மொழிகள் சில சொல்லலானான்: உத்திரசேடியினை ஆளும் அச்சுவகண்டனும் (குதிரைக்கழுத்தன்; அச்சுவம் - குதிரை, கண்டன் - கழுத்தன்) அவனைச்சேர்ந்தோர் பலரும் நம்மீது போருக்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றனர். உலக முழுவதையும் ஒருங்கே யழிப்பதற்கு ஊழிக்காலத்தில் மேலோங்கியெழும் உகமுடிவுக் கடல்போல, அவர்களுடைய படைக்கடல் கொதித்துக்கொண் டிருக்கிறது; இவ்வாறு தூதன் சொன்னதைக்கேட்ட சுவலனசடி மன்னன் சிறிதுங் கவலையற்றவனாய் அத் தூதனைப்பார்த்து; 'இதனை நாம் முன்னரே எதிர்பார்த்தோம். அவர்கள் போருக்கு வரினும் வருக; வராமற்போயினும் போகுக. நாம் அதனைக் குறித்துச் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. இங்கு நாம் திருமணங்குறித்து வந்தபின்னர் விஞ்சையருலகில் யாது நிகழ்ந்தது? அதனை, திவிட்டநம்பி அரிமாவேற்றினை வாய் கிழித்துக் கொன்றதிலிருந்து 'கூறுவாயாக' என்றான். தூதனும் கூறலானான்:

'திவிட்டநம்பி மடங்கலை மடக்கி வாய்கிழித்துக் கொன்ற செய்தியை, மாயமடங்கலாய் வந்த அரிகேதுவாலறிந்த விஞ்சையர்கள் அச்சமும் வியப்புமடைந்து நடுங்கினர். அமைச்சனாகிய அரிமஞ்சு இச் செய்தியைக் குதிரைக்கழுத்தன் உணராவண்ணம் சின்னாள் மறைத்து வைத்திருந்தான். பிறகு செய்தி வெளிப்படின் தன்னைச் சினப்பான் என்று அஞ்சினான். அரிகேதுவினை அரசன்பால் அனுப்பி நிகழ்ந்தவைகளையெல்லாம் விளக்கமாகவுரைக்கக் கட்டளையிட்டான்.

### வித்தியாதர உலகில் நிகழ்ந்தது

அரசர்கள் பலர் தன்னைக்சூழ்ந்து அடி பணிந்து நிற்கவும், இருபுறமும் வெண்சாமரை வீசவும், வெண்கொற்றக் குடை நிழற்றவும், தன் ஆணையுருளை வலப்பக்கத்தில் ஒளி செய்து நிற்கவும் அச்சுவகண்டன் அரசு வீற்றிருந்தான். அப்போது அரிகேது சென்று அடிபணிந்து வணங்கி நின்றான். பின்னர் அரசனை நோக்கி, 'அரசர்க்கரச! வாழ்க நின் கொற்றம்! மூவுலகினுமில்லாத வியத்தகு செய்தியொன்றினை அடிமலர்க்கு அறிவித்தற்பொருட்டு வந்துளேன். அதனைச் சிறிது கேட்டருளுதல் வேண்டும். தங்கள் ஆணைபெற்ற தூதர்கள் போதனமாநகரஞ்சென்று பயாபதி மன்னனைக்கண்டு திறை கேட்டனர். அவ்வரசன் திறையளித்து நன்மொழிகள் நவின்றான். அப் பயாபதி மன்னனுடைய மைந்தன் திவிட்டன் அத் திறைப்பொருளைப் பறித்துக்கொண்டு திறைப்பொருள் வாங்கச்சென்ற தூதர்களை இழிவுபடுத்தியனுப்பினான். அதனையுணர்ந்த நம்முடைய அமைச்சர் அரிமஞ்சு என்னை மாயமடங்கலாகச்சென்று சுரமை நாட்டையழிக்க ஏவினார். நானும் அவ்வாறே சென்றேன். மன்னன் மைந்தர்கள் என்னை அழிக்கவந்தனர். திவிட்டன் என்னைக் கண்டு உரப்பினான். நான் அஞ்சி ஓடிச்சென்று உண்மையான மடங்கலொன்று மடங்கியிருந்த மலைமுழையில் மறைந்தேன். திவிட்டன் செய்த பேரொலியால் அவ்வரிமா உறுமியெழுந்து திவிட்டன்மேற் பாய்ந்தது. அவன் அதனைப்பிடித்து நாணற்புல்லைக் கிழித்தெறிதல்போலக் கிழித்தெறிந்து விட்டான். நான் உயிருக்கஞ்சி ஒளித்து ஓடிவந்து விட்டேன்' என்று நிகழ்ந்தவைகளெல்லாவற்றையும் ஒன்றுவிடாமற் கூறி முடித்தான்.

### அச்சுவகண்டன் சீற்றம்

அரிகேது அறைந்தவைகளை அறிந்த அச்சுவகண்டன் அளவற்ற சினமடைந்தான். அவன் கண்களிலிருந்து தீப்பொறிகள் நாற்புறமுஞ் சிதறின. எதிரிலிருந்த வைரத் தூண் ஒன்றை ஓங்கியறைந்தான். அத்தூண் தூளாகியது.

அரிகேதுவை நோக்கி, 'நின் வீரம் மிகவும் நன்றாகவிருக்கிறது. மக்கட்பதர்களுக்கு மிகவும் அஞ்சுகின்றனை. அவர்களுடைய வலிமை உன்னைப்போன்ற அறிவிலிகட்கு மலைபோலத் தோன்றுகின்றது. எனக்கு அவ்வாறு தோன்றவில்லை' என்று கோடைகாலத்திடிபோல நகைத்துச் சீறிப் பேசினான். அங்குநின்ற விஞ்சையர்கள் அஞ்சி நடுங்கி நின்றனர். அச்சுவகண்டனுடைய வீண் தடபுடலைக்கண்ட அரிகேது தன்னுளே நகைத்து, அத் திவிட்டனுடைய ஆற்றலை இவன் நேரிற் பார்த்தால்தான் தெளிவான். அதுவரை நாம் இவனிடம் யாதும் பேசிப் பயனில்லை யென்று அவன்முன் தான் வணங்கியபடியே நின்றிருந்தான். அப்பொழுது அந்த இடத்திற்கு வேறொரு தூதன் வந்தான். அவன் அச்சுவகண்டனுடைய அடியிற் பணிந்து, 'தாங்களும் தங்களுடைய சுற்றத்தினரும் இங்குவந்து சுயம்பிரபையைத் திவிட்டனுக்கு மணம்புரிந்துகொடுத்த செய்தியையுயெடுத்துக்கூறினான். குதிரைக்கழுத்தனுக்கு உடனே தீயில் நெய்யைவிட்டாற்போன்று கடுஞ்சினம் பொங்கியெழுந்தது. கண்கள் தீப்பொறியை வெளிப்படுத்தின. திக்குகள் அதிர்ந்தன. பல்லைக்கடித்து வாய்மடித்து அவன் உங்காரஞ் செய்தபோது விண்மீன்களும் உதிர்ந்தன. 'சுவலனசடி இவ்வாறு செய்திருப்பானாயின் அவன் வலிமையையும் இப்போதே அறிகின்றேன்' என்று சினந்தான். தன் சீற்றத்தை மாற்ற, 'மலைகளை வேருடன் பிடுங்கலாமா? கடல்களை ஒன்றினுள் மற்றொன்றைப் புகுத்தலாமா? உலகங்களை உருட்டி அம்மானை ஆடலாமா?' என்று பலவாறு தன்னுள்ளே எண்ணமிட்டான். பின்னர்த் தன்னுடைய நால்வகைப் படைகளையும் போருக்குத் தகுதியாய்க் கொண்டுவரக் கட்டளையிட்டான். விஞ்சையரசர்கள் தங்கள் படைக்கடல்களோடு விரைந்துவந்து அச்சுவகண்டனை வணங்கினர். அவன் அடங்காச் சினங்கொண்டிருப்பதையும், அவன் கண்களில்நின்றுந் தீப்பொறி பறப்பதையும், வைரத்தூண் ஒன்று தூள்தூளாகிக் கிடப்பதையும் கண்டு உள்ளம் நடுங்கினர். 'இத்தகைய வெகுளி நம் அரசர் பெருமானுக்கு இதுவரை இவ்வண்ணம் வந்ததில்லையே!

இப்போது எக்காரணத்தால் வந்ததோ! இச் சினத்தீயால் எரிந்தழியப்போகிறவர் யாவரேயோ!' என்று மிகுந்த திகைப்படைந்தனர். உலகத்திலுள்ள உயிர்கள் பலவற்றை யும் கொன்றழிக்கும் கூற்றுவன்மீது சினந்தனனோ! என்று சிலர் எண்ணினர். ஊழிக்காலத்தை இன்றே உண்டாக்கி உலகங்கள் எல்லாவற்றையும் வாரிப் பெரும் புறக் கடலினுள்ளே வீசி அழித்துவிடுவானோ! என்றனர் சிலர். முன்னாளில் நடைபெற்ற கொடிய போரில் தான வரும் அசுரரும் இராக்கதரும் புறமுதுகுகாட்டி ஓடித் தொலைந்தனர். தேவர்களோ எதிர்க்கும் ஆற்றல் சிறிதும் இல்லாதவர். மக்களோ மண்ணுடன் மண்ணாயினர். ஆகவே, குதிரைக்கழுத்தனாகிய நம்மிறைவனுக்குச் சின மூட்டியவர் யாவராக விருக்கலாமென்று ஆராய்ந்தனர். பலரும் பலவிதமாக எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் பொழுது அச்சுவகண்டன் அவர்களைப்பார்த்து, 'ஓ வீரர் காள்! தெற்குச்சேடி வெள்ளிமலையரசன் சுவலனசடி எனக்குத் தெரியாமல் தன்மகளை நிலவுலகத்திலுள்ள மக்கட்பதர் ஒருவனுக்குத் திருமணஞ் செய்யக்கருதி அவனைத் தேடிச்சென்றனனாம். அம் மக்கட்பதரும் நமக் குத் திறைகொடாமல் நம்மோடு பகைகொண்டவன். அவர்களை இப்பொழுதே அழித்துவிடக் கருதியுள்ளேன். அவர்களை இப்போதே அழிக்காவிடில் நம்முடைய அரசாட்சிக்கும் ஆற்றலுக்கும் என்ன பெருமையிருக் கிறது?' என்றான்.

அச்சுவகண்டன் கூறியதைக்கேட்ட அவர்கள், இச் சிறிய காரியத்திற்கோ சினப்பது?' என்று பலரும் பலவித மாகக் கதறினார்கள். படைமுழுவதும் பேரொலி உண் டாயிற்று. படைவீரர்கள் அனைவரும் ஒருங்குகூடி நம் முடைய அரசனுக்கு இவ்வளவு சீற்றமுண்டாகியும் நாம் அதனைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறோமே! வலிமைமிக்க நமது தோள்களால் யாது பயன்? நாம் இப்போதே சென்று பகைவரை அழிப்போம். இல்லா விடின் இறந்தொழிந்து வானுலகமேறுவோம். நம்முடைய

அரசன் உணவினை இதுவரை உண்டுகொழுத்த நாம் இப்போது அவன்பொருட்டு உயிர்விடாவிடின் பெரிய அளற்றினை யடைவோம். நம்முடைய அரசனுக்குத் தீங்கு நினைத்தோர் இன்னும் உயிருடன் இருப்பதால் நமக்குச் சிறிதும் இழிவில்லையோ? பலவிதமாகப் பேசி வீண் ஆரவாரஞ் செய்வதால் யாது பயன்? உடனே சென்று அம் மக்கட் பூச்சிகளையும் அவர்களைப் பெருமைப்படுத்திச் சென்ற விஞ்சையரசனாகிய அறிவிலியையும் உடனே வென்று சிறைப்படுத்திக்கொண்டு வருவோம். அப் பெண்ணையும் இங்கு பிடித்துக்கொண்டு வந்து நம்முடைய அரசன் அடிகளில் விடுவோம்' என்று பெருங்கூச்சலிட்டனர்.

அதுகாலை அங்கு நின்றுகொண்டிருந்த அச்சுவகண்டன் மகனாகிய கனகசித்திரன் எல்லோரையும் கையைக் காட்டி நிறுத்தித் தன்னுடைய தந்தையைப் பார்த்து, 'நம்முடைய படைவீரர்கள் தோள்களை யசைத்தும், கையோடு கைகளைக்கொட்டியும், வாள்களைத் துடைத்துப் பார்த்தும் பலவிதமாகப் பலனில்லாத செய்கைகள் செய்கிறார்கள். இவ்வாறு செய்வது எல்லோருக்கும் எளிது தான். ஆனால், போர்முகத்தின்கண்ணே பகைவர்கள் எதிர்த்துத் தாக்கும்போது எதிர்நின்று போரிடுவதுதான் அருமை. தானவர்களாயினும் வானவர்களாயினும், மக்களாயினும் ஆகட்டும்; நான் அவர்களையெல்லாம் எதிர்த்து வெற்றிகொண்டு அவர்கள் உன்னைவந்து வணங்கச் செய்வேன். நான் கூறும் இதனை நீ உறுதியாகத் தெளிவாயாக. வாட்போராயினும் ஆகுக; அல்லது மற்போராயினும் ஆகுக; அல்லது மற்றெப்போராயினும் ஆகுக. நான் அப்போர்களையெல்லாம் வெற்றிகொண்டு அத் திவிட்டனையும் அவன் மணந்த சுயம்பிரபையையும் சிறைபிடித்துக் கொண்டுவந்து, உன்னுடைய அடிகளிலே விடுகின்றேன். அதற்குப் பின்னர் நின்னுடைய சீற்றம் தணிக. விலங்குகட்கரசனாகிய அரிமாவொன்றன்முன் சிறிய நரிமா ஒன்று மிகுந்த வீரம்பேசி ஆரவாரம் புரிந்த

தைப்போல மற்றவர்கள் பேசி வீணாரவாரம்புரிதலை ஒரு சிறிதும் பொருட்படுத்தவேண்டாம். என்னை உடனே யனுப்பி என்னுடைய ஆற்றலைக் கண்டு மகிழ்வீராக என்றான்.

கனகசித்திரன் கூறிய மொழிகளைக்கேட்ட அச்சுவ கண்டன் மழைபெய்யப்பெற்ற மலை குளிர்ச்சியடைவதைப் போலச் சிறிது உள்ளங்குளிர்ந்து சினம் மாறினான். அப்பொழுதங்கிருந்த அச்சுவகண்டன் இளவலாகிய வச்சிர கண்டன் எழுந்து அரசனைப் போற்றிநின்று, 'பெரும! எம்முடைய ஆற்றல் தொலைந்ததோ? அல்லது யாங்கள் இழிந்தவர்களாயினமோ? எம்மைப் பார்க்கினும் மிகுந்த வலிமையுடைய பகைவர்கள் உண்டாயினரோ? நாங்களிருப்பத் தாங்கள் அளவற்ற சினத்தைக் கொள்ளுதலும், அவர்களை வெற்றிகொள்ளப் போருக்குத் தாமே மேற் செல்ல வெண்ணுதலும் சிறிதுந் தக்கதன்றே! பெருங் கடலில் ஓடத்தக்க மரக்கலம் சிறுகுளத்துள் ஓடுமோ? தாங்கள் வெற்றிகொள்ள நினைக்கும் பகைவரோ தானவரல்லர்; தேவர்களல்லர்; சிறிதும் வலியில்லாத மக்களாவர். ஆகவே, அவர்களிடந் தாங்கள் போர்புரியச் செல்லுதல் முறையன்று. எம்மை யனுப்பி வெற்றி கொள்வீராக' என்று மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொண்டான். மற்றைத் தம்பிமார்களும், அரசிளங் காளைகளும் தத்தம் பெருமையைப் பலவாறாகப் பேசினார்கள். அச்சுவகண்டன் கொண்ட சீற்றந் தணிந்தான். பின்னர் எல்லோரையும் பார்த்து, 'அரசன் எக்காரியத்தையும் அமைச்சர்களுடன் எண்ணிப் புரிதலே தக்கதாகும்' என்று கூறித், தான் அமைச்சருடன்கூடி ஆராயும் சூழ்ச் சிச்சாலையை அடைந்தான். ஆண்டு அமைச்சர்களுடைய பேரவை கூடியது. அதிற் பல அரசர்களும் கூடினர்.

### அமைச்சருடன் ஆராய்தல்

அரிமஞ்சு எல்லோரையும் பார்த்து, 'சுவலனசடியரசன் மகள்பொருட்டு நம்முடைய அரசனுக்குண்டான சினத்தை அனைவர்களும் கண்டீர்களல்லவா? இனி நாம்

மேற்கொண்டு செய்யவேண்டியன யாவை? அவற்றைக் கூறுங்கள்' என்றான். மேககூடநகரத்தையாளும் தூமகேது என்பவன் நன்றாக எண்ணிவிட்டுக் கூறுகிறான், 'நமது வெள்ளிமலையிற் பிறந்த அரிய பெண்ணாகிய சுயம்பிரபையை நம்முடைய மன்னர்பெருமானே அடைதற்குரியவன். அப்பெண்ணை மண்ணுலகிற்குக் கொண்டு சென்று ஒரு மானிடனுக்குத் திருமணஞ் செய்துகொடுத்த சுவலனசடிமன்னன் பெருங்குற்றஞ் செய்தவனாவான்' என்றான். அனலபுரத்தரசன் அங்காரவேகன் எழுந்து, 'இரதநூபுரமன்னன் எம்மைப் பெரிதும் இகழ்ந்துள்ளான். அவனைச் சுற்றத்தோடும் கொன்றுதொலைக்க நாமனைவருஞ் செல்வோம். சிறிதுந் தாழ்த்தல் கூடாது. உடனே அனைவரும் புறப்படுங்கள்' என்று சீற்றத்துடன் பேசினான். அச்சுவகண்டனுடைய உயிர்த்தோழனான அரிசேனன் என்பவன் எழுந்து, 'ஒருவரும் இல்லாதவிடத்தில் அசுவமேதயாகஞ் செய்வதைப்போல, வீண்மொழிகள் பேசுவதால் யாது பயன்? பகைவரை வென்றழிக்க வேண்டுமானால் உடனே என்னை யனுப்புங்கள். நான்போய் வெற்றி கொண்டு வருகிறேன். அரசர்க்குரிய நால்வகைச் சூழ்ச்சிகள், இறத்தலை யஞ்சுவார்க்கன்றோ கூறப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் சூழ்ச்சியால் நேரும் பயன் இங்கு சிறிதும் உதவமாட்டாது. இவைகளையெல்லாம் விட்டுவிட்டு நால்வகைப் படைகளோடும், பலவகைப் படைக்கலங்களோடும் சென்று பொருவதே இறுதியான நல்ல முடிவாகும்' என்றான்.

அச்சுவகண்டன் அரிசேனன் கூறியவைகளைக் கேட்டு மகிழ்ந்தான். அவனை மிகவும் புகழ்ந்தான். அவன் கூறியபடி செய்வதே நல்லதென்றான். அப்பொழுது கருடக்கொடியோன் என்பவன் எழுந்து, 'இப்போது பகைவரோடு போர்புரிவதே தகுதியானதென்று முடிவாய்விட்டபடியால், நாம் அவர்களோடு செய்யும் போர் மனிதப் போரா அல்லது தெய்வப்போரா? அதனை ஆராய்ந்து சொல்லுங்கள்,' என்றான். சிறீபாலனென்பவன் படைக்கலங்களின் தன்மைகளையும், அவற்றைப் பயன்படுத்தும்

முறைமைகளையும் எடுத்துச் சொல்லலானான். 'வீரர்காள்! போர் நூல்வல்ல பெரியார் கருத்திற்கிணங்கக் கூறுகின்றேன். போர்களிற் பயன்படுத்தப்பெறுங் கருவிகள் மனிதப்படை, தெய்வப்படை, சங்கிரணப்படை என்று மூவகைப்படும். கருவிகளைச் செலுத்துந் தொழில்களும், அத்திரவித்தை, சத்திரவித்தை, மாயவித்தை என மூன்றாகும். அவற்றுள் அத்திரம் என்பது கைவிடும் படை; அம்பு உருளை எறிவேல் முதலியன. சத்திரமென்பது கைவிடாப் படை; வாள் கதை ஈட்டி முதலியன. அத்திர வித்தை நால்வகைப்படும். சத்திரவித்தை இருவகைப்படும். மக்களுடன் போர்புரிவதற்கு மனிதப்படைதான் தக்கது. அங்கு நாம் போர்செய்யும்பொழுது விஞ்சையர்களும் நம்மை எதிர்ப்பார்கள். ஆகையால், தெய்வப்படையையும் மாயப்படையையும் செலுத்துவது இழுக்காகாது. மூவகைப் படைகளையும்கொண்டு எவ்வகைப்போருஞ் செய்வதற்குத் தகுதியுடன் செல்லுதலே தக்கதாகும்,' என்று கூறிமுடித்தான். அச்சுவகண்டன், 'அதுதான் தக்கது; அப்படியே செய்யுங்கள்' என்று கட்டளையிட்டுத் தன்னுடைய இருப்பிடத்தையடைந்தான். அதன் பின்னர் அங்கிருந்தவர்களிற் சிலர் தென்திசைச் சேடியைத் தீக் கடவுளுக்கு இரையாக்குவோமென்று கூறிச்சென்றனர். மற்றையோர் இங்கு போருக்குவரத் தகுதியாகின்றனர்', என்று கூறிமுடித்தான்.

## சடியரசனும் துணைவர்களும்

விஞ்சையர் தூதன் கூறியவைகளையெல்லாங் கேட்ட சுவலனசடியரசன் தன் மகன் அருக்ககீர்த்தியையும் மருகர்கள் விசய திவிட்டர்களையும் மற்றும் வந்துள்ளோர்களையும் ஒருங்குகூட்டினான். வடசேடியில் நிகழ்ந்த செய்திகளனைத்தையும் ஒற்றன் உரைத்தபடியே உரைத்தான். 'நாம் மேற்கொண்டு செய்யத்தக்கன யாவை?' என்று கேட்டான்.

அப்பொழு தங்கிருந்த வீரர் பலரும் மான மிகுந்தவர்களாய்ப் படபடப்புடன் பல மொழிகளைப் பேசினர்.

அவர்களுக்குச் சினம் மிகுவதாயிற்று. அப்பொழுது அருக்ககீர்த்தி எழுந்து தன்னுடைய தந்தையைப் பார்த்து, 'நான் எனது கையில் வில்லையெடுத்து நாணேற்றிக் கொடிய கணைகளைச்செலுத்திப் பகைவர்களுடலைப் பிளந்துயாண்டும் உதிரப் பெருக்கோடச் செய்வேன். அப்பொழுது என்னுடைய போர்வன்மையை நன்கு பார்க்கலாம். இப்பொழுது வீணுக வாய்ப்பறையடிப்பதிற் பயனென்ன ?' என்றான்.

பின்னர் விசயன் எழுந்து விஞ்சையர் அரசனைப் பார்த்து, 'நம்முடன் போராட வருபவர்கள் தேவர்களாயின் சிறிது எண்ணிச் செய்யவேண்டும். விஞ்சையர்கட்குச் சிறிதும் அஞ்சவேண்டியதே இல்லை. யார் வரினும் வரட்டும். அவர்களுடைய மார்பாகிய வயலை என்னுடைய கைக்கலப்பையால் உழுது உதிரச்சேறாக்கி, வெற்றியாகிய விதையை விதைத்துப் புகழாகிய பயிரை விளைப்பேன்' என்றான். மற்றவர்களும் தத்தம் வீரத்தைப்பேசி ஆரவாரஞ்செய்தனர். இறுதியில் திவிட்டனெழுந்து தன்னுடைய மாமனை வணங்கிப், 'பலவாறு பேசுவதில் பயன் யாது? போரிடவரும் படைகள் எனக்குக் கண்டுமிஞ்சினலன்றோ மற்றவர்கள் பொருவார்கள். தாங்கள் அதைக் குறித்துச் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. எல்லாவற்றிற்கும் யானிருக்கிறேன்' என்றான். மருகனாகிய திவிட்டன் மொழிகளைக் கேட்ட மாமனாகிய சுவலனசடியரசன் மிகவும் மகிழ்ந்தான். தன் மருகனைப் பார்த்து, 'நீ விஞ்சையருடன் போர்செய்வதற்குத் தெரிந்துகொள்ள வேண்டியனவாகிய வித்தைகள் இரண்டிருக்கின்றன. அவை மாயவித்தையும், அதற்குரிய மறைமொழி (மந்திரம்)யுமாகும். அவைகளை இப்பொழுதே தெரிந்துகொள்ளுவாயாக' என்றுரைத்துத் திவிட்டனை அண்மையிலழைத்து அவன் காதில் அவைகளை முறையே உரைத்தான். திவிட்டன் அவைகளை மிகுந்த கருத்துடன் உள்ளத்திற் பதித்து உருவேற்றினான். அவ்வளவில் மாயத்தெய்வம் வான்வழியாகவந்து, திவிட்டனைப் பார்த்து, 'யான் செய்ய

வெண்டியது யாது ?' என்று கேட்டது. திவிட்டன் அத் தேவதைக்கு வந்தனை வழிபாடுகள் செய்தான். 'நான் உன்னை நினைத்து வேண்டும்பொழுது நீ விரைந்து வந்து எனக்கு ஆகவேண்டிய உதவிகளைப் புரிவாயாக' என்று வேண்டினன். அத்தேவதையும் 'அவ்வாறே யாகுக' என்றுகூறி மறைந்தது.

## தூது வருதல்

எல்லோரும் மேற்கூறியாங்கு பொழுதுபோக்கி யிருக்கும் சமயத்தில் விண்வழியாக இரண்டு தூதர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இருபெரும் வேந்தர்களை யும் பார்த்து, "அரசர்களே! நாங்கள் வடசேடியை ஆளும் அச்சுவகண்ட மகாராசனுடைய தூதர்கள்; நீங்கள் சுயம்பிரபையைத் தருகிறீர்களா? அல்லது மகிழ்ச்சியுடன் அவளை மணந்த காளையாகிய திவிட்டனுடைய உயிரைத் தருகிறீர்களா? இரண்டில் ஒன்றைச் சொல்லுங்கள்' என்ற னர். தூதர்கள் மொழியைக் கேட்ட அளவில் திவிட்ட னுக்கு அளவிடப்படாத சினம் மூண்டது. கண்களில் நின்றுந் தீப்பொறி வெளிப்பட்டன. உதடுகள் துடித் தன. உடல் முழுவதும் முத்துப்போல் வியர்த்தது. தனது பேருருவத்தை வானமளாவ வெடுத்தான். வானவர் வானிற்கூடி மலர்மழை சொரிந்தனர். திவிட்டன் தூதர்களைப்பார்த்து, 'ஒ அறிவில்லாத் தூதர்காள்! நீங்கள் தூதர்களாதலின் உயிர்பிழைத்தீர்கள். இன்றேல் உங்கள் உயிர் இந்நேரம் உடலைவிட்டு அகன்றிருக்கும். இங்கு நீங்கள் சிறிதும் நில்லாமல் ஓட்டம் பிடியுங்கள். ஓடிச் சென்று உங்களைத் தூதனுப்பிய குதிரைக் கழுத்தனிடம் போருக்கு விரைந்து வரும்படியாகச் சொல்லுங்கள்; ஓடுங்கள் ஓடுங்கள்' என்று நவின்று விரட்டினன். தூதர் கள் 'இவன் நம்மை உயிருடன்விட்டது நம்முடைய நல் வினையே!' என்று எண்ணிக்கொண்டு விரைந்தோடினார்கள். ஓடுகின்ற தூதர்களைப் பார்த்து மற்றையோர், 'உங்கள் குதிரைக்கழுத்தனுக்கு ஆயுள் குறுகியபடியினால்தான் உங்களைத் தூதுவிட்டான்; பெரிதும் பிழைசெய்துள்ள

அவன் இனி உயிர்வாழ்தல் மிகவும் அருமை. சுயம்பிரபையைத் திவிட்டன் மணஞ்செய்த செய்தியை முன்னரே அறிந்திருந்தும் அக்குதிரைக்கழுத்தன் தன்னுடைய மலையிலே உட்கார்ந்துகொண்டு இத்தகைய தூதுவிடுவது அறிவீனமாகும். உங்கள் குதிரைக்கழுத்தன் உயிருடன் வாழ அவாவுடையவனாயின் உடனே ஓடிவந்து திவிட்டனை வணங்கச் சொல்லுங்கள் அல்லது மானம் வேண்டுமாயின் போர்புரியச் சொல்லுங்கள்,' என்று கூவிச்சொன்னார்கள். அஞ்சியோடுகிற தூதர்கள் இச்செய்தியையும் கேட்டுக் கொண்டே விரைந்து ஓடினார்கள்.

## நற்குறிகளும் தீக்குறிகளும்

அப்பொழுது உடலற்றதாய வான்மொழி, 'நாளையே திவிட்டன் குதிரைக்கழுத்தனை வென்று வெற்றிமாலை சூடுவான்,' என்று யாவருங் கேட்கவெழுந்தது. அப்பொழுது அனைவரும் மகிழ்ந்தனர். தேவர்களின் பலவகை இன்னிசைக் கருவிகள் மிகுந்து முழங்கின போதனமா நகரமெங்கும் உவகைமிகுந்து நிறைந்தது. திவிட்டன் தன்னுடைய உடலை வழக்கம்போலச் சுருக்கிக்கொண்டான். அவனுடைய உடலில் மிகச் சிறந்த பேரொளி திகழ்ந்தது. ஆடவர்கட்கு வலக்கண்ணும் வலத்தோளுந் துடித்தன. பெண்கட்கு இடக்கண்ணும் இடத்தோளுந் துடித்தன. போர்க்கருவிகள் பலவும் ஒளிமங்கி மழுங்கின.

போதனமாநகரத்தில் இத்தகைய நன்னிமித்தங்கள் நிகழக் குதிரைக்கழுத்தனுடைய இரத்தின பல்லவத்திலே பல தீய நிமித்தங்கள் தோன்றின. போர்ப்பறைகளில் பாம்பு முதலிய நச்சுயிர்கள் குடியேறின. வெண்கொற்றக் குடையின் நடுவில் தேன்குளவிகளின் கூடுகள் உண்டாயின. தேர்களின் முடிகளில் அண்டங்காக்கைகள் கூடு கட்டின. ஊரெங்கும் உதிரமழை பெய்தது. தெருக்களில் தலையற்ற முண்டங்கள் எழுந்தாடின. மாதர்கள் தம்மியல்பு திரிந்து மெய்மறந்து நின்றனர். அவர்தம் மங்கல நாண்கள் தாமே கழன்று வீழ்ந்தன. போர்க் கருவிகளின் வாய்கள் துருப்பிடித்தன. ஆடவர்கட்கு

இடத்தோள்களும் இடக்கண்களுந் துடிக்கப் பெண்டிர் கட்கு வலத்தோள்களும் வலக்கண்களும் துடித்தன. படை களினிடையே விண்மீண்கள் உதிர்ந்தன. போர்வீரர்களின் படைக்கலங்கள் தாமே நழுவி விழுந்தன. இத்தகைய தீய நிமித்தங்கள் பல நிகழ்தலையும் விஞ்சையர்கள் ஒரு பொருட்படுத்தவில்லை. பெருமையை எவ்வாறயினும் நிலைநாட்டவேண்டுமென்று முடிவுகட்டினர். அனைவரும் போர்க்கோலங்கொண்டு பேராரவாரஞ் செய்தனர்.

## அச்சுவகண்டன் கட்டளை

போதனமாநகரில் எல்லோரானுந் துரத்தியடிக்கப் பட்ட தூதர்கள் நிகழ்ந்தவைகளைக் கூறினர்கள். அச்சுவ கண்டன் படத்தின்மேல் அடிவாங்கிய பாம்பைப்போல் சீறினன். அப்பாம்பு நஞ்சைக் கக்கினற்போலப் பேசினன். தன்முன் நின்ற படைத்தலைவர்களைப் பார்த்து, 'நீங்கள் போதனமாநகரம் போய்த் திறைமறுத்த பயாபதியையும் தவறு செய்த சுவலனசடி யரசனையும் மற்றும் அவர்களைச் சேர்ந்த மன்னர்களையும் பிறரையுங் கொன்று தொலைத்துத் தீரமாகப்பேசிய திவிட்டனையும் சுவலனசடி யரசன் மக ளாகிய சுயம்பிரபையையும் என் கையால் தண்டிக்கும்படி உயிரோடு பிடித்துக்கொண்டு வாருங்கள்' என்று கட்டளை யிட்டான்.

## போர் மூளுதல்

குதிரைக்கழுத்தனுடைய கட்டளை பிறந்த அளவில் விஞ்சையரசர்கள் பலரும் தம்முடைய படைகளுடன் கடலைப்போலப் பேரொலி செய்து, போதனமா நகரை நோக்கிப் போருக்குப் புறப்பட்டனர். நால் வகைப்படைகளும் கணக்கின்றிப் புறப்பட்டன. முரசு கள் ஒலித்தன; சங்குகள் முழங்கின; குடை, கொடி, சாமரம் முதலியவைகள் எங்கும் நிறைந்தன. இவ்வாறு பலவகை வெற்றிச் சின்னங்களோடும் விஞ்சையர் படை விண் வழியாகச்சென்று மணவிழா சிறிதும் மாறதிருந்த போதனமாநகரத்தில் புகுந்தது. திவிட்டன் படைகள் பொங்கியெழுந்து ஆரவாரித்தன. நிலநடுக்கம் (பூகம்பம்)

கண்டாற்போல நிலவுலகெங்கும் நிலைகுலைந்து அதிர்ந்தன. யானை, தேர், புரவி, காலாள் ஆகிய படைகள் எங்கும் நிறைந்து எள் விழுவதற்குச் சிறிதும் இடமில்லாதொழிந்தது. இருதிறத்துப் படைகளுக்கும் பெரும்போர் மூண்டது. தேர்வீரர்களோடு தேர்வீரர்கள் பொருதனர். யானைகளோடு யானைகளும், குதிரைகளோடு குதிரைகளும் பொருதன. போர் மிகக் கடுமையாயிற்று. சுவலனசடியரசன் மகன் அருக்ககீர்த்தி படைமுகத்திற்குச் சென்றான். தனது ஒப்பற்ற வில்லை வளைத்து அம்புகளைச் செலுத்தலானான். அவனது பிறைமுகக் கணைகள் பகைவர் படையுட்புகுந்து பகைவர்களைப் பலவகையாகப் பழுது செய்து அழித்தது. சிலர் கைவேறு கால்வேறாயினர். சிலர் தலைவேறு உடல்வேறாயினர். சிலர் தோள்வேறு தொடைவேறாயினர். அருக்ககீர்த்தியின் ஆற்றலுக்காற்றாத பகைவர்படை முதுகுகாட்டியது. அருக்ககீர்த்தி தூணியினின்று கணை யெடுப்பதையும் விடுப்பதையும் எவரும் கண்டிலர். பகைவர் படை அழிந்தொழிந்தமையையே அனைவருங் கண்டனர். யாண்டும் உதிரப்பெருக்கு மிகுந்தோடியது. அருக்ககீர்த்தியோடு தனித்துப் பொருவார் ஒருவருமிலராயினர். ஆகவே, பலரும் ஒருங்குகூடித் தங்களுடைய கையிலுள்ள கைவிடும்படை கைவிடாப்படை முதலியவைகளைக்கொண்டு கடும்போரியற்றினர். திவிட்டன் படைஞர் அருக்ககீர்த்திக்கு யாது நேரிடுமோ வென்று அஞ்சினர். அருக்ககீர்த்தியோ தன் தேரினைக் குயவன் உருளையைப்போலச் செலுத்திப் பலவகையாகக் கணைகளைச் செலுத்திப் பகைவரை அழித்துத் தொலைத்தான். அருக்ககீர்த்தியின் கணைமழைக்காற்றாத எதிரிப்படை ஒருபக்கத்திலும் நில்லாதொழிந்தது. விண் முழுவதும் அவன் விட்ட கணைகளே விளங்கின. அவை பகைவரைத் தேடித்திரிவனபோல் யாண்டுந்திரிந்தன. விஞ்சையர் சேனை நிலைகுலைந்து அழிந்தது. இறந்துபட்ட வீரர்கட்கிடையே மறைந்து நின்ற தீரர்கள் சிலர் காலம் பார்த்திருந்து யாருங்காணா வேளையிலே யெழுந்து ஓட்டமெடுத்தார்கள். நிகழ்ந்தவைகளை யெல்லாம் பார்த்திருந்த

விஞ்சைய தூதர்கள் சிலர் விரைந்தேகிக் குதிரைக்கழுத்தன் காலில் விழுந்தார்கள். 'ஐய! நம்முடைய படைவீரர்கள் போதனமாநகரம் போய்ப் போர்செய்து அருக்ககீர்த்தியினுடைய கணையினாலே அழிந்தொழிந்தார்கள். சிலர் விண் வழியாக ஓடி மலைமுழைகளில் மறைந்தார்கள். மாற்றலர் படை சிறிதும் தோற்றிலது. ஒருவனே எல்லாவற்றையும் அழித்தொழித்தான்' என்று உரைத்தார்கள்.

தூதர்கள் சொல்லிய மொழி அச்சுவகண்டனுடைய காதுகளிலே செம்பினை உருக்கி வார்த்தாற்போன்றிருந்தது. உள்ளம் பதறினான்; மெய் கூசினான்; அளவற்ற சினம் அவனுக்குண்டாகியது. மிகுந்த வலிமையுடைய தம்பியர்களோடும் மைந்தர்களோடுந் தீரமொழிகள் பல பேசிக் கிளம்பினான். அப்போது தூதர்கள் சிலர் வந்து இரதநூபுரத்தின்மீது சென்ற படைகள் தோல்வியடைந்தமையைச் சொல்லி யழுதனர். அச்சுவகண்டன் படைகளுடன் புறப்பட்டு அருங்கல் மென்னும் பெயரினையுடைய மலையை அடைந்து பாசறையமைத்துத் தங்கினான். அப் படை வீட்டில் யாவருந் தங்கியிருந்தனர். அப்பொழுது அச்சுவகண்டனுடைய தம்பிமார்களுள் மூத்தவனான இரத்தினகண்டன், 'நம்முடைய முன்னவனாகிய அச்சுவ கண்டனது உள்ளம் வருந்தத் துன்பஞ்செய்த சுவலனசடியரசனை அவன் சுற்றத்தோடும் கொன்று அவன் மகளையும் மருமகனையும் கட்டிக்கொணர்ந்து அரசன் அடிகளிலே விடுவோம். இன்றேல், போரில் நம்முடைய உயிரை இழப்போம்' என்று இறைந்து கூறினான். அவனுடைய தம்பி நீலகண்டன், 'உலகிலுள்ள மனிதப்பூண்டுகளெம்மோடெதிர்ப்பின் சூறைக்காற்றிற்பட்ட இலவம் பஞ்செனநாற்றிசையும் பறப்பதன்றி எதிர்த்து நிற்கும் வலியும் உள்ளனவோ?' என்று கூறிப் பெருநகைபுரிந்து தன்னுடைய வளைந்த கோர தந்தங்களை வெளியே காட்டினான். அவனுக்குப் பின்னவனாகிய வைரமாகண்டன் என்பவன் தன் அண்ணன்மார்களைப் பார்த்து, 'நீங்கள் இங்கே இளைப்பாறுங்கள்; நான் ஒருவனே பகைவர்மீது சென்று

அவர்களைச் செக்கிலிட்ட எள்ளைப்போலக் கசக்கிப்பிழிந்து வருகிறேன்' என்று கூறிக் கதறினன். இவனுடைய தம்பி சுகண்டனென்பவன், 'பறவையரசனாகிய கருடனை எதிர்க்கும் பாம்புகளைப்போல மனிதர்களோ நம்மோடு எதிர்ப்பவர்கள்? இது வியப்பிலும் வியப்பு' என்று கூறிக் கையோடு கைதட்டி மூக்கின்மேல் விரல்வைத்துப் பெருநகைபுரிந்தான். இவற்றையெல்லாங் கண்ட அச்சுவகண்டனுடைய உள்ளங் குளிர்ந்தது. அவன் அவர்களைப் பார்த்து 'நம்முடைய பெருமையினைச் சிறிதும் கருதாத கருதலர்களைப் போர்க்களத்திலே கொன்று குவித்து எக்காலத்திலும் புகழை நிலைநாட்டுங்கள்' என்று கூறி மேற்கொண்டு படையை நடத்தினன். அச்சுவகண்டன் படைகளும் திவிட்டன் படைகளும் கைகலந்து போர்புரிந்தன. இரு பக்கத்துப் படைகளும் அளவிடப்படாதன. பலவகையான படைக்கலங்களைக்கொண்டு, இருதிறத்துப் படைகளும் கடும்போரை நெடும்போது நிகழ்த்தின.

அச்சுவகண்டனுடைய நண்பனாகிய அரிசேனன் என்பவன், தவஞ்செய்துபெற்ற வாட்படையை வலக்கையிலேந்தி இடக்கையில் கேடகத்தைத் தாங்கி, 'இறக்கவிரும்புபவர்கள் எதிர்த்து வாருங்கள்; பிழைக்க விரும்புபவர்கள் ஓடிப்போவதற்கு வழிபாருங்கள்' என்று இடிபோல முழங்கிக்கொண்டு வந்தான். அவனைக்கண்ட அருக்ககீர்த்தி தன் வில்லை வளைத்து நாணேற்றிக் கணையை விடுவதற்கு முயன்றான். அப்போது அருக்ககீர்த்தியினுடைய படைவீரனாகிய புலித்தேரோன் வந்து, 'ஐய! நினக்கு இவனோ நிகர்? நிகரில்லாதவனோடு போர்செய்தல் நேர்மையாகுமோ? நான் இவனோடு போர் செய்கிறேன்' என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்று அரிசேனனை எதிர்த்தான். அரிசேனனைப் பார்த்து, 'ஓ அறிவிலி! நீ என்னை நீண்டகாலமாக அறிவாயே! என்னை எதிர்த்துப் போர் செய்ய வருவாயாக,' என்று அழைத்தான்.

அரிசேனன் புலித்தேரனைப் பார்த்து, 'அடே, வியாக்கிரரதா! உன்னை யான் மிக நன்றாக அறிவேன். விஞ்சைய

ருலகத்துப் பெண்ணை ஒரெளிய மனிதனுக்குக் கொடுத்துத் திருமணம் நடத்திய இந்த மணவீட்டில் ஆறுகாலமும் சோறு தின்னும் ஒப்பற்ற வீரனென்று உன்னை நான் நன்றாக அறிவேன்' என்று இழிவுரைகூறி எள்ளி நகை யாடினான். வியாக்கிரரதன் அரிசேனனைப் பார்த்து 'அடே அறிவிலி! மங்கையர் மணவினை ஊழ்வினையின்படி நடக்கும். இதனைச் சிறிதும் உணராமல் குதிரைக் கழுத்தனோடு நீயும் போருக்கு வந்தாய். என்னுடைய வலிமையை நீ நன்குணராய். விரைவாக வந்து போர்செய்,' என்று கூறி நெருங்கினான். இருவரும் வாட்களை யுருவிக்கொண்டு கேடகங்களை இடக்கையில் தாங்கி இடப்பக்கம் வலப்பக்கமாகக் காற்றாடிபோலச் சுற்றித், தாந்தாங் கற்ற வித்தைகளை யெல்லாங் காட்டிக்கொண்டனர். வாட்போரில் வல்ல இருவரும் நீண்டநேரங் கடும்போர் செய்தனர். வியாக்கிரரதன் அரிசேனன்மேல் விரைந்து தாவி அவன் வீசிய வாள் வீச்சுக்களை விலக்கி, அவனை இரு துண்டமாக வெட்டி வீழ்த்தினான்.

அரிசேனன் வெட்டுண்டு வீழ்ந்ததைக் கண்ட விஞ்சையர் படை அஞ்சியோடிற்று. திவிட்டன் படை வெற்றி முரசடித்துப் பேராரவாரஞ் செய்தது. அப்போது அச்சுவகண்டன் படையைச் சேர்ந்த குணசேனன் என்பவன் முன் வந்து எதிரிப் படையிற் புகுந்து சிதறவடித்தான். அப்போது அருக்ககீர்த்தியின் படைத்தலைவனாகிய இந்திரகாமன் அவனை எதிர்த்துத் தன் கைவாளாற் கொன்றான். குணசேனன் பிணமானதைக் கண்ட வரசேனன் என்பவன் முன்வந்து வில்லைத்தாங்கி யெதிர்த்தான். கணைமழையைப் பொழிந்தான். அருக்ககீர்த்தியின் படைத்தலைவருள் ஒருவனாகிய காமுகன் என்பவன் அவனை யெதிர்த்துக் கொன்றொழித்தான். வரசேனன் விண்ணுலகடைந்ததைக் கண்டதும் அச்சுவகண்டனுடைய படைஞனாகிய அரிகேதனன் என்பவன் கொடிய சூலம் ஒன்றை யேந்திப் படைகளைக் கலக்கினான். அவனை வியாக்கிரரதன் எதிர்த்துக் கடும் போர் செய்தான். இருவரும் நெடுநேரம் போர்புரிந்தனர். அரிகேதன் தன்னுடைய சூலத்தைச் சுழற்றிப் பகைவன்

மீதெறிந்து ஆரவாரஞ் செய்தான். வியாக்கிரரதன் அச் சூலத்தைத் தன் கைவாளால் இருதுண்டம் செய்து பகைவன் தலையையும் வீழ்த்தினான். விஞ்சையர்படை அஞ்சிப் புறங்காட்டி யோடியது. தூமகேதன் என்னும் வீரன் ஒருவன் யானைமீது வந்து கடுந்தண்டம் ஒன்றைக் கையிலேந்தித் திவிட்டன் படைகளைக் கலக்கினான். கதைப்படை கொண்டு போர்புரிவதில் பேர்பெற்ற தூமகேதனைக் கண்டதும் திவிட்டன் படை கலங்கியது. சுவலனசடியரசனின் இளவலாகிய சுவலனரதன் அக்காலை மலையைப் போன்ற ஒரு பெருங்கதையைக் கையேந்தித் தூமகேதுவை யெதிர்த்துக் கொடும்போர் புரிந்தான். கதைப்போரில் வல்லவர்களாகிய இருவரும் ஒருவருக்கொருவர் இளையாமல் பலவகையாகச் சாடிக்கொண்டு போர்க்களம் முழுவதும் தாமேயாகச் சுழன்றனர். அவர்களுடைய பெரும் போரைக் கண்டு தேவர்களும் வியந்து கண் புதைத்தனர். இறுதியில் சுவலனரதன் கைத்தடியால் புகைக்கொடியோன் (தூமகேதன்) தலையுடைந்து நிலத்தில் விழுந்து உயிர்விட்டான்.

புகைக்கொடியோனும் மானிடன் கையால் இறந்து தொலைந்தானே யென்று அச்சுவகண்டனுடைய படை அஞ்சி ஓட்டமெடுத்தது. அநலமாபுர அரசனாகிய அங்காரவேகன் அப்போது முன்வந்து ஓடும்படையைக் கையைக் காட்டிநிறுத்தி, மிகுந்த ஆற்றல்கூறி ஊக்கப்படுத்தி மீளவுந் திருப்பிக்கொண்டுவந்து எதிர்த்தான். அவ்வங்காரவேகனுக்கும் திவிட்டன் படைவீரனாகிய தேவசேனனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. வாளையும் வேலையுங் கொண்டு இருவரும் கண்டோர் நடுங்கத்தக்கவண்ணம் பெரும்போர் புரிந்தனர். இவர்களுடைய போர் நீண்ட நேரம் நிகழ்ந்தது. அங்காரவேகன், இவ்வளவு நேரமா இவனோடு போர்புரிவது என்று எண்ணிச் சினந்து, குறி தவறாத வேல் ஒன்றினைத் தேவசேனன்மீது வீசினான். அதனைத் தேவசேனன் இருதுண்டஞ் செய்தான். வேல் இரு துண்டமானதைக் கண்ட அங்காரவேகன் மற்றொரு வடிவேலை யேந்தி ஆரவாரஞ் செய்துவந்தான். தேவ

சேனன் அவனுடைய ஒரு தோளை வெட்டி வீழ்த்தினன். அங்காரவேகன் எஞ்சிய மற்றொரு கையால் வாளெடுத்துக் கண்டோர் வியக்கும்படி பெரும் போர் புரிந்தான். அங்காரவேகன் இடக்கையாற் செய்யும் அரிய போரைத் தேவசேனன் பார்த்து வியந்து அவனை நோக்கி, 'நீ தூய வீரருட் சிறந்தோனென்பதற்குச் சிறிதும் ஐயமின்று; ஒரு கையை இழந்து ஒரு கையாற் போர்செய்யும் நின்னொடு போர் புரிதல் அறமன்று; நீ போர் புரிதல் வேண்டாம்;போய்விடு' என்று கூறினன். இவ்வாறு கூறவும் அவன் சிறிதுங் கேளாமல் மீளவும் எதிர்த்துப் பெரும்போர் செய்தான். தேவசேனன் அவன் தலையினை வெட்டி வீழ்த்தினன். அங்காரவேகன் அழிந்ததைக் கண்ட விஞ்சையர் சேனை அஞ்சியலறிப் பின்வாங்கியது. அதனைக் கண்டு விஞ்சையர்களிற் சிறந்தவனாகிய கருடக்கொடியோன் திவிட்டன் படைகளை யெதிர்த்துப் போராற்றலானன். சுவலனசடியரசன் அப்போது அரசயானை ஒன்றின்மேல் ஏறிக்கொண்டு வில்லை வளைத்துக் கணைகளை மாரிபோற் சொரிந்து கருடக்கொடியனை யெதிர்த்தான். கருடக்கொடியோன் அரசனைப் பார்த்து, 'நீர் வயது முதிர்ந்தவர். உம்மோடு போர்புரிதல் தக்கதன்று. தன்னைப்போன்றவர்களுடன் தான் போர் புரிதல்வேண்டும். ஆகவே, இளைஞர்களும் வலியர்களுமாகிய மற்றையோர் என்னை வந்து எதிர்க்கட்டும்' என்றனன்.

கருடக்கொடியோன் கழறியதைக்கேட்ட சுவலனசடியரசன் நகைத்து, 'படுகளத்தில் முறை பார்ப்பவரும் உளரோ? நீ கூறிய முறைமை சிறிதும் தகுதியற்றது. எனக்காக நீ வருந்துதல் வேண்டாம். யாவரேயாயினும் எதிர்த்தவரோடு பொருதலே போர் முறைமையாகும். போர் தொடங்கியபின்னர் நான் வலியனோ மெலியனோ என்பதை நீ யுணர்வாய்,' என்று கூறிச் சீறிச் கூரிய கணைகளை நேரலான் மேலே செலுத்தினன். வியக்கத்தக்க விதமாக விற்போர் இருவருக்கும் நிகழ்ந்தது. சிறிது நேரத்திற்குள் சுவலனசடியரசன் தன்னுடன் எதிர்த்த கருடக்கொடியோனுடைய வில் முதலியவைகளை அறுத்

துத்தள்ளி அவன் செய்த மாய விளையாடல்களையுங் குலைத்தான். கருடக்கொடியோன் உருளை, வாள் முதலிய பிற படைகளைக்கொண்டு எதிர்த்து வீசினான். சுவலனசடியரசன் அவனெறிந்த படைக்கலங்களைத் தன் கணைகளால் தடுத்து அவனேறிய யானையையுங் கொன்றான். கருடக்கொடியோன் மிகுந்த சினங்கொண்டு வாள் கேடகம் ஆகியவைகளைக் கைக்கொண்டு சுவலனசடிமேல் தாவினான். சடியரசன் சில கணைகளை யேவி அவனுடைய வாள் பிடித்த கையையும் தலையையும் அறுத்து நிலத்தில் தள்ளினான். கருடக்கொடியோன் விண்ணுலகேகியதைக் கண்ட விஞ்சையர்படை வாட்டமுற்றுக் கலங்கியது. போர்க்களத்தை விட்டு ஓட்டமும் பிடித்தது. அச்சுவகண்டன் படை அலறியோடுவதைக் கண்டு திவிட்டன் படை கைகொட்டி நகைத்தது.

அப்போது ஒப்புயர்வற்ற சீசேனன் என்னும் வீரன் கரைபுரண்டோடும் கடலைப்போல அஞ்சியோடும் படையைத் தடுத்து நிறுத்தி, 'ஓ விஞ்சை வீரர்களே! வாள் வேல் முதலிய படைக்கலங்களை வீணுக்கு ஏன் சுமந்தீர்கள்? போர்க்களத்தில் வந்து தோற்றோடுகிற நீங்களும் ஆண் மக்களா? இவ்வாறு முதுகுகாட்டி யோடினால் நாளைக்கு உங்களுடைய மனைவியர் முகங்களில் எவ்வாறு விழிப்பீர்கள்? இவ்வூனுடல் அழிவதுதானே! அதனை இவ்விடத்தில் விட்டுவிட்டு அழியாத புகழுடலைச் சுமக்கலாகாதா? உங்களுடைய அறிவு இவ்வளவுதானா? பெருமையைப் போக்கிவிட்டு மண்ணுலகில் வாழ்வதைப் பார்க்கினும் இறந்து விண்ணுலகடைந்து இன்பம் அனுபவித்தல் சிறந்ததன்றோ? கவரிமான் தன்னுடைய ஒரு மயிரை யிழந்தாலும் இறந்துபடுதலை நீங்கள் அறிந்திலீர்களோ? மீண்டும் போர்புரிவதற்கு என்னுடன் வாருங்கள்,' என்று கூறியதைக்கேட்ட விஞ்சையர்படை அவனுடன் திரும்பியது. இரு படைக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இருபக்கத்திலும் பலர் மாண்டனர். சீசேனன் பாய்மா ஒன்றின்மேலே பாய்ந்து வந்து மாயப்போர்களை யியற்றினான். 'ஆற்றலுள்ளவர்கள் என்னுடன் போர்புரிய வாருங்கள்,' என்று மாற்றங்க

ளுரைத்தான். திவிட்டன் படைத்தலைவர்களில் ஒருவனுன சீபாலன் என்பவன் தானுமொரு பரியின்மேல் தாவிவந்து எதிர்த்துப் பொருதான். இருவரும் நெடுநேரம் பற்பல விதமாகப் போராடினர். சீபாலன் கைவாளால் சீசேனன் தலையறுந்து விழுந்தது. உடனே விஞ்சையர் படை வெந்நிட்டோடியது.

அச்சுவகண்டனுடைய மகன் கனகசித்திரன் அஞ்சியோடுபவர்களைத் தடுத்து மீட்டுக்கொண்டுவந்தான். "இங்கு நம்மை எதிர்த்துப் போர்புரிவோர் வானவருமல்லர்; தானவருமல்லர்; மிக வெளியமானவரே; மானவருக்கஞ்சியோடுதல்தான் விஞ்சையர் தீரம்போலும்" என்று உள்ளம் வருந்தினன். கடவுள் அருளாற் பெற்ற வடிவாளைக் கையிற் பற்றினன். திவிட்டன் படையுட் புகுந்தான்-கண்டவர்களை யெல்லாங் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தினன். போர்க்களமெங்கும் கனகசித்திரனே காணப்பட்டான். அவனை யெதிர்த்தோர் அனைவரும் அழிந்து தொலைந்தனர். கைம்மாக்களும் பாய்மாக்களும் கணக்கின்றி மடிந்தன. மேருவைப்போன்ற தேர்கள் தூள் தூளாகப்போயின. போர்க்களத்தில் உதிரப்பெருக்கு அலை வீசி யோடிற்று. திவிட்டன் படை இவன் ஒருவனுக்காற்ருது முதுகுகாட்டி யோடியது. கனகசித்திரன் தனியாகப் போருக்குச் சென்றுள்ளான் என்பதை யுணர்ந்து அச்சுவகண்டனுடைய தம்பியர் நால்வரும் கனகசித்திரனுக்குத் துணையாக வந்துசேர்ந்தனர். போர் கடுமையாக மூண்டது. திவிட்டன் படை சிதறி நான்கு பக்கங்களிலும் ஓடலாயிற்று. சுவலனசடியரசன் முதலானோர் அவர்கள் செய்யும் போருக்காற்ருது மனம் வருந்தி ஒருபுறம் நின்றனர்.

இதுவரையிலும் போர் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருந்த விசயன் இனிச் சும்மாவிருக்கக் கூடாது என்று தன்னுடைய கலப்பைப்படையைச் கையிலெடுத்துக்கொண்டு பகைவர் படையிற் பாய்ந்தான். பகைவர் உடல்களைப் பலவகையாக உழலானுன். கலப்பை

யையே படையாகக்கொண்டு கடும்போர் செய்யும் இவன் யாவனோவென்று அச்சுவகண்டன் தம்பியரும் புதல்வரும் வியப்படைந்தனர். அப்பொழுதங்கிருந்தார் சிலர் 'இவனே பயாபதி அரசனுடைய மைந்தர்களுள் மூத்தோனாகிய விசயன்;' என்று விளங்க வுரைத்தார்கள். அவ்வளவில் அந் நால்வரும் கனகசித்திரனும் பெருஞ்சினங்கொண்டு தத்தம் ஊர்திகளை விசயன் பக்கம் செலுத்தி, அவனை வளைத்துக் கொண்டு கடுமையான போர் செய்தார்கள். அப்பொழுது விசயன் தோற்றுப்போனான் என்ற பொய்ச்செய்தி போர்க் களம் முழுவதும் பரவிற்று. எக்காரணத்தாலோ எழுந்த இப் பொய்ச்செய்தியைக் கேட்டுப் பயாபதி அரசனுடைய படை அஞ்சி யோடிப்போயிற்று. அப்போது விசயனுக்கு ஊர்தியாய்த் தெய்வத்தன்மையுள்ள மடங்கலொன்றும் புதிய கலப்பைப்படை யொன்றும் வந்துசேர்ந்தன. விசயன் அக் கோளரிமேல் ஏறிக்கொண்டு புதிய கலப்பைப் படையை வலக்கையில் தாங்கியெழுந்தான். அவனேறிய மடங்கல் அண்டங்களெல்லாம் அதிரப் பெருங்குரலெடுத்து உரப்பியது.

பகைவர் படையைச்சேர்ந்தோர் யாவரும் அரிமா செய்த பேரொலியால் அறிவிழந்து தியங்கி விழுந்தனர். பலரும் பல படையை ஏவி ஆரவாரஞ் செய்தனர். விசயன் அப்படைகளை யெல்லாம் அழித்து அவர்கள் செலுத்திய ஊர்திகளையும் நிலத்தின்மீது வீழ்த்தினான். விசயன் ஒருவனே விஞ்சையர் படை முழுவதையுமழித்து வச்சிர கண்டன், நீலகண்டன், சுகண்டன் என்னும் மூன்று வீரர் களையும் வானுலகிற்கனுப்பினான். விசயனுடைய வலிமை யைக் கண்ட கனகசித்திரன் தன்னுடைய வடிவாளை யெடுத் துக்கொண்டு விசயனை யெதிர்த்துப் போர்செய்தான். இவருக்கும் நெடுநேரம் போர் நிகழ்ந்தது. கடைசியில் விசயன் கலப்பை கனகசித்திரன் மார்பிற் பாய்ந்தது. அவனும் மாய்ந்து தொலைந்தான். இவைகளையெல்லாம் தனியாய் நின்று பார்த்த இரத்தினகண்டன் "மனிதர் செய்யும் போர் நன்று நன்று" என்று கூறி வியந்தான். இவர்களுடைய போரையும் ஆண்மையையும் ஒருங்கே

தொலைத்துவிட வேண்டுமென்று முடிவுசெய்தான். மேரு மலையைப்போன்ற ஒரு பெரிய மலையைத் தன்னுடைய கைகளாற் பிடுங்கினான். யாவரும் அஞ்சத் திவிட்டன் படையை எதிர்த்துச்சென்றான். அவனைக் கண்ட அனைவரும் அஞ்சியோடினர். அப்போது அருக்ககீர்த்தி தன் கையிலிருந்த வில்லை வளைத்து, வைரக்கணை ஒன்றினைத் தொடுத்து, அவன் தாங்கிவந்த மலையைத் தூளாக்கி, அவனுடலையும் கிழித்தெறிந்தான் இரத்தினகண்டன் இவ்வாறு இறந்தொழிந்ததைக் கண்ட தூதர்கள் விரைந்து அச்சுவகண்டனிடம் ஓடினார்கள். விஞ்சையர்படை சிறிதும் எஞ்சாமல் அழிந்தொழிந்ததை விளம்பினார்கள். அச்சுவகண்டன் பேரிடியால் தாக்கப்பெற்ற பாம்புபோலப் பெரிதும் வருந்தினான். இனிமேற் சும்மாவிருப்பதிற் பயனில்லையென்று எண்ணினான். இவ்வுலகிலுள்ள அசையும் பொருள் அசையாப்பொருள் அனைத்தையும் ஒருங்கே யள்ளிக் கொண்டுபோய்ப் பெரும்புறக்கடலில் போடவல்ல மாயா தேவி என்னும் ஒரு பெருந் தெய்வப் பூதத்தை உள்ளத்தே சிந்தித்து வந்தித்தான்.

## சண்டவேகையின் மாயப்போர்

அப்பொழுது **சண்டவேகை** என்னும் பெயரினையுடைய மாயாதேவதை அச்சுவகண்டன்முன் வெளிப்படையாகத்தோன்றி 'யான் செய்யவேண்டிய பணி யா'தென வினவிற்று. அச்சுவகண்டன் அப்பூதத்தைப் பார்த்து, 'இங்கு என்னுடன் எதிர்த்து நிற்கும் பகைவர்கள் அனைவரையும் அழித்து எனக்கு உதவி செய்வாயாக,' என்றான். அச் சண்டவேகையும் 'அப்படியே செய்கிறேன்' என்று கூறிக் கூற்றுவனை யழைத்து அவனைப் பார்த்து, 'அச்சுவ கண்ட அரசனுடைய கட்டளைப்படி அவனுடைய பகைவர்கள் அனைவரும் இன்று மாலைப்பொழுதிற்குள் அழிந்தொழிவர்; நீ உன்னுடைய தொழிலை ஒய்வின்றிச் செய்து கொண்டிருப்பாயாக!' என்று பணித்தது. பிறகு, தன்னுடைய வெள்ளிய பற்கள் விளங்க நகைத்தது. ஊனுண்டலில் அதிக விருப்பமுடைய பேய்கள் மகிழ்ச்சியடைந்தன,

அம் மகிழ்ச்சிப்பெருக்கால் துணங்கைக் கூத்தாடின. தம் முண்டைய கைகளில் அச்சம் பொருந்திய சூலப்படையை ஏந்திக்கொண்டு சண்டவேகையைப் பின்தொடர்ந்தன. அவை ஒன்றோடு ஒன்று மோதின. முழங்கால்களும் நீண்ட அடிகளும் வற்றிய வயிறும் நீண்ட நகமும் பிளந்த வாயும் சுழலும் கண்களும் உடைய அவைகள் உலகம் நடுங்கப் பேராரவாரஞ்செய்தன.

அப்போது பெருங்காற்று வீசியது. ஊழித்தீயும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டது. கணக்கற்ற கடல்கள் நிலத்தின்மீது எழுந்து மலைகளைப்போல அலைகளை வீசின. எழுந்த பெருங்காற்று அசையும்பொருள் அசை யாப்பொருள் யாவையும் அசைத்து வீசிற்று. ஊழித்தீ அவற்றை யெரித்தது. கடல் எல்லாவற்றையும் உண்டு மகிழ்ந்தது. இத்தகைய மாயச்செய்கைகள் பலவற்றைச் செய்தெழுந்த சண்டவேகை கரிய பெரியமலையொன்றைப் பெயர்த்தெடுத்து உலகம் முழுவதையும் மூடியது. அப் பொழுது எல்லாவிடங்களினும் இருளே நிரம்பியது. பயா பதி மன்னனுடைய படைகள் போதற்கிடமின்மையானும் கண் ஒளி இழந்தமையானும் செய்வதறியாது திகைத்தன. திவிட்டன் அருக்ககீர்த்தியைப் பார்த்து, ‘இப்படி அஞ்சத் தக்கவிதமாகப் போர்புரிந்துவருவது யாது?’ என்று கேட்டான். அதற்கு அருக்ககீர்த்தி, ‘குதிரைக்கழுத்த னுடைய ஏவலை மேற்கொண்டு சண்டவேகை என்னும் மாயத்தெய்வம் தன் கூளிப்படையோடு நம்மேல் போருக்கு வந்துள்ளது. இஃது எல்லாவற்றையும் ஒருங்கே அழித்தா லல்லாமல் திரும்பாது. இதனை வெல்லும் வல்லமையுடை யார் ஒருவரும் இலர். இதனுடைய ஆற்றல் யாராலும் அளவிட்டுரைக்க முடியாது,’ என்று கூறினான்.

### திவிட்டன் போர்

தன் மைத்துனன் அருக்ககீர்த்தி கூறியவற்றைக் கேட்ட திவிட்டன் நகைத்து, ‘ஒரு பேய் நம்மேல் போருக்கு வந்தால் அதற்கு நாம் அஞ்சுவதோ? உம்முடைய சுத்த வீரத்தன்மை மிக நன்றாக இருக்கிறது’ என்று கூறி

நகைத்துவிட்டுத், தான் முன்கொண்ட பேருருவத்தை மண்ணும் விண்ணும் பொருந்த எடுத்து நின்றான். அப்பேருரு, கண்டோர் அஞ்சத்தக்கவிதமாக இருந்தது. அப்பொழுது அவனுடைய வலது கையில் பாஞ்சசன்னியம் என்னும் சங்கும், இடதுகையில் சார்ங்கம் என்னும் பெயரையுடைய வில்லும் வந்து சேர்ந்தன. திவிட்டன் திங்கள் ஒருபால் திகழ, இந்திரவில் மற்றொருபால் இலங்க, நீருண்ட கார் மேகம் மண்மேல் நின்றும் விண்மேல் ஓங்கியதுபோல விளங்கினான். பாஞ்சசன்னியத்தை வாய்வைத்து எட்டுத் திக்கும் காதடைக்கும்படி ஊதினான். வில்லை வளைத்துப் பேரொலி செய்தான். அஃதுடன் தன் வாயாலும் உங்காரஞ் செய்தான். யாவரும் அஞ்சத்தக்கவண்ணம் வந்த அச்சண்டவேகை தானே அஞ்சியோடியது. அதனுடைய மாயங்களெல்லாம் அழிந்து தொலைந்தன.

## திவிட்டனும் அச்சுவகண்டனும் போர் புரிதல்

அச்சண்டவேகை அஞ்சியோடியதைக் கண்ட அச்சுவகண்டன் தன்னுடைய யானையைக் கொண்டுவருமாறு கட்டளையிட்டான். அவ்வாறே அவனுடைய யானை கொண்டுவரப்பட்டது. அதன்மீது ஏறிக்கொண்டு பலவகையான தெய்வப் படைகளுடன் போர்க்களம் புகுந்தான். திவிட்டன் படை அச்சுவகண்டனுடைய திடுக்கிடத்தக்க கோலத்தைக் கண்டு அஞ்சியோடியது. திவிட்டன் தன் வில்லை வளைத்து நாணைப் பூட்டினான். அப்பொழுது கருடவரசன் விண்வழியாக வந்து இறங்கினான். திவிட்டன் கருடனை வலங்கொண்டு அவன்மேல் ஏறியமர்ந்தான். அச்சுவகண்டன் திவிட்டனைப் பார்த்து, 'ஏ மனிதா! நீதானா என்னுடன் போர்புரியப்போகிறாய்? யானையேற்றம் குதிரையேற்றம் முதலிய யாதும் அறியாத குற்றத்தால் கருடப்பறவைமேல் ஏறிக்கொண்டாய் போலும். நீ உன்னுடைய உயிர்மேல் விருப்புடையையாயின், நீ செய்துள்ள குற்றங்களையெல்லாம் பொறுக்குமாறு என்னைப் பணிந்து வேண்டிக்கொள்வாயாக! இன்றேல் விரைவில் அழிந்தொழிவாய்,' என்றான். இந்த வீண்

பேச்சைக்கேட்ட திவிட்டன் நகைத்து, 'அடே அறிவிலி! போர்செய்ய ஆற்றலிருந்தால் செய்க வீண்மொழி விளம்புவதை விடுக,' என்றான். உடனே அச்சுவகண்டன் வில்லை வளைத்துக் கணைகளை மழைபோல் சொரிந்தான். அக் கணைகளைக் கருடன் தன் சிறகால் உதறிவிட்டான். அவை யாவும் முறிந்து அழிந்தன. அச்சுவகண்டன் தெய்வக் கணைகளைச் செலுத்த எண்ணினான். முதலில் பாம்புக் கணையை (நாகாத்திரம்) வீசினான். அப்பாம்புக்கணை ஆயிரங்கோடிப் பாம்புகளாகி விண்முழுவதும் பரந்து தீயாகிய நஞ்சினை வாய்கடோறும் வெளிப்படுத்திக்கொண்டு திவிட்டன்மீது வந்தது. திவிட்டன் தன் வில்லை வளைத்துக் கருடக்கணையைச் செலுத்தினான். அது சென்று பாம்புக் கணையை அழித்தது. பின்னர் அச்சுவகண்டன் உலகங்கள் எல்லாவற்றையும் ஒருங்கழிக்கத்தக்க தீக்கணையைச் செலுத்தினான். திவிட்டன் உடனே மழைக்கணையைச் செலுத்தினான். தீக்கணை வன்மைகுன்றி அவிந்தொழிந்தது. அச்சுவகண்டன் மோகக்கணையை வீசினான். அதனால் உலகமெல்லாம் உறக்கத்தை யடைந்தது. திவிட்டன் ஊர்தியாகிய கருடன்கூடச் சிறிது தியங்கினான். திவிட்டன் உடனே அறிவுக்கணையைச் செலுத்தவே, மோகக்கணையின் வன்மை யழிந்தது. தன் செய்கைகளெல்லாம் பயனின்றி யழிந்ததைக் கண்ட அச்சுவகண்டன் பெருஞ்சினங் கொண்டான்.

## அச்சுவகண்டன் அழிவு

இறுதியில் இவனை உருளைப்படையால்தான் தொலைக்க வேண்டுமென்று முடிவுகட்டியவனாய் உருளைப்படையைத் தொழுது வந்தித்துப் 'பகைவனை வெல்க' யென்று கூறித் திவிட்டன்மீது விட்டான். திவிட்டனைப் பார்த்து, 'உன்னைக் காத்துக்கொள்ள வல்லையேற் காத்துக்கொள்வாயாக,' என்றான். அவ்வுருளைப்படை தீப்பொறிகளைக் கக்கிக்கொண்டு திவிட்டன்மீது வந்தது. அத் தீச்சுடரால் திவிட்டன் மறைப்புண்டான். எல்லோருந் திவிட்டனைக் காணாது திகைத்தனர். ஆழிப்படை திவிட்

டனை யடைந்து, அவன் அடிகளிற் பணிந்து, அவனை வலஞ்செய்து அவனுடைய வலப்பக்கத்தில் வந்துநின்றது. திவிட்டன் அவ்வுருளைப்படையினை வலக்கையால் வாங்கி மாற்றி, அச்சுவகண்டன்மீதே செலுத்தினான். அவ்வுருளைப்படை அச்சுவகண்டனுடைய மார்பைப் பிளந்து தலையை அறுத்து அவனேறிய யானையையுங் கொன்று வீழ்த்தியது. அச்சுவகண்டன் நிலத்தின்மீது புரண்டு உயிர்விட்டான்.

அச்சுவகண்டன் இவ்வாறு இறந்தொழிந்ததைக் கண்டோர், 'யானையின்மேல் வெண்கொற்றக் குடையின் கீழ்ப், பல அரசர்கள் தன்னைப்போற்ற வந்தவன் இவ்வாறு இறந்தான்! இவ்வுலக நிலையாமை மிக வியப்புடையது. நேற்று நெடிய குடையின்கீழ்த் தன் ஆணையுருளை முன் வரப், போர் செய்வதில் மிகுந்த வன்மையுடைய அரசர்கள் பலர் போற்றி வழிபட வந்தவனாகிய இவனே இவ்வாறு இறந்தொழிந்தான்! தானெறிந்த உருளைப் படை தனக்கே பகையாகத, தேன்பொருந்திய மாலையை உடையவன் சிறிய யானையின்மீது இறந்தான்! நாமறிந்த படி பார்த்தால் இவ்வுலக வாழ்க்கை வீணேபோலும்! திவிட்டன்மீது எறிந்த உருளைப்படை தனக்கே பகையாக வந்து தன்னுடைய மார்பைப் பிளக்க இறந்தொழிந்தான்! இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையை யாவர் அறிவார்கள்?' என்று கூறி வருந்தினார்கள்.

## மகளிர் வருந்தலும், இறுதிக்கடன் புரிதலும்

அச்சுவகண்டன் மனைவியாகிய கனகசித்திரை அங்குத் தன்னுடைய தோழிகளோடு வந்துசேர்ந்தாள். அவள் தன் கணவன் உயிரிழந்து வறுநிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக்கண்டு அவன்மீது விழுந்து பலவாறு இரங்கிப் புலம்பினாள். இறுதியில் அவளும் இறந்தொழிந்தாள். மற்றைய கரிதன்மகளிரும் போர்க்களத்தை யடைந்தார்கள். அவர்கள் அம்பு பாயப்பெற்ற மயில்போலத் துன்பம் மிகவடைந்து உருகினார்கள். 'அரசர்கட்கரசே! வன்மை மிக்க உருளைப்படையை உடையோய்! எவர்க்கும் தோல்வி

யடையாதவனே! உலகம் முழுமையும் ஒருகுடை நிழற் கீழ் ஆண்டவனே! எல்லா வுலகத்தினராலும் போற்றப் பெறும் சீர்த்தியினையுடையோய்! நீ மதயானையின்மேல் விழுந்து கழுகுகள் பாராட்ட இறந்துகிடத்தலும் தகுமோ?' என்று பலவாருகப் புலம்பி நொந்தனர். எவ்வளவு புலம்பி ஞல்தான என்ன? 'ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டா லும் மாண்டார் வருவரோ'—பின்னர் அவர்கள் ஒருவாறு தெளிந்து அச்சுவகண்டனையும் அவனுடைய உடன்பிறந் தார்களையும் கனகசித்திரன் முதலிய மைந்தர்களையும் மற்றும் பல அரசர்களையும் தீயிலிட்டு இறுதிக்கடன்களைப் புரிந்தனர். பிறகு யாவருந் தமது ஊரை யடைந்து கைம்மை நோன்பை மேற்கொண்டனர்.

திவிட்டன், அச்சுவகண்டனை மாய்த்தொழித்த வளவில் தேவர்கள் பூமாரிபெய்து வாழ்த்தினர். வெற்றிமுரசு கள் ஒலித்தன. 'யாவருந் திவிட்டனைப் போற்றுங்கள்,' என்று விண் வாக்கு விளம்பியது. போரில் இறவாது எஞ்சியிருந்த விஞ்சையர் திவிட்டனைத் தொழுது போற்றி னர். அவன் வழியொழுகி அவனருள்பெற்று விஞ்சைய ருலகடைந்தனர்.

## முடி சூட்டுதல்

திவிட்டன் தானேறிய கருடனை விட்டிறங்கி அரச யானை யொன்றின்மேலேறிப் பல மன்னருந் தன்னைச் சூழ்ந்து போற்றிவரப் பாசறையை அடைந்தான். மூத்த நம்பியாகிய விசயனையும் அழைத்துக்கொண்டு சென்று பயாபதி மன்னனுடைய அடிகளிற் பணிந்தான். பயாபதி மன்னன் அரசர்கள் எல்லோரையும் பார்த்து, 'அரசர் காள்! இம்மைந்தர்களைப் பெற்றதால் எவரும் பெறுதற் கரிய பெரும்பேற்றினை யானடைந்தேன். இது நான் முன் பிறப்பில் செய்த நல்வினையின் பலனாகும். எனவே, உங்கள் முன்னிலையில் இவ்விருவருக்கும் அணிமணி முடி சூட்டி அரசுரிமையை அளிக்க வெண்ணினேன். நீவி ரனைவரும் இங்குத் தங்கியிருந்து, முடிசூட்டலுக்கு வேண்

டிய நன்முயற்சிகளைச் செய்து, என்னை மேன்மைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,' என்று பேசினன். சுவலனசடி யரசன் முதலாயினேரும் மற்றுமுள்ள மன்னர்களும் உள்ளம் உவந்து பட்டஞ் சூட்டலுக்கு வேண்டிய நன்முயற்சிகளில் ஈடுபடலாயினர். இச்செய்தியை முரசறைந்து நகரமக்கட்கு இனிது தெரியப்படுத்தினர். கங்கை, யமுனை, நருமதை, கோதாவரி, கிருட்டிணை, காவேரி முதலிய நல்லாறுகளின் நீரைப் பொற்குடங்களில் முகந்து கொண்டுவந்து, மங்கல முரசங்கள் கடல்போல் ஒலிக்கவும் பெரியோர்கள் வாழ்த்துக் கூறவும் இருமைந்தர்களையும் முழுக்காட்டினார்கள். விஞ்சையர்கள் தமது மலைமுடியிலுள்ள இனிய தூயநீரை மணிக்குடங்களில் கொண்டு வந்து ஆட்டினர். தேவர்கள் அமுத மாரி பெய்தனர். திருமகள் வந்தடையத்தக்க திருவுருவினலும் செவ்வியாலும், திவிட்டனை உலகங் காக்கத்தக்க ஆணையுருளையானென்று முடிவுசெய்தார்கள். நன்மணிகள் பல பதித்தமைக்கப்பெற்ற மணிமுடியை அவன் தலைமேல் சூட்டினார்கள். எவரானும் வெல்லற்கரிய அச்சுவகண்டனை வென்று அவனாழியைத் தன் கையில் ஏற்றவனாதலின், இவனே வாசுதேவனென்று புகழ்ந்து போற்றிக் கொண்டாடினார்கள். மூத்தவனாகிய விசயன், உருவத்தாலும் படையாலும் ஆற்றலாலும் பலபத்திரனென்று போற்றிக் கொண்டாடி முடிசூட்டினார்கள். பெரியோர்கள் பலரும் ஆசிகூறினர். மங்கையர் மங்கலவாழ்த்துப் பாடினர். திவிட்டன் மணிமுடியோடு அரியணைமீது இனிது வீற்றிருந்தான். முன்னமே வந்து பொருந்திய சங்கு, சக்கரம், வில் ஆகியவைகளோடு தண்டும் வாளும் வந்து சேர்ந்தன. அப்போது திவிட்டன் திருமாலே போன்று திகழ்ந்தான். சங்கநிதி பதுமநிதி முதலிய ஒன்பதுவகைச் செல்வங்களும், சிந்தாமணி சூளாமணி முதலிய தெய்வமணிகளும் அவனிடம் வந்து சேர்ந்தன. இவைகளையெல்லாம் பயாபதியரசன் கண்டு களிபேருவகை கொண்டான். முடிசூட்டல் நடந்து முடிந்தவுடன் உருளைக்கடவுள் (சக்கராயுதம்) வீற்றிருக்கத் திருக்கோயில் ஒன்றமைத்து, மற்றைய

படைகளுக்குங் கோயில் கட்டினன். கருடனுக்குக் கோயிலுந் திருவிழாவும் ஏற்படுத்தினன்.

## கோடிக்குன்றம் என்னும் மலையைத் தூக்குதல்

நாட்கள் பல சென்றன. ஒருநாள் புலவர்கள் பலர் திவிட்டனைப் பார்த்து, 'முன்னளிலிருந்து இந்நாள் வரை உலகாண்ட அரசரின் வரலாறுகள் கூறப்பட்ட புராணங்களில் தம்முடைய சிறந்த வரலாறுங் கூறப்பட்டுள்ளது. தாம் அச்சுவகண்டன் முதலிய பகைவரை வென்று திருமாலுக்குரிய தன்மைகளையெல்லாம் பெறுவீரென்றும், கோடிக்குன்றமென்னும் மலையினைப் பெயர்த்துத் தாங்குவீரென்றும் அவ்வரலாற்றிற் காணப்பெறுகின்றன. எதிர்கால அறிவினையுடைய முனிவர்களால் கூறப்பட்டிருக்கும் வரலாறுகள் பொய்யாகா. வரலாறுகளிற் கூறப்பட்டுள்ள பல அரசர்களுள்ளும் தாமே சிறந்தவராவீர்,' என்று பலவாறு புகழ்ந்து பேசினர்கள். திவிட்டன் அப்புலவர்களை நோக்கிப், 'புராண வரலாறுகள் உண்மையே. இந்நிலவுலகில் அரசுசெய்த மன்னர்கள் எண்ணற்ற பேர். யானும் அவர்களில் ஒருவனுவேன். எனக்கு முன்னுண்ட அரசர்கள் அனைவருமே இறந்தொழிந்தார்களே யல்லாமல் நிலைநின்றவர் எவருமிலர். இவ்வுலகம் இன்னும் எத்தனையோ பேரைப் பார்ப்பதற்கிருக்கின்றது. ஆதலின், இவ்வுலக வாழ்வும் புகழும் நிலைபேறில்லாதன. ஆதலின், நாம் எதற்கும் பெருமைப்பட வேண்டியதில்லை,' என்று கூறினன். பின்னர் அப்புலவரும் பிறருந் தன்னைத் தொடர்ந்துவரத் தான் கோடிக்குன்றம் என்னும் பெரிய மலையை அடைந்தான். இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றி அம்மலையினைப் பெயர்த்தெடுத்துக் குடையைப் போல் கையிலேந்தி நின்றான். திவிட்டனின் வன்மையைக் கண்ட அனைவரும் இவன் இறைவனே என்று எண்ணி ஏத்தி இறைஞ்சினர்கள். அரசர் பலரும் இவன் வாசுதேவனே இதற்குச் சிறிதும் ஐயமில்லை யென்று கூறி அவனை வாழ்த்தினர்கள். திவிட்டன் அம்மலையைப் பழமைபோல் வைத்தான். அனைவரும் புடைசூழ்ந்துவரப் போதனமா

நகரத்தை அடைந்தான். நகரமக்கள் பலவகைச் சிறப்புக்களுடன் திவிட்டனை வரவேற்றனர். மலர்களையும் பலவகை நறுமணப் பொடிகளையும் இறைத்து மகிழ்ந்தனர். திவிட்டன் தனது அரண்மனையை அடைந்தான்.

## சுயம்பிரபை பட்டத்தரசி யாதல்

பின்னர்த் திவிட்டன் சுயம்பிரபைக்குப் 'பட்டத்துத் தேவி' யென்று பெயர் கொடுக்க எண்ணினான். அதற்குரிய தினத்தைக் குறிப்பிட்டு நகரமெங்கும் முரசறைவித்தான். அந்நாளில் தோழியர் சுயம்பிரபைக்கு மங்கலக் காப்புப்பணி யணிந்தனர். நறுநீர்கொண்டு முழுக் காட்டினர். இன்னியம் பலவும் இனிது முழங்கப் பட்டத்துத் தேவியென்று பெயருங் கொடுத்தனர். பின் திவிட்டன் தன் மாமன் சுவலனசடிக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களை யெல்லாம் செய்தான். பின்னர் மாமனை நோக்கி, 'நீவிர் வடக்குச் சேடியையும் தெற்குச் சேடியையும் ஒருங்காளக் கடவீர்' என்று கட்டளையிட்டனுப்பினான். மற்றும் திருமணத்திற்குவந்து அதுவரையினுந் தங்கியிருந்த பிறரையுந் தத்தம் இடங்களுக்கேகப் பணித்தான். தன் முன்னவனாகிய விசயன் பக்கத்திலிருக்க, ஐவகைப் படைகளும் தன்னைப் புறங்காப்பக், கருடன் முதலியோர் தன் ஏவலை எதிர்பார்த்து நிற்க இனிது அரசாட்சி புரிந்திருந்தான்.

# ௧௦. மக்கட்பேறும் மணச்செயலும்

திவிட்டன், சிந்தாமணி முதலிய எழுவகை மணிகளும், சங்கநிதி முதலிய ஒன்பதுவகைச் செல்வங்களும் விரும்பியபடி உதவி செய்யவும், பதினாறாயிரம் தேவர்கள் தன்னைப் பத்துத் திக்கிலும் காவல்புரியவும், நிலவுலக மன்னர் பதினாறாயிரவர் தன் பொன்னடியைத் தாழ்ந்து போற்றவும், நூற்றுப்பத்து விஞ்சையரசர்கள் தன் ஆணைக்குக் கட்டுப்பட்டொழுகவும், எல்லா வகையான சிறப்புக்களுடனும் ஒப்பற்ற பேரரசனாய்த் தனியாட்சி புரிந்திருந்தான். அவன் சுயம்பிரபையினுடைய காதற் கடலிலே இனிது படிந்திருந்தான். சுயம்பிரபை தான் தன்னுடைய இரதநூபுர நகரிலிருந்து வரும்போது ஒரு பாரிசாதமரத்தைப் போதனமாபுரத்தில் கொண்டுவந்து வைத்து அன்புடன் வளர்த்துக்கொண்டிருந்தாள். அம் மரம் அரும்பத் தொடங்கியது. அம்மரத்திற்குக் காம வல்லிக் கொடியைக் கடிமணம் செய்து திருவிழாக் கொண் டாட விரும்பினாள். அவ்விழாவிற்குத் தன் மணாளனாகிய திவிட்டனை அழைக்க எண்ணினாள். தன்னுடைய உயிர்த் தோழியாகிய அமிர்தமாப் பிரபையைப் பார்த்து, 'நீ நம் அரசர்பாற் சென்று, பாரிசாதத்திற்கு நடத்தும் திருமணவிழாவைக் காணவருமாறு அவரை அழைத்து வருவையாக, என்று கட்டளையிட்டாள். அவளும் அவ் வாறே சென்று திவிட்டனைக்கண்டு வாழ்த்திச் சுயம்பிரபை கூறிய செய்தியை உரைத்தாள். அதற்குத் திவிட்டன் 'அவ்வாறே வருகிறேன்' என்று தெரியப்படுத்தினான்.

## பாரிசாத மரத்திற்குத் திருமணம்

பின்னர்ப் பாரிசாதத்திற்குத் திருமண விழாத் தொடங்கியது. திவிட்டன் அதனைக் காணுதற்குச் சென்றான். அப்பொழுது கோமாளியும் நகைச்சுவையாளனுமாகிய திவிட்டனுடைய பார்ப்பனத் தோழன் ஒருவன் திவிட்டனைப் பின் தொடர்ந்தான். அவனுடைய காது

களிற் குண்டலங்களும் வளையங்களும் ஒளி வீசின. குடுமி யில் பூமாலைகளை நிறையச் சூடியிருந்தான். அவன் இடுப்பில் ஒரு கையை வைத்துக்கொண்டு மற்றொரு கையால் மேலாடையைப் பற்றிக்கொண்டு நகைமுகத் துடன் திவிட்டன் முன் நின்றான். திவிட்டனுக்குப் பல வகையான வேடிக்கைகள் காட்டினான்; உடலைக்கோண லாக வளைத்துக்கொண்டு இனிய குரலெழுப்பிப் பாடினான். பாட்டிற்கேற்ப ஆடினான்; இடையிடையே நகைச்சுவை ததும்பப் பேசினான். திவிட்டன் அவைகளைக் கண்டு மகிழ்ந்தான். குறுகிய கைகளையும் பெரிய வயிற்றினையு முடைய அப்பார்ப்பனன் திடீரென்று தன்னுடைய வயிற் றைப் பிசைந்துகொண்டு நிலத்தில் விழுந்து புரள்வா னான். திவிட்டன் அவனைப் பார்த்துத், 'தோழ! நினக்கு யாது நேர்ந்தது?' என்று கேட்டான். அதற்கு அந்நகைவேழம்பன், 'அரசே! கணக்கற்ற கொழுக்கட்டை களைத் தின்றபடியால் என் வயிறு உப்பி ஊதுகின்றது. வயிற்றில் கொழுக்கட்டைகள் திணறுகின்றபடியால் மிகுந்த வலியுண்டாகின்றது. அவ்வலி பொறுக்கக்கூடாத தாக விருக்கிறது. அதனால் மிகவும் வருந்துகின்றேன்,' என்றான். நகைவேழம்பன் நவின்றவைகளைக் கேட்ட நம்பி, நகைத்து, 'நண்ப! கொழுக்கட்டைகளை என்றைக்குத் தின்றனை? அவ்வுண்டியினை ஏன் கண்டபடி யுண்டனை?' என்று கேட்டான். நகைவேழம்பன், 'இன்னும் உண்டி லேன். இன்று அரசியார் செய்யும் விழாவில் தின்னப் போகின்றேன்,' என்றான்.

நகைவேழம்பன் கூற்றைக் கேட்ட திவிட்டன் 'மறைபயிலும் அந்தணர்க்கேயன்றி நினக்குக் கொழுக் கட்டை வழங்கமாட்டார்களே யாதுசொல்வாய்?' என்றான். நகைவேழம்பன், 'நான் மறை பயிலாவிட்டாலும் மறை பயின்ற மறையோர்களைச் சொற்போரிலே வெல்லுவேன். என்னுடைய ஆற்றலை அரசியார் நன்கறிவர். ஆதலின், எனக்குக் கொழுக்கட்டை வேண்டியமட்டும் அகப்படும்,' என்றனன். திவிட்டன், 'நீ மறையறியாயே! எவ்வாறு

மறையறிந்தவர்களை வெல்லுவாய்?' என்று கேட்டான். அதற்கு நகைவேழம்பன், மறையவர் தங்கள் வாயால் மறையைப் பாடினால், நான் அவர்களை என்னுடைய கைத் தடியால் சாடுவேன்,' என்றான். திவிட்டன், 'உன்னுடைய ஆற்றலை ,அங்கு பார்ப்போமென்று கூறி அவனையும் உடனழைத்துக்கொண்டு சென்றான். அவர்கள் செல்லும் வழி, அரியபொழிலாக அமைந்திருந்தது. பொழிலி னிடத்திலே இனிய கனிகள் எங்கும் நிறைந்திருந்தன. அவற்றைக்கண்ட நகைவேழம்பன், 'இக்கனிகளை வயிறு நிறைய உண்டு மகிழேனோ? இவற்றைக் கண்களினாலே பார்ப்பதால்மட்டும் வேட்கையடங்கிவிடுமோ'? என்று பலவாறு பிதற்றிக்கொண்டு சென்றான். மேலும், அவன் அரசனைப் பார்த்துத், 'தங்கட்கு நோய்களெவையேனும் உளவோ? இனிய கனிகள் தங்கள் வாய்க்குக் கைக்குமோ? சில கனிகளைத்தின்று மகிழலாகாதோ? நான் சில கனிகளைப் பறித்துத் தின்று சுவைபார்த்து ஆராய்ந்து தரவா?' என்று பலவாறு பேசிக்கொண்டே வந்தான். திவிட்டன் பேரவாக் கொண்ட அந்நகைவேழம்பனைப் பார்த்து, 'நண்ப! இவற் றினும் உயர்ந்த கனிகள் அளவின்றி முன்னேயிருக் கின்றன. அங்கு சென்று வேண்டிய அளவு உண்டு மகிழ லாம்; துடிக்காமல் வருவாயாக,' என்றான். நகைச்சுவை யாளனும் 'நல்ல'தென்று மெல்லப் பின் சென்றான். ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் தன்னுடைய கோமா ளிக்கூத்தை நன்கு நடித்துக்கொண்டு சென்றான்.

பொழிலிலுள்ள பூக்களில் நின்றும் தேன் துளிகள் பிலிற்றின. 'அந்தோ! மழைபொழிகின்றதே! இருவரும் கையிற் குடை கொண்டுவரவில்லையே! இப்போது யாது செய்வ'தென்று நகைமொழிப்பார்ப்பான் நவின்றனன். மாம்பழங்களிலெல்லாம் வண்டுக்கூட்டங்கள் மொய்ப்ப தைக் கண்டு, 'அந்தோ! இனிய கனிகள் அநியாயமாகக் கெடுகின்றனவே,' யென்று கதறினன். பொழிலின் ஒரு புடையே காய்களும் கனிகளும் கடிப்புண்டும் வெடிப் புண்டும் மரங்களினடியிற் சிதறிக்கிடந்தன. அவைகளைக்

கண்டு உள்ளம் பதைத்தான். கைகளை உதறினன். ஞாயிறும் உட்புகுதற்கு முடியாத பொழிலில் கள்வர்கள் நுழைய எவ்வாறு துணிந்தனரோ,' என்று சினந்தான். அரசனகிய திவிட்டனைப் பார்த்து, 'அரசே! நினது காவல் நன்ருகவிருக்கிறது. கோட்டை கொத்தளங்களில் புல வீரர்கள் காவல்புரிகின்றனரே! அவர்கள் எதற்காக வீணே அங்கு நின்றுகொண்டு காவல்புரிகின்ருர்கள்? காவல் வேண்டப்படாத விடத்தில் காவல் வைத்திருப்பது வீண் தானே,' என்று கதறினன். மரங்களின் முடிக்கிளைகளில் நீண்ட வாலையுடைய குரங்குக் கூட்டங்கள் இருத்தலைக் கண்டான். 'கள்ளர்கள் இதோ விருக்கின்ருர்க'ளென்று மெதுவாகக் கூறிக் கைகளால் குறிகாட்டினன். திவிட்டன், இங்கே நம்முடைய வல்லமை யொன்றுஞ் செல்லாது. ஆரவாரஞ் செய்யாமல் இவ்விடம்விட் டகல்வதே நல்லது. விரைவாக வருவாயாக,' என்று கூறிக் கொண்டே விரைந்து நடக்கலானன். பார்ப்பனன் அவ்வுரைகேட்டு அஞ்சினன்போல இருபக்கங்களிலும் பார்த்துக்கொண்டே நடக்கலானன். இருவருஞ் சிறிது தொலை சென்றனர். பசிய மரங்களின் செறிவினுல் இருள் பரந்திருந்தது. அதனைக் கண்டு நகைமொழி யந்தணன், 'அந்தோ இவ்விருளில் எவ்வாறு செல்வது?' என்று கூறி அஞ்சினன். திவிட்டன், 'அந்தணுள! இஃதுண்மையான இருளன்று. பொழிலின் இருள். நீ வெருவாது வருவாயாக' எனறு கூறி நடந்தான். அப்பால் ஒரு மரத்தைக் கண்டு மருளமருளப் பார்த்துக் கையைப் பிசைந்து மெய்ந் நடுங்கினன். திவிட்டன் 'நீ அஞ்சக் காரணம் யா'தென்று வினவ, 'ஐய உலகத்தில் பொழிலும் போர்த்தொழில் புரிவதுண்டோ? நமக்கு முன் ஒரு மரம் இருப்புக் கவசம் தாங்கிப் போருக்கு வருவதுபோல் நிற்கின்றதே!' என்று கூறி அஞ்சி அரசன்பின் மறைந்தான். அரசன் அவனை நோக்கி, 'நீ சிறிதும் அஞ்சாதே. ஈண்டு நமக்கு முன் நிற்பது ஒரு மகிழமரம். இதனுடைய நோய் நீங்க நம்முடைய பெண்கள் தம் வாயிலிருந்த தேனை இதன்மேல் உமிழ, அதன்மீது கருநிற வண்டுக் கூட்டங்கள் மொய்த்

துக்கொண்டிருக்கின்றன. அவைகளே நின் கண்கட்கு இருப்புக் கவசம்போல் காணப்பெறுகின்றன,' என்று கூறி அவனுடைய அச்சத்தை அகற்றி அழைத்துச்சென்றான். சிறிது தொலை சென்றதும், நகைவேழம்பன் திவிட்டநம்பியைப் பார்த்துக் கைகைத்தட்டி, 'அசோக மரம் கிளைகளால் இளந்தளிர் விடுவதல்லாமல் காய்ந்த அடிமரத்திலுஞ் சிவந்த தளிர்விடுதலுண்டோ?' என்று கூறி விலாப்புடைக்க நகைத்தான். அரசன் அவனை நோக்கி, 'இதன் அடியில் தோன்றுவது இளந்தளிரன்று. இதற்கேற்பட்ட நோய் நீங்க நம்முடைய பெண்கள் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பெற்ற சிவந்த அடிகளால் இதன்மீது மிதித்ததன் அறிகுறியேயாகும்,' என்றான். இவ்வாறு இருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே சென்று ஒரு படிக மேடையை அடைந்தனர். திவிட்டன் அம்மேடைமீது ஏறியமர்ந்தான். நகைவேழம்பன் அம்மேடையருகே நின்றிருந்தான்.

சிறிதுநேரம் ஆனவுடன் நகைவேழம்பன் மருண்டான். மிரள மிரள விழித்தான். உடல் நடுங்க ஓடலானான். அவன் செய்கைகளைக் கண்ட திவிட்டன், 'என்ன செய்தி? ஏன் இவ்வாறு மருளுகின்றாய்?' என்று கேட்டான். அதற்கு அக்கோமாளி, 'அரச! நம்மைப் புடைத்துண்ணத்தக்க கூளியொன்று ஈண்டுள்ளது. இதனால் நமக்குத் தீங்கு விளையுமுன் நாம் இவ்விடம்விட் டகல்வதே நன்மை; ஆதலின், இங்குத் தங்காமல் தாங்கள் வாருங்கள்; விரைந்தோடிப்போவோம்,' என்றனன். திவிட்டன், அக்கூளியின் வடிவம் எவ்வாறுள்ளது? கூறுதி,' என்றனன். அவ்வடிவத்தைப் பார்க்கவும் அச்சமாயிருக்கிறது. காதில் மணிக்குண்டலங்களும் வளையங்களும் தொங்கி யசைகின்றன. கண்கள் காதளவும் நீண்டு அகன்று நான்கு பக்கங்களும் சுழன்று அச்சுறுத்துகின்றன. கைகள் குறுகியுள்ளன. தொந்தி பருத்துச் சரிந்திருக்கின்றது. இத்தகைய அச்சம் விளைவிக்கும் வடிவத்தை நானிதுவரை கண்டதேயில்லை. நாம் இவண் தங்கியிருந்தால் நம்மை யிது விழுங்கிவிடும். அரசே! விரைவில் எழுந்திருங்கள். நாம் வேறிடஞ்

சென்று விடுவோம்,' என்றனன். படிகச்சுவரில் காணும் தன் நிழலையே பார்ப்பான் கண்டு மருளுகின்றான் என்பதைத் திவிட்டன் உணர்ந்துகொண்டான். அவனைப் பார்த்து, 'அது பூதம் அன்று. உன்னுடைய நிழலேயாகும். படிகத்திற்குப் பக்கத்தில் உள்ள பொருள்களின் நிழல் அப்படிகத்தில் விளங்குவதை நீ பார்த்ததில்லையா? தன் நிழலைக்கண்டு இவ்வாறு அஞ்சுவாரும் உளரோ?' என்றான். நகைவேழம்பன் அரசனைப் பார்த்து, 'அரசே! நன்றாகச் சொன்னீர்கள். என்னுடைய நிழல் என்னுடனே யிருக்குமல்லாமல் இக் கல்லினுட்புகுமா? இவ்வடிவம் பார்ப்பதற்கு அச்சத்தை யுண்டாக்குவதாக விருக்கிறதே, நான் 'அவ்வாறு யிருக்கின்றேன்?' என்னுடைய இனிய பேரழகு காண்பவர்களுடைய கண்களையெல்லாங் கொள்ளைகொள்ளுமாறு விளங்கவில்லையா? உண்மையில் இஃது என்னுடைய வடிவமன்று,' என்று உறுதியாகக் கூறியதுடன் மருண்டு ஓடலானான். திவிட்டன் அவனை யழைத்து, 'அறிவிலி! இஃது உன்னுடைய வடிவமேயாகும். நீ செய்யும் செயல்களை யெல்லாம் இதுவுஞ் செய்கின்றதைப் பார்,' என்றான். நகைவேழம்பன் படிகக்கல்லின் அண்மையில் நின்று கோணக்கூத்தாடினான். படிகத்தினுட்டெரிந்த வடிவமும் அவ்வாறே ஆடியது. அதனைக்கண்டு கல்லினுட்டெரிவது தன்னுடைய நிழலே யென்று தேறித்தெளிந்தான். பின்னர் அக்கல்லின் ஓரத்தில் ஓரிடத்தில் உட்கார்ந்தான்.

திவிட்டனும் நகைவேழம்பனும் இவ்வாறு அமர்ந்திருக்கும்போது, சுயம்பிரபை கன்னியர் பலருடன் காவினை யெய்தினாள். திவிட்டநம்பி படிகக்கல்லில் அமர்ந்திருத்தலைப் பார்த்தாள். அவனோடு விளையாட எண்ணினாள். தன்னுடைய விஞ்சையின் வன்மையால் வடிவத்தை மறைத்துக்கொண்டு தன்னுடைய தலைவன் அண்மையிற் சென்று நின்றாள். அப்பொழுது நகைவேழம்பனும் திவிட்டநம்பியும் உரையாடிக்கொண்டிருந்தனர். நகைவேழம்பன் அரசனை நோக்கி, 'அரசே! இவ்வசோகமரம்

பூக்கும் வண்ணம் தன்னுடைய செம்பஞ்சுக்குழம்பூட்டிய அடிகளை வைத்தவள் நிலமாதோ அன்றி விஞ்சையர் மகளோ கூறுவாயாக,' என்றான். திவிட்டன் மரத்தின் மீது வைத்துள்ள அடிச்சுவட்டைப் பார்த்துவிட்டு, 'இவ் வடியின் அழகினாலே நான் இவளுடைய உடல் முழுவதையும் அறிவேன். இவள் செஞ்சொல் மொழியும் விஞ்சையர் வஞ்சி; மண்ணுலகாளும் மன்னனுக்குரியாள்,' என்றனன். சுயம்பிரபை தன்னுடைய தலைவன் கருத்தை உள்ளவாறுணராது ஊடல் கொண்டாள். தன் வடிவம் வெளிப்படத் தோன்றி நின்றாள். அவளுடைய கண்கள் சிவந்தன; நுதல் வியர்த்தது; அரசனை விழுங்கிவிடுவாள் போலப் பார்த்துச் சினந்து நின்றாள். நகைவேழம்பன் சுயம்பிரபையைக் கண்டு அஞ்சி ஓடி ஒரு புதருக்குள் மறைந்துகொண்டான். திவிட்டன் சுயம்பிரபையின் சீற்றத்தைக் கண்டு இனிய மொழிகள் பல பேசி அவளுடைய சீற்றத்தை மாற்றப் பார்த்தான். அவளோ சினஞ்சிறிதும் ஆறுதவளாய்ச், 'செஞ்சொன் மொழியும் விஞ்சையர் வஞ்சியும் மண்ணுலகாளும் மன்னனுக்குரியாள்' என்று தாங்கள் கூறிய அம்மங்கை யாவள்?' என்று கேட்டாள். திவிட்டன் சுயம்பிரபையினுடைய அடிகளை வணங்கி, 'அம்மங்கை நீயே!' என்றனன். அம்மொழி கேட்டுச் சுயம்பிரபை சினம் மாறினாள். 'நகைவேழம்பனைப் பிடித்து வாருங்கள்,' என்று கட்டளையிட்டாள் தன்னுடைய தோழிகளுக்கு. அவர்கள் அவ்வாறே சென்று புதரில் மறைந்திருந்த பார்ப்பானைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவனுடைய கோமாளித்தனத்தைப் பார்த்த சுயம்பிரபை 'இவனை மாலைகளால் இறுக்கிக் கட்டி இழுத்து வாருங்கள்,' என்று கூறிவிட்டுத் தலைவனோடு அவ்விடம் விட்டுப் புறப்பட்டாள். திவிட்டன் அவளோடு இன்னுரையாடிக்கொண்டு சென்றான். அவன் சுயம்பிரபையைப் பார்த்து, 'நம்முடைய நகைவேழம்பன் நவையில்லாதவன். அவன் தளையை யகற்றக் கட்டளையிடுக,' என்றான். அவள் தன்னுடைய தோழிகளைப்பார்த்து, 'அப்பார்ப்பனனது பிணிப்பை யகற்றுக,' என்றாள்.

அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அவன் ஆடிப்பாடி அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டிக்கொண்டு உடன்சென்றான். பொழிலிலுள்ள கனிகளைக் கண்டு பேராசைப்பட்டான். சுயம்பிரபை அவன் விரும்பிய கனிகளைப் பறித்து அவனுக்குக் கொடுக்கச் செய்தாள். எல்லாரும் பாரிசாத மரம் வளர்க்கப்பெற்ற இடத்தையடைந்தார்கள்.

அங்குச் சென்றதும், சுயம்பிரபையும் திவிட்டனும் பாரிசாதமரத்திற்குத் திருமணஞ் செய்யும் வேலையை மேற்கொண்டார்கள். தோழியர் பல இன்னியங்களை ஒலிக்கச் செய்தார்கள். மகளிர் ஒன்றாகக்கூடிப் பாரிசாதத்திற்கும் காமவல்லிக்கும் பனிநீரினால் நீராட்டினார்கள். பலவகை அணிகலன்களைப் பூட்டினார்கள். சாந்தம் குங்குமம் முதலியவைகளை அணிந்தார்கள். மற்றுஞ் செய்யவேண்டியவைகளைச் செய்தார்கள். பாரிசாதத்திற்குப் 'பொழிலரசு' என்றும், காமவல்லிக்குப் 'பொழிலரசி' என்றும் பட்டஞ் சூட்டினார்கள். பிறகு அனைவரும் பெருங் களிப்புடையார்களாய்ப் பலவகை விளையாட்டின் மேற் சென்றார்கள். திவிட்டனுக்குஞ் சுயம்பிரபைக்கும் மக்களைப்பெறவேண்டுமென்னும் எண்ண முண்டாகியது. சுயம்பிரபையும் அவளுடைய தோழிமார்களும் பொழில் விளையாட்டு விளையாடி நிற்பதை நகைவேழம்பனும் திவிட்டனும் மாயவித்தையால் மறைந்துநின்று கண்டு மகிழ்ந்தார்கள்.

மாதர்கள் பூக் கொய்தும், மாலைகள் கட்டியும், அவற்றையணிந்தும், பூவா மரங்களைப் பூக்கச்செய்தும், மலர்ந்த மரங்களிலேறியும் பொழில்விளையாட்டைப் புரிந்தனர். பின்னர் ஆங்குள்ள செய்குன்றுகளிலேறித் திரிந்தனர்; மலையெதிர் கூவினர்; அம்மனை, கழங்கு முதலியவைகளைக்கொண்டு விளையாடினர். இவ்வாறு விளையாடி நிற்குங்கால் திவிட்டன் ஒரு மாயாதெய்வத்தை யழைத்து அதனை ஒரு களிறாக மாற்றினான்; விளையாடி நிற்கும் மாதர்கட்கு முன்செல்ல ஏவினான். மங்கையரனைவரும் அம்மாயக் களிற்றினைக் கண்டு அஞ்சியோடினர். சுயம்

பிரபை அச்சம் பெரிதுமடைந்து தன் காதலனை யழைத்தாள். திவிட்டனும் அவள்முன் தோன்றி அவளைத் தேற்றினான்; அவளது கோலத்தைத் திருத்தி ஒழுங்கு செய்தான்; காலமும் நண்பகலாகியது; திவிட்டன் மாதர்களுடன் நறுமணத் தடாகத்திற்குச் சென்று நீர்விளையாடல் புரிந்தான். பின்னர் அனைவரும் அமிழ்தினுமினிய பல வகை உண்டிகளை யுண்டுமகிழ்ந்தனர்.

அப்போது இரதநூபுரச்சக்கரவாள நகரிலிருந்து, ஒரு தூதன் விண்வழியாக வந்து திவிட்டனை யடைந்து, அவனடி பணிந்து நின்றான். திவிட்டன் அத்தூதனைப் பார்த்துச், சுவலனசடி யரசன் முதலியோருடைய நன்மைச் செய்திகளை வினவினான். அத்தூதனும் அனைவரும் நலமென்று கூறித், தான் கொண்டுவந்த திருமுகத்தை அரசன் கையிற் கொடுத்தான். அவன் அதனை வாங்கிச் சுயம்பிரபையின் உயிர்த்தோழியாகிய அமிர்தமாபிரபையிடம் அளித்துப் படிக்கச்சொன்னான்.

அமிர்தமாபிரபையும் அவ்வாறே அத்திருமுகத்தைப் படித்தாள். அதில் எழுதப்பட்டிருந்த செய்தி : சுரேந்திரகாந்தமென்னும் உத்தரசேடிநகரத்தினை அரசாளும் மேகவாகனன் மகள் சோதிமாலையைச், சடியரசன் மகன் அருக்ககீர்த்திக்குத் திருமணம் புரிந்தமையாகும். பாரிசாதத்திற்கும் காமவல்லிக்கொடிக்கும் திருமணம்புரிந்து, மகிழ்ந்திருக்கும்வேளையில் வந்த இந்தச் செய்தி, எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை யூட்டிற்று. செய்தியைக் கேட்ட யாவரும் எல்லையற்ற இன்பத்தில் மூழ்கினர். அத்தூதனுக்கு ஆடையணி முதலியவைகளை, உள்ளம் உவக்குமாறு கொடுத்துச் செல்லவிடுத்தார்கள். அவனும் அவர்களை வணங்கிச் சென்றான். அப்போது ஞாயிறு மறைந்தனன்.

மக்கட்பேறு

இரவிலும் பல ஆடல் பாடல்கள் புரிந்தனர். பிறகு, அரசனும் அரசியும் பள்ளியறை சென்று துயில்கொண்டனர். சுயம்பிரபை உறங்குகையில் களங்கமற்ற முழுத் திங்கள் ஒன்று தன் வாயினுட் புகுந்து வயிற்றிற் சென்ற

தாகக் கனவு கண்டாள். அஞ்சி யெழுந்தாள்; அக் கனவினைத் தன் தலைவனுக்குணர்த்தினாள்; அவன் அவளை அஞ்சற்கவென்று தேற்றினான். 'இஃதோர் நற்குறியே யாகும். உலகமெல்லாம் தன் ஆணையுருளையை உருட்டும் மைந்தனைப் பெறுவாய்,' என்றியம்பினான். அப்போது விண்ணிலிருந்த திங்களும், தான் சுயம்பிரபையின் வயிற்றில் நுழைந்தது உண்மைதானென்று, உலகங்களுக் குணர்த்துவான்போல, மேற்றிசைக் கடலினுள் மறைந்தனன் அவள் வயிற்றில் தோன்றும் மைந்தனுடைய ஒளியைக் காட்டுவான்போலக் கீழ்த்திக்கில் ஞாயிறு தோன்றினான். சுயம்பிரபை அன்றுமுதல் கருவடைந்தாள். தக்க காலத்தில் நாள்களும் கோள்களும் நன்னிலையுற்ற சுவாதி வேளையில், ஒரு மைந்தனைப் பெற்றாள். அப்பொழுது பல நன்னிமித்தங்களும் நிகழ்ந்தன; மங்கல ஒலிக்கருவிகள் கடல்போல் ஒலித்தன; நகரமக்கள் மாலை முதலியவைகளைக்கொண்டு நகரத்தை அழகுசெய்தனர். அரசன், 'திறைகொடுக்கும் அரசரிடம் ஏழாண்டளவும் இறைவாங்காதொழிக. பொன்னையும் மணியையும் அள்ளி வீசுக. சிறைக்கோட்டத்திலுள்ள குற்றவாளிகளனைவரையும் விடுதலை செய்க,' என்று யாண்டும் முரசறைவித்தான். அருகன்கோவிலில் அணிவிழாக் கொண்டாடினர். பெண்கள் ஒன்றுசேர்ந்து தெருக்கடோறும் எண்ணெய், சுண்ணம் முதலியவைகளை இறைத்து விளையாடினர். அக் குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாஞ் செய்து விசயன் என்று பெயரிட்டனர். அச்சிறுவன் நாளொரு வண்ணமும் பொழுதோர் உடலுமாக நன்கு வளர்ந்துவந்தான்.

இம்மங்கலச் செய்தியைத் தென்சேடிக்கு அனுப்புவதற்கு ஆவன செய்திருக்குங்கால், விமானமொன்று விஞ்சைய ருலகிலிருந்துவந்து நிலத்திலிறங்கியது. விமானத்திலிருந்து இறங்கிவந்த தூதர்கள் திவிட்டனைக்கண்டு வணங்கி, 'அருக்ககீர்த்தியின் மனைவி சோதிமாலை கருவுற்றிருந்து நல்லவேளையில் மைந்தனொருவனைப் பெற்றெடுத்

தாள். அவளுக்கு அமிர்தசேசனென்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந் நற்செய்தியை தங்களுக்கறிவிக்கும் பொருட்டு எண்ணெயுஞ் சுண்ணமுங்கொண்டு எம்மை யிங்குவர அரசன் கட்டளையிட்டனன்,' என்று கூறினர். இச்செய்தியைக்கேட்ட திவிட்டன் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தான். தூதர்கட்கு ஆடை அணிகலன்கள் முதலியன அளித்துச் சிறப்புச்செய்து செல்ல விடுத்தான்.

## மக்களுக்கு மணம்

திவிட்டன் மகன் விசயன் வளர்ந்து, கல்விகற்றற்குரிய ஐந்தாம் ஆண்டை அடைந்தனன். நல்லாசிரியர்பால் நற்றினம் ஒன்றிலே மிகு சிறப்புடன் கல்விப்பயிற்சியும் தொடங்கிவைக்கப்பெற்றது. அவன் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் நாளிலே, திவிட்ட மன்னனுக்கு மகள் ஒருத்தி பிறந்தாள். அவளுக்குச் சோதிமாலையென்று பெயரிட்டு அருமை பெருமையோடு வளர்க்கலாயினர். இம்மங்கலச் செய்தியும் விஞ்சையருலகிற்கு அறிவிக்கப் பட்டது. திருமகளோ காமவல்லியோ என்று போற்றத் தக்க பேரழகு வாய்ந்த அப்பெண்மணியும், எல்லாக் கலைகளையும் இனிதுணர்ந்தாள். அத்தகைய சோதிமாலை, ஒரு நாள் தன் தோழியர்களுடன் பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் மங்கைப்பருவம் அடைந்து விளங்கினாள். அங்கடைந்த திவிட்டன், தன்மகளைச் சீராட்டிப் பாராட்டினான். பிறகு தன் மனைவி சுயம்பிரபையோடு மகளுடைய திருமணத்தைப்பற்றிப் பேசினான். தானே மணாளனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சுயம்வரம் நாட்டுதலே தக்கதென்று, இருவரும் முடிவு செய்தனர். சுயம்வரநாள் ஏற்படுத்தி அதனைப் பலநாட்டு மன்னர்களுக்குந் தூதர்மூலந் தெரியப்படுத்தினர். நகரமெங்கும் முரசறையப்பட்டது. சுரமைநாடு முழுவதும் தேவருலகம்போலத் திகழ்ந்தது; சுயம்வரத்திற் பற்பல நாட்டு மன்னரும் வந்து சேர்ந்தனர். போதனமாநகரில் இடம் போதாதாயிற்று. திவிட்டனின் மைத்துனனும் சுவலனசடியரசன் மைந்தனுமாகிய அருக்ககீர்த்தி தன்

மனைவி சோதிமாலையுடனும், மகன் அமிர்தசேனனுடனும், மகள் சுதாரையுடனும் போதனமா நகரத்தை யடைந்தான். திவிட்டன் அவர்களெல்லோருக்கும் செய்யவேண்டிய வழி பாடுகளையெல்லாம் குறைவறப் புரிந்தான். சுயம்வர தினம் வந்தது. பலவகை இன்னியங்கள் கடல்போலொலித்தன. சுயம்வரத்திற்கு வந்த அரசர் முதலியோர் சுயம்வர மண்ட பத்தை யடைந்து, தத்தமக்குரிய இருக்கைகளில் இருந் தனர். இக்குவாகு குலத்தோனாகிய அயோத்தி மன்னனும், குருகுலத்தோனாகிய அத்தினபுரி அரசனும், காசியரச னும், பாண்டியனும், மற்றும் பல அரசர்களும் எள்விழ இடமின்றி நிறைந்திருந்தனர். விஞ்சையருலக இளவல் களும் வந்திருந்தனர்.

திவிட்டமன்னன் கட்டளைப்படி, தோழியர் சோதி மாலைக்கு மணவணி யணிந்து, சுயம்வர மண்டபத்திற்குக் கொண்டுவந்தனர். சோதிமாலை நடந்துசெல்லும் வழி முழுவதும் மகரந்தப்பொடி தூவப்பெற்றிருந்தது. சோதி மாலை அன்னம்போல் நடந்து அவையிற் புகுந்தாள். அரசர்கள் அனைவரும் அவளுடைய பேரழகைக் கண்டு வியந்தனர். அவளுடைய கைம்மாலையைப் பெறுபவனே பெருநலமடைவான்; அத்தகைய நல்வினையாளன் யாவனோ என்று அனைவரும் பெருங்கலக்க முற்றிருந்தனர். சோதி மாலையின் உயிர்த்தோழி வந்திருந்தோர் அனைவரையும் பிரம்பினாற் சுட்டி அவர்களெல்லோரும் எவ்வெந் நாட்டின ரென்பதை விளக்கமாக வுரைத்தாள்.

'இதோ ஒன்பதுவகை மணிமயமாய்ச் செய்யப்பட் டுள்ள அரியணையில் மலைபோன்ற தோள்களோடு விளங்கு பவன் தனக்கிணையில்லாத இக்குவாகு குலத்தரசன். இவன் அறவாழி யந்தணனாகிய அருகக்கடவுளின் அடிகளை மறவாதவனாக மணிமுடி புனைந்து அரசாண்டு வருபவன். இவனுக்கு நிகராக வலிமையையுடைய அரசர் எவருமிலர். அவனுக்குப் பக்கத்தில் இருப்பவன் அழகிய தேரினைக் கடலின்மேலுஞ் செலுத்திப் பகைவரைவென்று, அளவற்ற செல்வத்தினையும் மணியினையும் கப்பமாகப் பெற்றுவந்த

வன்; பரதராசனுடைய வழித்தோன்றல்; இவன் அருளால் நிலமடந்தை இன்பத்தை யடைந்துள்ளாள். இவனது குணநலமும், அழகுநலமும் அளவிட்டுரைக்க முடியாதன. இவனுக்கு இடப்பாகத்தில் இருப்பவன் குருகுல அரசன்; அருகக்கடவுளின் திருவருளால் இவன் நிலவுலகம் உய்யு மாறு தன்னுடைய ஆழியையுருட்டி அரசர்கள் அனைவரை யும் வெற்றிகொண்டவீரன்; தேவர்கள் ஒருங்குகூடி ஏழு முகில்களையும் அனுப்பிப் பெருமழை பொழியச்செய்த காலத்திலும் அம்புக்கூடம் கட்டி அம்மழையினின்றும் நாட்டைக் காப்பாற்றியவன்; இவன் பெருமையை எடுத்து இயம்பவல்லவர் எவருமிலர். இவன் பக்கத்தில் வெண் கொற்றக்குடை நிழற்ற வெண்கவரிவீச வீற்றிருப்பவன் வடமலைமே லரசாண்டு பெருந் தவம்புரிந்த சுயம்புவின் வழித்தோன்றல்; தேவரும் பாராட்டும் அழகுடையான். இவன் மருங்கே யிருப்பவன் இவ்வுலகை ஒரு குடைக் கீழாண்ட உக்கிரசேன அரசன் வழியில் பிறந்தவன். இவ னுக்குப் பக்கத்தே யிருப்பவன் நாதகுல விளக்காய்வந்த குண்டலபுரத்தரசன். இவன் அண்மையிலிருப்பவன் அரி குலத்தில் தோன்றிய சூரியபுரத்தரசன்; இவன் அரசர் களுக்கு அரிமாப்போன்றவன்; இவனை மாலை சூட்டாதார் நல்வினை செய்யாதவரே. இவனுக்குப் பக்கத்திலிருப்பவன் வளப்பம் பொருந்திய நாடும், சிறப்புப்பொருந்திய செல்வ மும் படைத்த மதுரை மன்னன்; சந்தன மரங்களும், பிற மரங்களும் நிறையப்பெற்ற பொதியமலை இவனுடைய நாட் டில்தானிருக்கிறது. இவன் ஏமாங்கதநாடன். இவன் கலிங்க நாடன். இவன் வங்கநாடன். இவன் அங்கநாடன். இவன் மகதநாடன். இவன் அவந்திநாடன். இவன் கோசலத் தான்,' என்று, மண்ணுலக மன்னர்களை அறிவித்துப், பின்னர் விஞ்சைய அரசர்களைக் கூறிவந்தனள். அருக்க கீர்த்தியின் மைந்தன் அமிர்தசேனனைச் சுட்டிக்காட்டி, அவனை விளக்கிக்கூறு முன்னரே, சோதிமாலை அவன் அழகுவலையிற் சிக்குண்டாள். தனது கையிலிருந்த மாலையை அவன் கழுத்திலணிந்து நாணத்தோடு ·தலை வணங்கிநின்றாள்.

திவிட்டன் தன்னுடைய மகள், தன்னுடைய மைத்துனன் மகனுக்கு மாலை சூட்டியதை யறிந்து மகிழ்ந்தான். அவர்களைக் கங்கை முதலிய நல்லாறுகளின் நீரால் முழுக் காட்டினான். மங்கல முரசங்கள் முழங்க, அந்தணர் திருமணவேள்வி ஆற்ற இருவருக்குந் திருமணம் இனிது நடைபெற்றது. அனைவரும் திருமணத்தை இனிதுகண்டு மகிழ்ந்தனர். திருமணச்சடங்குகளெல்லாம் முற்றிய பின்னர் மணமக்களிருவரும் அரண்மனையை அடைந்தனர்.

திருமணம் முடிந்தவுடன் விஞ்சையரசன் அருக்ககீர்த்தி, தன் திருமகள் சுதாரைநாமசுந்தரிக்குச் சுயம்வரமென்று முரசறைவித்தான். அரசர்களனைவரும் மீண்டும் சுயம்வர மண்டபத்தை யடைந்தனர். நல்லவேளையில் அருக்ககீர்த்தி தன்மகளை ஆடையணிகலன்களால் அழகு படுத்திச் சுயம்வர மண்டபத்திற்கு அழைத்துவரச் செய்தனன். தோழிகள் அவளுக்கு வந்திருந்தோர் அனைவரையும் விளக்கமாகத் தெரியப்படுத்தி வந்தனள். அம்மங்கை திவிட்டன் மகன் விசயனுக்கு மாலைசூட்டினள். பின்னர் அவர்கட்கும் திருமணம் முறைப்படி இனிது நடைபெற்றது. யாவரும் மிகுந்த இன்பத்தை யடைந்தனர். விசயனும் அவன் மனைவி சுதாரையும் போதனமாநகரில் இனிது வாழ்ந்தனர். சோதிமாலையும் அமிர்ததேசனும் இரதநூபுரநகரை யடைந்து, இனிது வாழ்ந்திருந்தனர். திவிட்டன் தனியரசனாய்ச் செங்கோல் செலுத்தி உலகு புரந்தான்.

## கக. அறவுரை கேட்டலும் துறவறமும்

திவிட்டன் பேரரசனைச் செங்கோல் செலுத்திக் கொண்டிருக்கும் நாளையில், அவனுடைய மகன் விசயன் இளவரசாக இருந்தான். மற்றைய நாட்டரசர்கள் இவர்களுடைய குறிப்பின்வழி ஒழுகி நின்றனர். எல்லா வகையாலுந் தான் சிறந்து விளங்குதலை யெண்ணிப் பயாபதியரசன் மிகுந்த களிப்படைந்திருந்தான். திவிட்டனுடைய மகனும் மகளும், ஒருநாள் பயாபதியரசன் பக்கஞ் சென்றனர். அரசன் அவர்களைப் பாராட்டிச் சீராட்டிச் சிறப்புச்செய்து, அவர்களுடன் களித்திருந்தான். 'உலகத்திலுள்ள அரசர்கள் பலருள்ளும் தான் மேம்பட்டு விளங்குவதும், தனக்குத் திருமாலின் கூறாகிய திவிட்டன் மகனைத் தோன்றியதும், விஞ்சையரசன் தன்னுடைய மகளைத் தானே வலிதிற் கொணர்ந்து, திருமணஞ் செய்து கொடுத்ததும், அவனுடைய உள்ளத்திலே மிகுந்த மகிழ்ச்சியை விளைத்தன. இவைகளெல்லாம் என்னுடைய முற்றவப் பயனாலன்றோ இவ்வாறு நிகழ்ந்தன. இப்பொழுதும் நான் தவமியற்றினால் இவைகளைவிட இன்னும் மேலான நிலைமையை அடைந்து இன்புறலாம். இவ்வுலகத்தை இதற்குமுன் ஆண்டிருந்த அரசர்களனைவரும் இறந்தொழிந்தார்களே யல்லாமல், நிலையாக நின்று நீடு வாழ்ந்தவர்கள் யார்? நாம் மிகுந்த அவாவுடன் வளர்க்கும் இவ்வுடல், மிகுந்த இழிவினை யுடையதாகும்; நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலானவைகளுக்கு இடமாகும்; அழகிய இளந்தளிர் இரண்டு நாளில் இலையாய்ச் சருகாகி உதிர்ந்து அழிதலைப்போன்றதே இவ்வுடலும். நறுமண மாலைகள் சூட்டி, நறுமணப் பொருள்கள் அப்பி, மிகவும் ஒப்பனை செய்யப்பெறும் இவ்வுடல், ஒரு சிறிய முள்ளாற் கிழிப்புண்ட அளவில் உள்ளிருக்கும் அழுக்குகள் வெளிப்பட்டொழுகும்; இவ்வுடலை நாம் கொண்டாடி மகிழ்தல் நகைப்பிற்குப் பெரிதும் இடமாகும்,' என்று பலவாறு எண்ணமிட்டான். 'நிலையில்

லாதவற்றைக் கொண்டே நிலையுள்ள அறங்களைச் செய்க” வென்று, மறைகள் அறைகின்றமையால், நாமிந்த உடலுள்ளபொழுதே இம்மை மறுமையில் நன்மையை அளிக்கும் அறத்தினைச் செய்யவேண்டும். காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ளாதவன், அறிவில்லாதவனிலும் அறிவில்லாதவனாவான். ஆகவே, உண்மையறிவைப் பெறவேண்டுவது இன்றியமையாததாகும் என்று, முடிவு செய்தான். தன்னுடைய அமைச்சர்களை யழைத்து அமைச்சர்கள் அவையைக் கூட்டினான். அமைச்சர்களைப் பார்த்து, ‘அமைச்சர்காள்! பகைவராற் கொள்ள முடியாததாயும் கள்ளரால் கைப்பற்ற இயலாததுமாகிய, நிலைபெற்ற செல்வம் ஒருவருக்குக் கிடைக்குமாயின் அதனை எவ்வாறு காப்பாற்றலாம்? அதற்கு நேரும் இடையூறுகள் யாவை?’ என்று கேட்டான். அதற்கு அமைச்சர்கள், “நல்லியல்புடைய ஒருவன் நன்முயற்சியால் தேடிய செல்வத்தினை நல்வினையுடையனாயின் இனிது நுகரலாம். அதற்கிடையூறாக வருவது கூற்றமேயாகும்,” என்று சாற்றினர். ‘அஃதெவ்வாறு?’ என்று அரசன் கேட்க. ‘வாணாள் முடிந்தவிடத்துக் கூற்றுவன் வந்து உயிரினைக் கவருவான்’ என்றனர். ‘எவ்வழியினால் அக்கூற்றுவனை வெல்லலாம்’ என்று, அரசன் கேட்க, ‘அவ்வழியினை மட்டும் நாங்கள் அறியோம்’ என்றனர் அமைச்சர். பயாபதி அரசன் அமைச்சர்களைப் பார்த்து, ‘அமைச்சர்காள்! நம்முடைய செல்வமெல்லாம் காலன் கையிலுள்ளது. மனிதன் உலகத்தின்கண் வாழும் வாழ்க்கை, ஒரு மான்கன்று தன்மேல் ஒரு கொடிய வேங்கை பாய்வதற்குத் தாவிக்கொண்டிருக்கும்போது இளம்புல்லை ஆராய்ந்து மேயும் தன்மையையே ஒக்கும்’ என்றான். அமைச்சர்கள், ‘தாங்கள் கூறுவதுண்மையே, நாமெல்லோரும் யானைவாயிலகப்பட்ட கவளம்போலக் கூற்றுவன் வாயில் அகப்பட்டு விழிக்கின்றோம்’ என்று கூறினர். அரசன், அக்கூற்றுவன் வாயிலிருந்து தப்புமாறு வழி கூறத்தக்கோர் யாவர்?’ என்று வினவினான். அதற்கு அமைச்சர்கள், உலகப் பற்றைத் துறந்து அருகக்கடவுளின் திருவடிப்,

போதினை எக்காலமும் உள்ளத்திற் கொண்ட முனிவரே அதற்குத் தகுதியுடையவர்கள்; இறைவன் அடியை எண்ணும் அறிவுடையோரினும் பெருமை யுடையோர் உலகில் எவருமிலர்; ஆதலின் அருகக்கடவுளின் திருவடிகளை அடைக்கலம் புகுதலினும் உயிருக்கு உறுதி பயக்கும் செயல் வேறொன்றும் இல்லை,' என்று கூறி முடித்தனர்.

அமைச்சர்கள் கூறியதைக்கேட்ட அரசன் உள்ளங் களித்தான். 'மலர்மிசையேகிய மாபெருங் கடவுளுக்கு இன்று நல்விழா'வென்று நகரெங்கும் முரசறையப்பணித்தான். நகரமக்கள் நகரினை நன்கு அழகுபெறப் புனைந்தனர். மணிமாடங்களின் முடியில் அகில்புகை தவழுந்தோற்றம், மேருமலையின் முடியில் இளமேகம் தவழ்தலைப் போல இலங்கியது. பயாபதிமன்னன் நீர்படிந்து தூய்மைமிக்குடையனாய், அருகன் கோவிலுக்குச் செல்லப் புறப்பட்டான். அப்போது அந்தணர் பலர் வெள்ளாடையுடுத்தி, வெண்மாலைசூடி, வெண்சாந்து பூசி, வெள்ளணியணிந்து வெண்மருப்பினையுடைய வேழங்களின்மீதிருந்து மறையினைப்பாடி இறைவனைப் போற்றிச்சென்றனர். அரசர்கள் பலர் பலவகை அணிமணிகளுடன், யானைமீது அரசனைப்பின்தொடர்ந்து சென்றனர். மற்றையோருந் தத்தமக்கியன்றவாறு புறப்பட்டனர். அரசன் பட்டத்து யானையின் மீதேறி அருகன் சினகரத்தைச் சென்றணைந்தான்; அருகனை வணங்கி வழிபட்டான்; பலவகைப் பாக்களால் பாடிப்போற்றினான்; கோயிலை வலம்வந்தான்; கடவுளின் வழிபாட்டுப் பொருள்களின் சேடத்தைப் பெற்றுக் களிப்படைந்தான். பக்கத்திலிருந்த ஒரு மண்டபத்தில் இறைவழிபாட்டொளியுடன் அமர்ந்திருந்த ஒரு முனிவரைக்கண்டு வணங்கினான்; அவருடைய அடிமலர்களைத் தன் முடிமீது சூடினான்; 'பெரியோய்! அடியேன் உய்யுமாறு பிறவிப்பிணியைப் போக்கும் வழியை அருள் செய்யவேண்டு'மென்று வேண்டிக்கொண்டான். அம்முனிவரும் பல நல்லுரைகளைக் கூறலானார்.

## முனிவர் அருளுரை

'அரச! உலகில்வாழும் உயிர்த்தொகைகள் நரககதி, விலங்குகதி, மனிதகதி, தேவகதி என நால்வகைப்படும். நரககதி தீவினை செய்தோர் செல்லும் உலகமாம். நரகம் எழுவகைப்படும். ஒவ்வொன்றும் ஏழேழு பிரிவுகளை யுடைய தாய் நாற்பத்தொன்பதாக விரிந்து நிற்கும் சிலர் எண்பத்துநான்கு பிரிவினையுடையனவென்றுங் கூறுவர். அவை இருள்முதலாகக் கும்பியீருக வாயினால் சொல்லவும், உள்ளத்தால் எண்ணவும்,மிகவெறுப்பை விளைவிப்பனவாம். அந்நரகங்களையடைந்தோர் அடையுந்துன்பங்களை அளவிட்டுரைக்க முடியாது. நிலவுலகில்செய்த தீச்செயல்களுக்குத் தண்டனையாகப் பற்பலவகையான துன்பங்களை அவர்கள் அநுபவிப்பார்கள். எமகிங்கரர்கள் கொதிக்கும் நெய் நிறைந்துள்ள செப்புக் கடாரத்திற்போட்டுச் சிலரைப் பொரிப்பர்; சிலரைப் பழுக்கக்காய்ந்த இருப்புப் பாவையைத் தழுவுமாறு வற்புறுத்துவர்; சிலரை இருப்புத் தடிகளால் மூளைசிதற அடிப்பார்கள்; சிலருடைய வாயில் தாமிரத்தை உருக்கி ஊற்றுவார்கள்; சிலர் நாவினைப் பிடுங்குவார்கள்; சிலருடைய கண்களைத் தோண்டுவார்கள்; சிலருடைய உடல்களைச் செக்கிலிட்டு அரைப்பார்கள்; சிலருடைய தோலையுரித்துவிட்டு நெருப்பில் வாட்டுவார்கள்; சிலருடைய மார்பைக் கோடாரிகளாற் பிளப்பார்கள்; சிலரைக் கழுமரத்தி லேற்றுவார்கள்; தண்ணீர் வேட்கையால் கதறுவோரை நச்சுப்பொய்கை களில் நீருண்ணச் செய்வார்கள்; அதனால் அவர்களுடைய நாவானது அழுகி வருந்துவார்கள். கீழ்நரகங்களில் மேல் நரகங்களைவிடத் துன்பம் மிகுதியாக விருக்கும். தீவினை புரிந்தோர் இந்நரகங்களில் கிடக்கவேண்டிய காலஅளவும் உண்டு. இந்நரகங்களையெல்லாம் அநுபவிப்பவர்கள் பிறர் மனை விரும்பினோரும், அழுக்காறுடையோரும், உயிர்களைக் கொலைசெய்தோரும், தீயவழிகளாற் பொருளீட்டியவரும், அறத்தை மறந்தோரும், உயிர்க்கொலையால்வந்த ஊனை யுண்டோரும், இன்னும் இத்தகைய தீவினைசெய்தோர்களு

மாவர். இவர்கள் பலகாலம் நரகத்துன்பத்தை யனுபவித்த பின்னர், மீண்டும் நிலவுலகிற் பிறந்து முன்வினைத் தொடர்பால் மீண்டுந் தீயகாரியங்களைச்செய்து திரும்பவும் நரகிற்கு ஆளாவர்.

ஓரறிவினை யுடைய உயிர் முதல், ஐயறிவினை யுடைய உயிர்ஈறாக விலங்குகதியின் பாற்படும். அவை ஐவகைப்படும். ஈரறிவுமுதல் ஐயறிவு இறுதியான நான்கு உயிர்களும், தாம்தாம் முற்பிறப்பிற்செய்த தீவினையால் விலங்காய்ப் பிறந்து பலவகையான துன்பங்களை நுகர்ந்து அழிந்தொழியும். கன்னியர் விருப்பையும், கடவுளின் தன்மையையும், நோயின் கொடுமையையும், விலங்குகளின் துன்பத்தையும் முனிவர்களையன்றி மற்றையோர் அறியார். தவத்தினர்போலக் கோலந்தாங்கி உலகத்தை வஞ்சித்துத் திரிபவர்களும், பொன்செய்து தருவதாகப் பொருள்பறிப்போரும், உயிர்களுக்குண்டான துன்பங்களை யெண்ணாதவர்களும், நட்புப்பூண்டு பிறகு தீமை செய்தவர்களும், கடவுள் இல்லை, ஆன்மா இல்லை, நன்மை தீமையில்லை பிறப்பு இறப்பு இல்லை யென்று, வீண்போர் புரிவோரும் விலங்குகதியிற் பிறந்து வருந்துவர்.

மக்கட்கதியை ஒரே கதியாகக் கொள்ளலாம். அம்மக்களுள்ளே சேகர், மிலேச்சர், மனிதர், திப்பியர், போகர் என்று பல வேறுபாடுகளுண்டு. சேகரும் மிலேச்சரும் பிறப்பாலும் உருவத்தாலும் மனிதர்களைப் போன்றவர்களே யாயினும், அறிவு முதலியவற்றால் விலங்கினங்களைப் போன்றவர்களாவர். நடுவுநிலையில்லாமல் உள்ளம்போன போக்கினராய்ப் பொறிவழி யொழுகுபவரும், ஊனுண்டு கொடுந்தொழிலைப் புரிவோரும் விலங்கின்பாற் படுவர். இவர்களையல்லாமல், நற்குலத்தில் பிறந்துள்ளவர்களாயினும், தக்கவின்ன தகாதனவின்ன என்று ஆராயும் பகுத்தறிவில்லாதவரும் மக்கட்பதராவர். முற்றவத்தால் நற்குலத்தில் பிறந்தும், ஊமை, செவிடு, முடம், குருடு, அலி முதலிய குறையுறப்புடன் பிறப்பினும் அஃதும் இழிவாகும். நோய் முதலியன இல்லாமல் நல்லொழுக்கம்

உடையவராய் உயர்ந்துள்ள மனிதர்களே, உலகில் சிறந்துள்ளவர்களாவர். இத்தகைய மனிதர் அனுபவிக்கும் இன்பம் அற்ப இன்பம் என்று எண்ணப்படவேண்டும். இவ்வுலக இன்பம் எத்தகையதெனின், ஒருவன் பெருங்காடொன்றில் வழிதப்பி அலைந்து திரிந்தான். அவனைப் புலியொன்று துரத்தியது. அவன் அப்புலிக்கு மரமொன்றின் மீது ஏறித் தப்பினான். அம்மரத்தின் மேலேயே இராப்பொழுதைப் போக்கவிரும்பி ஒருகிளையில் தூங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது கைதவறிக் கீழேவிழுந்தான். விழும்பொழுது அங்குத்தொங்கிய ஒருகொடியைப் பிடித்துக்கொண்டு கீழே இழிந்தான். இழியுமிடம் ஒருபெரும் பாழுங்கிணறாக இருந்தது. கிணற்றின் அடியில் ஐந்து தலைப் பாம்பொன்று இருந்தது. அது சீறிக்கொண்டு அவனைக் கடிக்க வந்தது. மேலே வரப்பார்த்தான். மதயானையொன்று சீறிக்கொண்டு அவனை மிதித்துக் கொல்லக் காத்து நின்றது. ஆகவே அவன் கீழே போக முடியாமலும் மேலேவர முடியாமலுந் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுதிரண்டு எலிகள் அவன் தொங்கிய கொடியைப் பிடித்துக் கடித்தன. கொடியும் அறுந்துவிடும்போல் இருந்தது. அத்தகைய வேளையில் மரத்தின் கிளையொன்றில் கட்டியிருந்த தேன்கூட்டிலிருநது சில தேன் துளிகள் தற்செயலாக அவனுடைய வாயில் விழுந்தன. அவன் அதனையுண்டு பெரிதும் இன்பம் அடைந்தான். அத்தகையதேயாகும் அற்பமான உலகவின்பம். எவ்வளவோ துன்பங்கள் கணக்கின்றி ஏற்பட்டுக்கொண்டிருக்கும்போது, அவைகளுக்கிடையே அனுபவிக்கப்படும் அற்பமான இன்பத்தை மேற்சொன்ன தேன் இன்பத்திற்குத்தான் நிகராக ஒப்பிடலாம். நற்குணத்தை மேற்கொண்டொழுகித் தானம் தவம் கடவுள் வழிபாடு முதலியனவுடையவராய், இந்நிலவுலகில் வாழ்ந்தவர் பின்னர்த் தேவருலகத்தை யடைந்து, அளவற்ற இன்பம் நுகர்வர். ஈவோரும் ஏற்போரும் முதல் இடை கடை என மூவகைப்படுவர். பிறர்க்கு நன்மை செய்தல், அடக்கம், உறவினரையும் மற்றவர்களையும் அன்புடன் பாதுகாத்தல், உண்மை

நெறி நிற்றல் முதலியன ஏற்போருக்குள்ள இயல்புகளாம். காலத்தில் ஈதல்; கண்ணோட்டம் உடையராதல்; ஈதலில் அவா; இரவலரிடத்தில் அன்பு; பொருளினிடத்தில் பற்றின்மை; ஏற்போரின் வறுமையறிந்தீதல் முதலிய ஈவோர்க்குள்ள இயல்புகளாம். இரவலரைக் கண்ட போது கன்றைக்கண்ட ஆவைப்போல உள்ளமுருகி அளித்துவப்போர் நிலவுலக அரசராய் நீடுவாழ்வர். தீயோருக்களிக்கும் பொருள், இழப்போடு தீவினையையும் உண்டாக்கும். விருப்பு வெறுப்பின்றி மெய்யுணர்வோ டிருப்பதே நல்லறிவாம். மெய்யுணர் வென்பது இறைவன் நூலையுணர்ந்து நுண்ணுணர்வோடு விளங்குவதே.

போகமனிதர்கள் எனப்படுவோர் உன்னுடைய மைந்தர்களான விசயன் திவிட்டன் முதலிய பதினெண்ம ராவர். உன்குல முன்னோனாகிய பரதனும் நீயும் போக மனிதர்களுட் சேர்ந்தவர்களே. அருகனும் வீடடைந்த முனிவர்களும் யோகிகளுக்குத் தலைவராவர். தகுதியான தான தருமங்களைச் செய்து இன்பநிலத்தை யெய்தியவர் கள் அளவற்ற இன்பம் அனுபவிப்பார்கள். குறித்தகாலம் முடிந்தவுடன் உயர்கதியை அவர்கள் அடைவார்களே யல்லாமல் தாழ்கதியை அடைய மாட்டார்கள்.

நல்வினை மிகுதியால் உயிர் பேரின்பம் அடையும். தீவினை மிகுதியால் கடுந்துன்பம் அடையும். தேவர்கள், பவணர், வியந்தரர், சோதிடர், கற்பகர் என்று, நால்வகை யாகப் பிரிக்கப் பெறுவர். பவணர் ஆயிரம் அணிமணிப் படமுடியையுடையவர். வியந்தரர். கின்னரர், கந்தருவர் முதலியோராவர். இவர்கள் இந்நிலவுலகம் எங்குமியங்கு வார்கள். சோதிடர், திங்கள், ஞாயிறு, ஒன்பதுவகைக் கோள்கள், விண் மீன்கள் ஆகியனவாம். இவைகள் மேருவை வலஞ்செய்யும் வேலையை மேற்கொண்டிருப்பன வாம். கற்பகர், கற்பகலோகவாசிகளாவர். இவர்கள் இமையாதநாட்டத்தையும், வாடாதமாலையையும், கெடாத துகில்களையும் உடையர். துன்பம் சிறிதுமின்றி இன்பமே நுகரும் இயல்பினையுடையவர். இவர்களுடைய உலகம்

இராப்பகலின்றி எக்காலத்தும் பேரொளியுடையதாய்த் திகழும். தேவர்கள் அணிமாமுதலிய எண்வகைச் சித்திகளிலும் வல்லவராவர். அரச! உனக்கு நான்கு கதிகளையும், அக் கதியிலுள்ளாருடைய இயல்பினையும் ஒருவாறு எடுத்துக்கூறினேன். இவற்றை நன்கு ஆராய்ந்துணர்வாயாக,' என்று அம்முனிவர் அரசனுக்கு விளக்கமாக வுரைத்தார். முனிவரின் அறவுரையைக் கேட்ட அரசன், 'இனி நான் அரைக்கணமுந் தாமதியாமல் வீடுபேற்றை யடைய விரைந்து தவம் செய்வேன்,' என்று கூறி எழுந்தான்.

## கஉ. சூளாமணியாதலும் வீடுபேறடைதலும்

அமைச்சர்கள், அரசன் தவஞ்செய்வதற்குப் போவ தாகக் கூறியதைக் கேட்டவுடன் முன்னர்ச் சிறிது வருந்தி ஞர்களாயினும், அஃது உயிர்க்கு உறுதிபயக்குங் காரிய மாகுமென்பதை யுணர்ந்து ஒருவாறு தெளிந்தார்கள். அவர்கள் அரசனைப் பார்த்து, 'நீண்டகாலமாக உயிரைப் பிணித்திருக்கும் இப் பிறவிப்பிணிக்கு அஞ்சி அதனை விட்டு, அழிவில்லாததும், ஒப்புயர்வற்றதும், எக் காலத் தும் ஒருபடித்தாயுள்ளதும், வெறுப்புண்டாகாததும் ஆக வுள்ள வீட்டின்பத்தையடையவெண்ணித் தவஞ்செய்யத் துணிந்தவர்கள், அவாக்கடலில் அமிழ்த்தும் சுற்றத் தினரைச் சிறிதும் விரும்பார்கள். வீடுபேற்றையடைய விரும்பியவர்கள், அரச இன்பத்தை ஒருபொருளாக மதிக்க மாட்டார்கள். ஆகவே, அரசர் பெரும! இனி ஒரு கணமுந் தாங்கள் வீணுக்காமல், அரசுரிமைக்குரிய அணி முடியை அகற்றி அருந்தவம்புரியத் தொடங்குதலே அருஞ்செயலாகு,'மென் றறைந்தனர்.

### மக்களுக்கு அறிவுரை கூறல்

பயாபதியரசன் தன்னுடைய மைந்தர்களை யழைத் துப், "பொருள் இல்லாதவர்கட்கு இவ்வுலக இன்பம் இல்லை. அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலக இன்பம் இல்லை. கல்வி யறிவற்றவர்க ளிடத்திலே நுண்ணுணர்வு இல்லாததுபோல, நற்குணமும் நல்லறிவும் இல்லாதவர்க ளிடத்திலே திருமகள் சேராள். திருமகள் தன்னோடு பல காலம் பழகியவர்களையும் வெறுத்துக், காலம் வாய்க்கும்போது மற்றவர்களைச் சேர்வாள். ஒருவரிடத்திலும் நிலைபெற்றிராள். பொருள் உள்ளவரையிலும் அப்பொருளுக்காகக் கலந்திருந்து, பொருள் நீங்கியவுடன் தானும் நீங்கும் விலைமகளைப் போன்ற வள். நல்வினை நீங்கியவுடன் திருமகளும் நீங்கி விடுவாள். அவள் யாரைச் சேருகின்றாளோ அவர்களிடத்திலுள்ள நல் லியல்புகளை யெல்லாம் அகற்றித் தீய இயல்புகளை யெல்லாம் உண்டாக்குவாள். நற்றவர் கற்றவர் உற்றவர் என்று

சிறிதும் எண்ணுள். விலைமாதை விரும்பியவன் கைப் பொருளை யிழந்து வருந்துவதைப்போல, அலைமாதை விரும்பினேனும் . அருங்குணங்களை யெல்லாம் ஒருங்கேயிழந்து அல்லலடைவான். ஆதலின், அத்திரு மகளிடத்தில் நீங்கள் சிறிதும் அன்புவையா தொழியுங் கள். அவளை அயலாளென்றே எப்பொழுதும் அறியுங்கள். உங்களிடத்தில் எக்காலும் அன்புடையவர்களாக இருப்பவர்கள் கல்வியறிவிற் சிறந்த நல்லவர்களே. ஆகையால், அவர்க ளிடத்தில் என்றும் அன்பு கொள்ளுங்கள். நிலமடந்தை யும் திருமகளைப்போன்ற இயல்பினளே. அவளை அனுப வித்த அரசர்கள் கடற்கரை மணலினும் பலர். நிலமகள் என்றும் உங்கட்கே உரியவள் என்று எண்ணுதீர்கள். நீங்கள் தாங்கும் நிலச்சுமையை, உங்களுடைய மைந்தர்கள் தாங்கள் தாங்கும் தன்மையை அடைந்தவுடன், சுமையை அவர்களிடத்தி லிறக்கிவிட்டு நீங்கள் உங்கள் உயிர்க்கு உறுதியை உதவும் தவத்தினைச் செய்து வீட்டின்பத்தை மேவுங்கள்.

மைந்தர்காள்! இவ் வரசாட்சியை நான் இனிச் சிறிதும் விரும்பேன். என்றும் ஒரே தன்மையினை யுடையதாய் அழியாததாய் இலங்கும் வீட்டுலக அரசாட் சியையே விரும்பி யடைவேன். இந்நாள்தொட்டு இந் நிலச்சுமை உங்களுடையதே. நீங்கள் என்னுடைய பிரிவிற்காகச் சிறிதும் வருந்தாதீர்கள்," என்று கூறி முடித்தான். மைந்தர்கள் அரசன் கூறியதைக்கேட்டு அவனடி பணிந்தார்கள். 'ஐய! யாங்கள் தங்கட்கு யாது தவறு புரிந்தோம்? எங்களைவிட்டுநீங்க எவ்வாறு துணிந் தீர்கள்?' என்று வருந்தி யுரைத்தனர். அரசன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் எத்தகைய தவறும் புரிந்தீர்களில்லை. யான் என்னுடைய இயற்கையினுல்தான் இந்நிலைமையை மேற்கொண்டேன்," என்றுகூறி அவர்கட்கு அயலான் போல் இருந்தான். பிறகு தன்னுடைய மனைவியரை யழைத்துத் தன்னுடைய உள்ளக்கருத்தைத் யுரைத்து, 'உங்களுடைய எண்ணம் யாது?' என்று வினவினுன்.

தாமுந்தவஞ்செய்ய விரும்புவதாக அவர்கள் ஒரே உள்ளத்தினராக வுரைத்தனர். அமைச்சர்கள் தாமும் தவஞ் செய்வதற்கு முடிவுசெய்தெழுந்தனர். அமைச்சுரிமைத் தொழிலைத் தம் மைந்தர்களிடம் ஒப்படைத்தனர். அரசன் தெய்வநீரில் மூழ்கி அரசக் கோலத்தையகற்றித் துறவுக் கோலத்தை மேற்கொண்டான். அப்பொழுது அவனுணை வழிநின்ற குறுநிலஅரசர் ஆயிரவர், தாமுந் துறவுக் கோலம் பூண்டு தவஞ்செய்தற்குத் துணிந்தனர். விசய திவிட்டர்கள் தம் தந்தையின் பிரிவுக்கு வருந்தினராயினும், தம்மறிவின் உயர்வாலும், உடனிருந்த பெரியோர்கள் தேற்றிய தெளிவுரையாலும் உள்ளந் தெளிந்து வருந்துதல் ஒழிந்து, அரசனை வணங்கி விடைபெற்றனர்.

பயாபதியரசன், முன்னர்க்கூறிய நன்னெறியில் நின்று, ஐம்பொறிகளையும் அடக்கி, உட்பகையைக் கடந்து தவம்புரிந்து வீடு என்னும் பேரின்ப வாழ்வைப் பெறத் தகுதியுடையவனுனன். இவ்வாறு உயர்நிலையடைந்த பயாபதியரசனைத் தேவர்கள்! அடிவணங்கிப் போற்றினர். அரசன் தன்னுடைய பெருமையால் இவ்வுலகிற்கே ஒருபெருஞ் சூளாமணியாக விளங்கினுன்.

களங்காண் வகையுடைந்து
காலர் காமர் கையகல
விளங்காத் திசையின்றி விளங்க
வீரன் மெய்ப்பொருளை
உளங்காண் கேவலப் பேரொளியால்
இம்பர் உலகமெல்லாம்
துளங்காது உயர்ந்து உலகின்முடிக்கு
ஓர் சூளாமணியானுன்.

திவிட்டன் விசயனுடைய உலகைத் தன் ஆணையின் வழிநிறுத்தக் குடிகள் மகிழ்வடையச் செங்கோல் செலுத்தி மனைவிமக்களுடன் இனிது வாழ்ந்திருந்தான்.

சூளாமணி உரைநடை முடிந்தது.